# ஞானச்சுடர்

கார்த்திகை 2020


275ஆவது மலர்





வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



**உள்ளிய தெல்லா முடனெய்தும் உள்ளத்தால்**
**உள்ளான் வெகுளி யெனின்.**

**பொருள் :** ஒருவனுக்குக் கோபம் இல்லையாயின் அவனுக்கு நினைத்தவை எல்லாம் கைகூடும். (309)

**இறந்தா ரிறந்தா ரனையர் சினத்தைத்**
**துறந்தார் துறந்தார் துணை.**

**பொருள் :** கோபம் மிக்கவர் உயிருடையராயினும் செத்தாரோடொப்பர்; கோபத்தை விட்டவர் சாதலை ஒழித்த பெரியவர்களை ஒப்பர். (310)

---

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

## முத்தி நல்குமே

## ஆசான் அருள்



**கலிவிருத்தம்**

ஆசான் அருளால் அகந்தை அழிந்தது
ஆசான் அருளால் அகங்கு ளிர்ந்தது
ஆசான் அருளால் அன்பு வளர்ந்தது
ஆசான் அருளால் ஆசானைக் கண்டிலன். 01

அளந்தேன் அருளால் பூதங்கள் ஐந்தும்
அளந்தேன் அருளால் ஐம்பொறி ஐந்தும்
அளந்தேன் அருளால் ஐம்புலன் ஐந்தும்
அளந்தேன் அருளால் ஆன்மாவை அறிந்தேன். 02

சிவதொண்டு செய்தல் செகத்திற் சரியை
சிவதொண்டு செய்தல் செகத்திற் கிரியை
சிவதொண்டு செய்தல் செகத்தில் யோகம்
சிவதொண்டு செய்தல் சிவஞானம் ஆமே. 03

ஆவதும் இல்லை அழிவதும் இல்லை
போவதும் இல்லைப் புகுவதும் இல்லை
தேவரும் இல்லைத் திசைகளும் இல்லை
யாவரும் இல்லை யார்தான் அறிவார். 04


# ஞானச்சுடர்



வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் பழைய தேர்



# ஞானச்சுடர்

வெளியீடு - 3 சுடர் - 275

2020 கார்த்திகை

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| வெள்ளம் பொழியும் விழிகள் | கே.எஸ். சிவஞானராஜா | 01 – 03 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 04 – 06 |
| சைவக் கல்வியில்... | கு. சோமசுந்தரம் | 07 – 11 |
| திருவிளையாடற் புராண வசனம் | ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் | 12 – 16 |
| நான் வாழ்ந்தால் போதுமா? | வி.ரி. வேலாயுதம் | 17 – 19 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 20 – 21 |
| திருவாசகம் - ஒரு பார்வை | முருகவே பரமநாதன் | 22 – 23 |
| ஆலயங்கள் உளவள ஆற்றுப்... | செல்வி ப. கஸ்தூரி | 24 – 26 |
| கந்தர் அனுபூதி காட்டும்... | செல்வி ச. சரணியா | 27 – 29 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 30 – 31 |
| விஞ்ஞான உச்ச வளர்ச்சி... | பு. கதிரித்தம்பி | 32 – 33 |
| நாம் செல்லும் பாதை | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 34 – 35 |
| வைகுண்ட ஏகாதசி | அ. சுப்பிரமணியம் | 36 – 39 |
| சைவத்தமிழ் போற்றும்... | மூ. சிவலிங்கம் | 40 – 41 |
| சந்நிதியான் ஆச்சிரமத்தில்... | திருமதி த. வசந்தகுமாரி | – 42 |
| முதுமை ஒரு சுமையல்ல | பூ.க. இராசரத்தினம் | 43 – 44 |
| நவராத்திரி மகிமை | திருமதி ந. பரமேஸ்வரி | 45 – 46 |
| ஞானச்சுடர் வாசகர் போட்டி | சந்நிதியான் ஆச்சிரமம் | 47 – 48 |
| கதிர்காம யாத்திரை | செல்வி சி. நிலா | 49 – 52 |


வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

சந்நிதியான் ஆச்சிரம

சைவ கலை பண்பாட்டுப் பேரவை

தொலைபேசி இல: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

திருமூலநாயனார் அருளிய

# ஏங்குறள்

## திருமந்திரப் பாயிரம்

## பாயிரம்

### 01. கடவுள் வாழ்த்து

மண்ணகத் தான்ஒக்கும் வானகத் தான்ஒக்கும்
கண்ணகத் தேநின்று காதலித் தேனே. 31

தேவர் பிரான்நம் பிரான்திசை பத்தையும்
பாவு பிரான்அருட் பாடலு மாமே. 32

பதிபல வாயது பண்டிவ் வுலகம்
மதியிலர் நெஞ்சினுள் வாடுகின் றாரே. 33

சாந்து கமழுங் கவரியின் கந்தம்போல்
போந்தும் இருந்தும் புகழுகின் றேனே. 34

ஆற்றுகி லாவழி யாகும் இறைவனை
மாற்றுவன் அப்படி யாட்டவு மாமே. 35

அப்பனை நந்தியை ஆரா அமுதினை
அப்பரி சீசன் அருள்பெற லாமே. 36

நானும்நின் றேத்துவன் நாள்தொறும் நந்தியை
ஊனில்நின் றாங்கே உயிர்க்கின்ற வாறே. 37

பிதற்றொழி யேன்பெரி யான்அரி யானைப்
பிதற்றொழி யேன்பெரு மைத்தவன் நானே. 38

வாழ்த்தவல் லார்மனத் துள்ளுறு சோதியை
ஆத்தஞ்செய் தீசன் அருள்பெற லாமே. 39

குறைந்தடைந் தீசன் குரைகழல் நாடும்
புறஞ்சடஞ் செய்வான் புகுந்துநின் றானே. 40

-திரு ச. யமுனாநந்தா-

# சுடர் தரும் தகவல்

பலர் தங்களுடைய செயற்பாடுகளை தாம் பணிபுரியும் வேலைத் தளத்திலோ, சமூகத்திலோ மேற்கொள்ளும்போது பலவித பிரச்சனைகளுக்கு, சவால்களுக்கு முகம்கொடுத்து தமது இலக்குகளில் வெற்றி அடைய வேண்டும் என்ற பேரவாவோடு செயற்பட்டுக்கொண்டிருப்பதை நாம் கண்கூடாகக் காண் கின்றோம். இவர்கள் பல தடைகளையும் தாண்டி பல கஷ்டங்கள் மத்தியில் தமது நோக்கினை அடையும்போது அனைத்துப் பிரிவினரிடமிருந்தும் அவர்களுக் குரிய கௌரவம் வழங்கப்படுகிறது. இத்தகைய ஒரு செயற்பாட்டின் மூலம் அவர்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் செயல்கள் யாவும் மேன்மையடைய வழிவகுக்கப்படுகின்றது.

ஆனால் இத்தகைய இயல்பான தன்மைகளுக்கு மாறாக ஒரு குழப்பமான நிலையும் சமூகத்தில் அதிகரித்து வருகின்றது. அதாவது இயல்பாக தனது கடமைகளைச் சிறப்பாகவும் திருப்தியாகவும் செய்வதனால் கிடைக்கும் புகழ் பாராட்டு என்பன கிடைக்க வேண்டும் என்பதற்காகவே கடமைவீரர் போலவும் சமூகத்திற்கு சேவை செய்பவர் போன்றும் நடிக்கின்ற தன்மை அதிகரித்து வருகின்றது. அதுமட்டுமன்றி, இன்னும் சிலர் பதவிகளை வலிந்து பெற முயற்சிப் பதும் அதற்காக வெளிப்படையாகவே குறுக்கு வழிகளைக் கையாளுகின்ற பல சம்பவங்கள் பல இடங்களில் இன்றும் நாம் அறியக் கூடியதாக இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றது.

ஆலயம், வித்தியாலயம், பொது நிறுவனங்கள் போன்ற புனிதமான ஸ்தாபனங்களில் இவ்வாறானவர்கள் செயற்பட முயற்சிக்கும்போது அது சமூக ரீதியான மோசமான பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்பது திண்ணம். ஆகவே இவ்வாறான ஒவ்வாத பண்புள்ளவர்களை நாம் அனுமதிக்கும்போது எமது சமூகம் பிளவுபட வாய்ப்புள்ளது.

பொதுவாக இவ்வகையான புகழ், பெருமை, பதவி அதிகாரம் போன்ற வற்றை விரும்புகின்றவர்களை சமூகம் திருத்துவதென்பது கடினமான விடயம். திருடராய்ப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது என்பதுபோல் இவ்வாறு ஒவ்வாத இயல்புள்ளவர்கள் சமூகத்தின் நலனை உள்வாங்கி செயலாற்றினால் மேன்மையடைவர். அல்லாதுவிடின் அவர்களது வரலாறு மறக்கப்படும் என்பது காலத்தின் கட்டாயம். இதனை நன்கு உணர்வோமாக.

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவகுப்பு

## 21. வீரவாள் வகுப்பு

பூவுளோ னுக்குமுயர் தேவர்கோ னுக்குமெழு
பூவில்யா வர்க்கும்வரு துன்புதீர்த் திடுமே
பூதசே னைக்குளொரு கோடிசூர் யப்பிரபை
போலமா யக்கரிய கங்குனீக் கிடுமே
பூதிபூ சிப்பரமர் தோலைமே லிட்டதொரு
போர்வைபோ னெட்டுறைம ருங்குசேர்த் திடுமே
போரிலே நிர்த்தமிடு வீரமா லஷ்மிமகிழ்
பூசைநே சித்துமலர் தும்பைசாத் திடுமே:,

பாவரு பக்கொடிய சூரனார் பெற்றபல
பாலர்மா ளத்தசைக ளுண்டுதேக் கிடுமே
பானுகோ பப்பகைஞன் மேனிசோ ரக்குருதி
பாயவே வெட்டியிரு துண்டமாக் கிடுமே
பாடுசேர் யுத்தகள மீதிலே சுற்றுநரி
பாறுபேய் துய்த்திடநி ணங்களூட் டிடுமே
பாடியா டிப்பொருத போரிலே பத்திரக
பாலிசூ லப்படையை வென்றுதாக் கிடுமே:,

ஆவலா கத்துதிசெய் பாவலோர் மெய்க்கலிக
ளாமகோ ரக்களைக ளைந்துநீக் கிடுமே
யாருமே யற்றவனென் மீதொரா பத்துறவ
ராமலே சுற்றிலுமி ருந்துகாத் திடுமே
ஆடல்வே ணற்படைக ளாணையா வுக்குமுத
லாணையா வைத்துவலம் வந்துபோற் றிடுமே
ஆலகா லத்தைநிகர் காலசூ லத்தையும
ராதபா சத்தையும ரிந்துபோட் டிடுமே:,

மேவலார் முப்புரமு நீறவே சுட்டவொரு
மேருவாம் விற்பரமர் தந்தபாக் கியவான்
வேடர்மா னுக்குமுயர் தேவயா னைக்குமிசை
வேலர்தா ளைத்தொழுது யர்ந்தவாழ்க் கையினான்
வீறுசேர் மிக்ககண நாதனா ரெட்டுவகை
வீரர்நே யத்தமைய னென்றதோட் டுணைவோன்
மேன்மையாம் லக்ஷரத வீரர்பூ சிக்கவரு
வீரவா குத்தலைவன் வென்றவாட் படையே:,

# கார்த்திகைமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**S. சதாசிவமூர்த்தி**
(கனடா)

**K. கனகசபேசன்**
(கனடா)

**உரிமையாளர்**
(E.S.P. நாகரெட்ணம் அன்கோ, யாழ்ப்பாணம்)

**ச. ஜெயதாசன்**
(கருகம்பனை, காங்கேசந்துறை)

**திருமதி தங்கராசா சரஸ்வதி**
(புலோலி மேற்கு)

**ச. வைத்தியநாதக்குருக்கள்**
(கந்தவனக்கடவை, பொலிகண்டி)

**உரிமையாளர்**
(சிவா பிரதேர்ஸ், யாழ்ப்பாணம்)

**மா. ஞானலிங்கம்**
(ஆசிரியர், அபிராமி மகால், அச்சுவேலி)

**க. தங்கராசா**
(ஜெயகணேசா ஸ்ரோர்ஸ், பருத்தித்துறை)

**சி.வ. முருகையா**
(ஆசிரியர், பரராஜசேகரப்பிள்ளையார் கோயிலடி, இணுவில்)

**து. நாகேந்திரம்**
(நல்லூர்)

**S. மங்களரூபன்**
(கல்வளை வீதி, சண்டிலிப்பாய்)

**சின்னையா ரஞ்சிதமலர்**
(மல்லாகம்)

**த. கணபதிப்பிள்ளை**
(உடுப்பிட்டி)

**கி. பகவத்சிங்கம்**
(இளை. அதிபர், நீர்வேலி)

**ம.க. ஸ்ரீதரன்**
(கரவெட்டி)
**இ. தம்பிரத்தினம்**
(முருகேச பண்டிதனார் வீதி, சுண்ணாகம்)
**திருமதி P. குகதாசன்**
(K.K.S. வீதி, இணுவில்)
**P. நமசிவாய**
(அல்வாய் மத்தி)
**வ. செல்லத்துரை**
(சங்கீத கலாபூஷணம், அச்சுவேலி)
**இ. சிவராசா**
(கரவெட்டி கிழக்கு)
**சி. விஜயகுமாரன்**
(உரும்பராய்)
**தி. ஸ்ரீராகவன்**
(வியாபாரிமூலை, பருத்தித்துறை)
**செல்வநேசன் கஜன்**
(கல்வளை வீதி, சண்டிலிப்பாய்)
**க. பரராஜவிருந்தம்**
(காவில், கரணவாய்)
**சு. தில்லையம்பலவனார்**
(இளை. விவாகப் பதிவாளர், புத்தூர்)
**கந்தசாமி கதிர்காமத்தம்பி**
(மல்லியோடை, வல்வெட்டி)
**K. மகேந்திரன் J.P.**
(நவநீதபதி, இமையாணன்)
**திரு செந்தில்நாதன்**
(கொக்குவில் கிழக்கு)
**R. பத்மா**
(சுண்டுக்குளி)
**கே.எஸ். ஆனந்தன்**
(இணுவில்)
**வைத்திலிங்கம் உதயமலர்**
(கரணவாய் தெற்கு)

**யோகராசா குமார்**
(ஆலடி வீதி, மட்டுவில் கிழக்கு)
**அ. தில்லைநாதன்**
(சிவன்வீதி, ஆவரங்கால்)
**செ. பாலச்சந்திரன்**
(K.K.S. வீதி, யாழ்ப்பாணம்)
**சுபத்திரா விவேகானந்தன்**
(அளகொல்லை, அளவெட்டி)
**த. சந்திரசேகரம்**
(நாகர்கோவில்)
**கனகலிங்கம் மயூரன்**
(பாரதிவீதி, அச்சுவேலி)
**ச. வதனி**
(நீர்வேலி மேற்கு)
**மு. பாலசிங்கம்**
(சுண்ணாகம்)
**நீ. மயில்வாகனம் J.P.**
(வருணன், அச்சுவேலி)
**T.N. இராஜா**
(பொன்கிளர், சங்கானை)
**சோதிரட்ணம் அனுஷியா**
(அரசடி சந்தி, நவாலி)
**செ. உமாபதி**
(பிராமண வீதி, தும்பளை)
**V. சந்தனத்தேவன்**
(தூதாவளை, கரணவாய்)
**ஐயாத்துரை நடராசா**
(சிவசிதம்பரம் வளவு, கரவெட்டி)
**S. செந்தூரன்**
(மாருதி இல்லம், மாறாப்புலம், அல்வாய்)
**திருமதி தயாநிதி சுசிகலா**
(தெல்லிப்பழை)
**செ. சுப்பிரமணியம்**
(யாழ்ப்பாணம்)

A. பிரதாபன்
(சந்திரபுரம், உடுவில்)

வை. இராசேந்திரம்
(இணுவில்)

C.H. புவனேஸ்வரி
(மானிப்பாய்)

திருமதி ஆறுமுகம் உமாதேவி
(பண்ணாகம், சுழிபுரம்)

திருமதி கிருஷ்ணகுமாரி கனகசிங்கம்
(உரும்பராய்)

V.S. மருதலிங்கம்
(அரசடி சந்தி, மானிப்பாய்)

அ. பாலேஸ்வரி
(கதிரிப்பாய், அச்சுவேலி)

செல்வி க. கமலாம்பிகை
(ஆதவன் ஸ்ருடியோ, மீசாலை)

க. திருச்செந்தூர்
(வீரப்பதிராஜன், கரணவாய்)

K. தங்கவேலாயுதம்
(பருத்தித்துறை)

சிவகுரு குகதாசன்
(செல்வமதி, ஆவரங்கால்)

வ. தம்பையா
(கலட்டி வளவு, புலோலி மத்தி)

மோகன் புவனா
(புத்தூர்)

திருமதி செல்வநாயகி ஞானசுந்தரம்
(செங்குந்தா வீதி, கரவெட்டி கிழக்கு)

வைத்திலிங்கம் பிரபாகரன்
(துரைவீதி, கொக்குவில்)

திருமதி பிரதீபன் பிரதீபா
(அச்சுவேலி)

# வெள்ளம் பொழியும் விழிகள்

– திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள்

தொண்டைமானாறிலிருந்து ஞான வெள்ளமானது உலகெங்கும் பாய்கிறது. சும்மாவல்ல ஊற்றெடுத்துப் பாய்கிறது. இதனைப் பார்த்த முருகனது அடியார்களும் கண்களை வெள்ளத்தால் நீராட்டுகிறார்கள். ஆனந்த வெள்ளம் பீறிடுகிறது. விழிகளில் வெள்ளம்! அடேயப்பா! இன மத மொழி பேதமின்றி எவருமே அருள், அன்னம், ஆனந்தம், வரம், வாழ்வு பெறுகின்ற ஒரு அற்புதமான திருப்பதி தொண்டைமானாறு செல்வச்சந்நிதி என்று சொன்னால் அது சாலவும் பொருந்தும். கதிர்காமம், சந்நிதி இரண்டுடன் நல்லூர் மூன்றுமாக மூவின மக்களும் சரிநிகர் சமானமாகும்படியாக பேறளிப்பதனால், ஈழத்துச் செந்தூர் எனப்படும் செல்வச் சந்நிதியின் கடலோரத்திலிருந்து அருள் பொங்கி வெள்ளமாகத் தென்திசைநோக்கிப் பாய்கிறது என்பதும், முருகன் இளைப்பாறுகின்ற திருப்பதியிது என்பதும் ஒரு ஐதீகம். இது மெத்தவும் சரியானதேயாகும்.

மேலும், முருகப்பெருமான் அறுபடை வீடுகளில் இருந்து அலுப்புற்றாரோ அல்லது களைப்புற்றாரோ என்னவோ பெண்ணாம் பெரிய சமுத்திரம் தாண்டி கந்தவனம் வந்து களைப்பாறி செல்வச்சந்நிதி அடைவது வழக்கமாகும். கந்தவனத்தில் தங்கிக் கூடிக்குலாவி சந்நிதிக்கு வள்ளி தெய்வானையோடு கிளம்பியதனால் கந்தவனக்கடவை என்பது காரணம் பெறுகிறது. வள்ளியோடு முருகன் அதீதபட்சம் காட்டுவதாக தெய்வானை ஊடல் கொள்ளும் படலம் சந்நிதியில் சன்னதமாவதால், கதிர்காமம் வரை நீடிக்கிறது. அறுபடை வீடுகளில் தெய்வானையும், கதிர்காமத்தில் வள்ளியும் ஆட்சி புரிகின்ற வகையில் வள்ளியின் மாவிளக்கு தெய்வானையின் ஊடலைத் தணிக்கிறது. அதனாலே முருகன் மகிழ்ந்து இருவரையும் தாங்கியவராய் அணைத்தபடி கதிர்காமத்தில் அடியார்களுக்கு இன்பம் பயக்கின்றார். இந்த இன்பத்தையும், வெள்ளத்தையும் 1975ஆம் ஆண்டு வரை இந்துக்களே முழுவதுமாக அனுபவித்தார்கள். 1977இற்குப் பின்னதாக இப்பொழுது பௌத்தர்களே முழுமையாக வழிபடச் செல்கிறார்கள். நல்லூர், கீரிமலை, முன்னேஸ்வரம், திருக்கோணேஸ்வரம் ஆகிய திருப்பதிகளில் பௌத்தர்களின் பக்தி மெச்சப்படுகிறது.

எது எப்படி இருந்தபோதும் சந்நிதியானின் எளிமையும், கதிர்காமத்தின் எளிமையும் அதி உச்சமேயாகும். உடல் பொருள் ஆவி மனம் புத்தி சித்தம் அகங்காரம் யாவற்றையும் இறக்கி வைத்துவிட்டு எளிமையாக வணங்கவல்ல ஓர் ஆலயமே சந்நிதி. மனிதர்கள் மட்டுமல்ல சக பிராணிகளும் சேர்ந்து வணங்கும்போது முருகன் எம்மை எடைபோட்டு வரமீய்கின்றான். நல்லூரில் எந்தப் பெரிய ஆளும் ஆணவப் போர்வையையும், அதிகாரப் போர்வையையும், பட்டம், பதவி மேதாவி பிரமுக ஆரவாரங்களையும் ஒதுக்கி இறக்கி கழற்றி வைத்தேயாக வேண்டும். எந்த ஒருவருக்கும் விதிவிலக்குப் பார்ப்பதில்லை. இலங்கையில் ஒருவருக்கு மட்டும்தான் எப்படியும் போகலாம் என்று சட்டத்தில் இடமளிக்கப்பட்டுள்ளது. அவரை எந்த சட்டமும் விசாரிக்க முடியாது. தண்டிக்கவும் முடியாது. ஐநாவுக்கும் கொண்டுபோக முடியாது. எம்

*தடம்பார்த்து நடப்பவன் மனிதன். தடம் பதித்து நடப்பவன்தான் மாமனிதன்.*

மண்ணில் இவ்வாறானவர்களுக்காகவாவது நாவலர் பிறந்து வரவேண்டும். வெள்ளம் பொழிந்த விழிகளில் கண்ணீர் பெருகும் அவல நிலை தோன்றியுள்ளது. இராவணன் ஆண்ட பூமியில் இராவண அம்சம் நிறைந்த இராட் சத குணமுள்ளவர்களும் வரமாவது தவிர்க்க முடியாததாகும். அல்லாமலும் நாம் செய்த தவக்குறைவுமாகும்.

ஞானச்சுடராகவும், சந்நிதி முருக வாலாயமாகவும், மொத்தத்தில் முருக வரப் பிரசாதமாகவும் அறம் பெருக்கிடும் ஒரு பாங் கான ஸ்தாபனமாக மிளிர்வது தொண்டை மானாறு சந்நிதியான் ஆச்சிரமம் ஒன்றேயாம். மூவேளையும் இல்லையென்னாது, நாளாந்தம், வாராந்தம், மாதாந்தம், வருடாந்தம் எவ்வெப் போதும், அவ்வப்போதும் இல்லையென்னாது, ஆதார, ஆகார, ஆசார, உணவுகளைப் பசி யாற, தாகம்தீர கொடையாக்குவதென்பது இலகுவான காரியமல்ல. ஒவ்வொரு நாளும் அடியவர்கள், அன்பர்கள், தூர இடங்களில் இருந்து வருகைதரும் முருக பக்தர்கள், வகைதொகையின்றி வருகின்ற பாடசாலை மாணவர்கள், உயர்கல்வி நிறுவனங்கள், வெளிநாட்டுப் பிரஜைகள், உள்ளூர் வெளி ஊர்ப் பிரமுகர்கள் என்று எந்தவித முன்னறி வித்தலும் இல்லாமல், ஆச்சிரமத்தை நம்பி முருகனிடம் வரும்போது சந்நிதியான் ஆச்சிர மம் எந்தவித மறுப்புமின்றி வரவேற்று உப சரித்துப், போதும் போதுமென அமுதூட்டி வணக்கம் செய்து வழியனுப்புகின்ற பேரறம் வேறெங்கணும் காணவும் முடியாது. கருதவும் முடியாது. விளம்பரம் செய்யவும் முடியாது.

மற்றும் அன்னம் பாலிக்கும் அனு மான விடயங்கள், வரவு செலவுப் பொறுப்புக் கள், தருமகாரியங்கள், ஞானச்சுடர் மாதாந்த மலர் வெளியீட்டை ஒழுங்கு செய்தல் போன்ற இன்னோரன்ன அத்தனை வேலைகளையும் மோகனதாஸ் சுவாமிகளே நிறைவேற்றி வரு கின்றார். சுவாமிகள் அடுப்பங்கரையிலும் தொண்டாற்றுவார். பஜனையும் செய்வார். அடியார்களோடும் பேதமின்றி சமபங்காக ஆற் றும் பங்கு மகத்தானது. மண்ணில் நல்ல வண்ணம் வாழக்கூடியது.

இன்னுமொரு முக்கியமானதொரு அம்சம் யாதெனில், பணவரவும், பொருள் வரவும், தர்ம உபகாரங்களும் வெளிப்படை யானவையும் பெறுமதியானவையும்கூட. இதை விட "ஞானச்சுடர்" என்ற மாத இதழினை பக்தி இதழாகவும், செவ்வனே செவ்வை பார்த்து பவ்வியமாகவும், அதிசயப்பாலிப்பாக வும், அட்சர சுத்தமாகவும், அழகான மலராக வும், வாசமுள்ள திருநீற்றுடன் வெளியிடுவது ஆச்சிரமப் பேரவையின் காத்திரமான செயற் பாடாகும். ஞானச்சுடர் சிவபூமிக்கான தவச் சுடர்.

"நட்டுவிடு பூமலர" புரட்டாதி மாத மலரில் திரு பொ. பாலேஸ்வரன் அவர்களது ஒரு கவிதை நெஞ்சில் விளைகிறது.

**வளையோசை மாந்தர்தம் வலையினிலே வீழ்ந்திடாமல்**
**களையெடுத்துப் பயிராக்கி விதை நெல்லா யாக்கிவிடு**
**விளைகின்ற பயிரெல்லாம் வீணாகிப் போகாமல்**
**நாளை நின்பாதத்தில் நட்டுவிடு பூ மலர!**

ஒவ்வொரு சுடரிலும் அதன் வெளிச் சத்தோடு கதிர்காமத்திற்கு அழைத்துச் செல் கின்ற செல்வி நிலா அவர்களின் கட்டுரைப் பாங்கானது ஆச்சிரம யாத்திரைக்கு வாய்த்த ஒரு பலாக்கனி. சேதாரமில்லாத ஒரு ஆகார மானது. வாகான கட்டுரை. நாம் எளிதில் உணருமாறு கந்தசஷ்டி பேறாகிறது. காரை எம்.பி அவர்கள் குறிப்பிடும் அசுரத் தலைவர் களையும், அசுரப்படைகளையும் அடக்கி ஒடுக்கிவிடும் கந்தசஷ்டி விரதப்பேறு இந்தப்

*நீ ஏழையாகப் பிறப்பது உன் தவறில்லை. நீ ஏழையாக சாவதுதான் உன் தவறு.*

பூமிக்குரியது. நாமே நம்மைத் தலைவர்களாக்கி மகிழ்கின்ற நிலைக்கு மாற்றீடாக இந்த மண்ணால் உருவாகின்ற ஆன்மீகத் தலைவர் களுக்கு வரமளிப்போம். மணியடிப்போம். இலங்கையென்ற அழகிய நாடு அகிலத்திற்கே முத்தும் வித்தும் சித்தும் சொத்தும் பத்தும் அனைத்தும் வழங்கும் நிலையேற்பட்டிருக்கும். இப்போது கொடிய கொரோனாவைக் கண்டு கோடிக்குள் அடங்கியிருக்கின்றது உலகம். எமது தவம் இன்னுமே சிவமாக வேண்டும்.

அறிஞர் மூ. சிவலிங்கம் அவர்களது காசிவாசி செந்திநாதையர் தொடர்பான முத் தான கட்டுரை வெள்ளம் பொழியும் விழி களை எமக்குச் சொந்தமாக்கியது. திரு கு. சிவபாலராஜா அவர்களது வானதி - மண்ணதியாகி நாமும் சேர்ந்து பயணிக் கக்கூடியதாகி இருந்தது. குறள் 221 மிகவும் பொருத்தமானதே. பாக்கியமான கட்டுரை.

இலட்சுமி கடாட்சம் கட்டுரையினைப் படைத்த திருமதி இராஜேஸ்வரி அம்மாவுக்கு ஒரு சபாஷ் கொடுக்கலாம். இதைவிட திரு முருகவே. பரமநாதன், ஆசுகவி செ. சிவசுப்பிர மணியம், திரு குமாரசாமி சோமசுந்தரம், திரு முருகுப்பிள்ளை செல்லத்தம்பி, திருமதி பரமேஸ்வரி நடராஜா, திரு இராம. ஜெயபாலன், பண்டிதர் சு. அருளம்பலவனார், நாவலர் பெரு மான், ஏங்குறள் திரு சி. யமுனாநந்தா ஆகி யோரின் படைப்புக்கள் யாவுமே இன்பம் பயப்பன வாகும். ஆற அமர இருந்து அனுபவித்து நூறா கும்படியான வாழ்வுக்கு சோறிடுவனவாகும்.

ஞானச்சுடரை வாசிப்பதே ஓர் அறம் ஆகும். வரமும் கூட. மிகக் கவனமாகச் செப்பனிடப்பட்ட சிவத்தமிழ்ச்சுடர். மோகன தாஸ் சுவாமிகளின் தவம் இம் மண்ணில் விளைகிறது. எமது விழிமுகில்கள் மழையாகி அதை நனைக்கிறது.

## அரியணையில் வீற்றிருந்து தமிழன்னை நல்லாட்சி நடத்த வேண்டும்

தமிழர் புத்தாண்டாம் தைத்திருநாள் தன்னில்
தமிழர் பெருந்தெய்வம் வேலவன் அடியார்க்கு

வழிதனைக் காட்டிடுவான் வளங்கள் தந்திடுவான்
வாழ்வில் சகலரையும் இன்பமாய் வாழவைப்பான்

விழியிலும் மேலான அமிழ்தாம் தமிழன்னை
வீற்றிருந் தரியணையில் நல்லாட்சி நடத்தவும்

அழியாச் செல்வமான கலையும் பண்பாடும்
அவனியில் அனைவராலும் போற்றப்படவேண்டும்.

-வ. யோகானந்தசிவம்-

(தொடர்ச்சி...

# திருச்சதகம்
# நீத்தல் விண்ணப்பம்

## பிரபஞ்ச வைராக்கியம்
## (உத்தரகோச மங்கையில் அருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
–சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

119. களிவந்த சிந்தையொ டுன்கழல் கண்டுங் கலந்தருள
வெளிவந் திலேனை விடுதிகண் டாய்மெய்ச் சுடருக்கெல்லாம்
ஒளிவந்த பூங்கழல் உத்தர கோசமங் கைக்கரசே
எளிவந்த எந்தைபி ரான்என்னை ஆளுடை என்னப்பனே.

**ப-ரை:**

மெய் சுடருக்கு எல்லாம் ஒளி வந்த பூங்கழல்- மெய்யான ஒளியையுடைய மண்டலங்களுக்கெல்லாம் ஒளி உண்டாவதற்கேதுவாகிய பொலிவினையுடைய திருவடியை உடைய உத்தரகோசமங்கைக்கு அரசே- திருவுத்தரகோசமங்கை என்னும் தலத்துக்கு அரசே, எளி வந்த எந்தை பிரான்- அருமையில் எளியையாய் வலிய வந்த எம் தந்தை முதலியோர்க்கும் தலைவனே, என்னை ஆளுடை என் அப்பனே- அடியேனை ஆளாகவுடைய என் தந்தையே, உன் கழல் கலந்தருளி களிவந்த சிந்தையொடு கண்டும்- நின் திருவடிகள் என்னைக் கலந்து அருள் செய்ய அவற்றைக் களிப்புண்டாகின்ற உள்ளத்தோடு தரிசித்தும் வெளி வந்திலேனை- பிராரத்தவினையினின்றும் வெளிப்படாத என்னை, விடுதி கண்டாய், என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

உத்தரகோச மங்கைக்கரசே, எந்தை பிரானே, என் அப்பனே உன் திருவடிகள் என்னைக் கலந்து அருள் செய்ய அவற்றைக் களிப்பு உண்டாகின்ற உள்ளத்தொடு தரிசித்தும், பிராரத்த வினையினின்றும் வெளிப்படாத என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

உன் கழல் கலந்தருள களிவந்த சிந்தையொடு கண்டும் என மாறிக் கூட்டுக. நீ ஞானாசாரியனாக வலிய வந்து என்னோடு இயைந்து திருவருள் செய்ய என்பார். அவர் திருவடிமேல் ஏற்றி "உன் கழல் கலந்தருள" என்றார். களி- களிப்பு. திருக்கோவை 52 பேர். சிந்தையில் களிவருதற்கு கழல் காணுதல் ஏது. வெளிவருதல் பிராரத்த வினையினின்றும் நீங்குதல். மெய்ச்சுடர்- ஞாயிறு, செந்தீ, விண்மீன் முதலியன. இவையெல்லாம் மெய்ச் சுடராய் விளங்குதற்கு ஒளியை நல்கியது திருவடியென்பார், மெய்ச்சுடருக்கெல்லாம் ஒளிவந்த கழல் என்றார். பூங்கழல்- பொலிவினையுடைய திருவடி. திருக்கோவை 17 பேர். கழலையுடைய அரசே என இயையும்.

*பணத்தின் உண்மையான மதிப்பு பிறரிடம் கடன் கேட்கும்போதுதான் புரியும்.*

எளி வந்த பிரான் என இயையும், "பெருந்துறையில் எளி வந்திருந்து" (அம் 18) "எளி வந்தென்னை யாண்டு கொண்ட என்னா ரமுதேயோ" (ஆசைப் 5) "என் என்பெலாம் உருக்கி எளியை யாண்ட ஈசனே மாசிலாமணியே" (பிடித்த 10) என அடிகள் பிறாண்டும் அருளியமை காண்க. "எம்மானை எளி வந்த பிரானை" (சுந் 59:1) என்பது தேவாரம். எந்தை பிரான்- எந் தந்தை முதலியோர்க்கும் பிரான். "எந்தையை எந்தை தந்தை பிரானை" (சுந் 57:7) "என்னிற வெந்தை பிரான்றனை" "எந்தை பிரா னிடைமருதினை" (நாவு 88-8; 127-3) எனத் தேவாரத்தும் "எந்தை பிரானென்று, நச்சியே யண்ணலை நாடுகிலாரே" எனத் திருமந்திரத்தும் 278 வருவன காண்க.

இதன்கண் கழல் கலந்தருளக் கண்டும் வெளிவந்திலேனை விடுதி கண்டாய் என்பதனால் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் புலனாதல் காண்க. 15.

**120. என்னைஅப் பாஅஞ்சல் என்பவர் இன்றிநின் றெய்த்தலைந்தேன்**
**மின்னையொப் பாய்விட் டிடுதிகண் டாயுவ மிக்கின்மெய்யே**
**உன்னையொப் பாய்மன்னும் உத்தர கோசமங் கைக்கரசே**
**அன்னையொப் பாய்எனக் கத்தனொப் பாய்என் அரும்பொருளே.**

**ப-ரை:**

மின்னை ஒப்பாய்- மின்னை ஒத்த ஒளியுருவினனே. உவமிக்கின் மெய்யே உன்னை ஒப்பாய்- உனக்கு உவமை கூறப் புகில் உண்மையில் உன்னையே நீ ஒப்பவனே, மன்னும் உத்தர கோசமங்கைக்கு அரசே- நிலைபெறும் திருவுத்தரகோசமங்கை என்னும் தலத்துக்கு அரசே, எனக்கு அன்னை ஒப்பாய்- அடியேனுக்கு தாயை ஒப்பவனே. அத்தன் ஒப்பாய்- தந்தையை ஒப்பவனே. என் அரும் பொருளே- எனது பெறுதற்கரிய பொருளாயுள்ளவனே, என்னை அப்பா அஞ்சல் என்பவர் இன்றி நின்று- அடியேனைப் பார்த்து அப்பனே பயப்படாதே என்று சொல்லிப் பாதுகாப்பவர் ஒருவருமில்லாது வருந்திநின்று, எய்த்து அலைந்தேன்- இளைத்து அலைந்தேன், விட்டிடுதி கண்டாய்- என்னைக் கை விடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

மின்னை ஒப்பவனே, மெய்யே உவமிக்கின் உன்னையே ஒப்பவனே, உத்தரகோச மங்கைக்கு அரசே, எனக்கு அன்னையை ஒப்பவனே, அத்தனை ஒப்பவனே, எனது அரும் பொருளாயுள்ளவனே, என்னைப் பார்த்து "அப்பா அஞ்சல்" என்று சொல்லிப் பாதுகாப்பவர் ஒருவருமில்லாது வருந்தி நின்று எய்த்தலைந்தேன் என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

அப்பா அஞ்சல் என்பது வருந்தினோர்க்கு இரங்குவோர் கூறும் தேற்றவுரை. என்பவரின்றி எனக்குளதாகும் பிரபஞ்ச அச்சத்தினை நீக்கிப் பாதுகாக்க வல்லார் நீ யன்றிப் பிறரில்லை என்றபடி. "அருளாதொழிந்தால் அடியேனை அஞ்சேல் என்பார் ஆரிங்கு" (கோயின் மூத் 8) "வா வென்னா விடில் என்னை அஞ்சேல் என்பார் ஆரோதான்" (ஆனந்த 6) என வருவன காண்க. அச்சம் இறப்புப் பிறப்புப் பற்றிய அச்சம் எனினுமாம்.

"கறங்கோலை போவதோர் காயப்பிறப்போ டிறப்பென்னும்
அறம்பாவ மென்றிரண் டச்சந் தவிர்த்தென்னை யாண்டு கொண்டான்"
(தெள் 7) என அடிகள் அருளியவாறு காண்க.

*தோல்வியை நேசி. வெற்றியின் விளிம்பு உன் விழியருகே தெரியும்.*

இன்றி என்பது இல்லாமையால் என ஏதுப்பொருளில் வந்தது. எய்த்தல்- இளைத்தல். அலைதல்- அஞ்சல் என்பார் யாண்டாயினும் உளரோவென அலைந்து தேடுதல். ஒப்பாய் யாவும் விளிப்பொருளில் வந்தன. மின்னல் உருவத்தின் ஒளிக்கு உவமானம்."பொங்கரவம் புன்சடை மிடைந்த மின்னனையான்" எனத் திருக்கோவையாரில் (125) வருதலுங் காண்க.

மெய் உண்மையில் என ஏழனுருபு விரிக்க. ஏயைப் பிரித்து உன்னையே எனக் கூட்டுக. உவமிக்கின் உன்னை யொப்பாய் என்றது உனக்கு உவமை கூறப் புகுந்தால் உனக்கு ஒப்பாவார் பிறர் எவருமின்மையின் உன்னை யொப்பாய் என்றவாறு. "தாமே தமக்கொப்பு மற்றில்லவர்" எனத் திருக்கோவையாரில் (228) வருதலுங் காண்க. உன்னை ஒப்பாய் என்றமையால் மின்னை யொப்பாய் அன்னை யொப்பாய் அத்தனொப்பாய் என்பன ஒருபுடை யுவமையாவனவாகும்.

இதன்கண் "என்னை அப்பா அஞ்சல் என்பவரின்றி நின் றெய்த்தலைந்தேன்" விட்டிடுதி கண்டாய் என்பதனால் பிரபஞ்ச வைராக்கியமும் என்னைக் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் புலனாகுமாறு காண்க. 16. (தொடரும்...

---

## ஐந்திணைப்புப் பண்பாடு

தற்சோதனை என்பது தன்னைப்பற்றி ஆராய்தல் என்று விளங்கும். தன்னைப் பற்றிச் சிந்தித்தல், தன் குறையுணர்தல், தான் திருத்தம்பெறத் திட்டம் வகுத்தல், வகுத்த வழியே செயலாற்றி வெற்றி பெறுதல் என்பன எல்லாம் தற்சோதனைப் பயிற்சியில் அடங்கும்.

தற்சோதனையை நான்கு பிரிவுகளாக்கி ஒவ்வொன்றாகப் பயிற்சியளிக்கப்படுகின்றது. முதற் பயிற்சி "நான் யார்?" என்ற வினாவினை எழுப்பி விடை பெறுதலாகும். உடல், உயிர், அறிவு, மெய்ப்பொருள் என்ற நான்கும் இணைந்தே மனிதன் என்ற இயக்கமாக விளங்குகின்றது. இந்த நான்கு நிலைகளைப் பற்றி விளக்கத்தின் மூலமும், சிந்தனையின் மூலமும் உணர்ந்துகொள்வதே மெய்யுணர்வாகும்.

இரண்டாவது பயிற்சி எண்ணம், சொல், செயல் இவற்றை ஒழுங்குபடுத்துவதாகும். தனக்கும், பிறர்க்கும், தற்காலத்திலும், பிற்காலத்திலும் அறிவிற்கும் உடல் உணர்ச்சிக்கும் துன்பம் எழாத அளவிலும், முறையிலும் எண்ணம், சொல், செயல் மூன்றையும் பண்படுத்திப் பயன் பெறுதலாகும்.

மூன்றாவது பயிற்சி அறுகுணச் சீரமைப்பு. பேராசை, சினம், கடும்பற்று, முறையற்ற பால் கவர்ச்சி, உயர்வு தாழ்வு மனப்பான்மை, வஞ்சம் எனும் ஆறு குணங்களையும் நிறைமனம், சகிப்புத்தன்மை, ஈகை, கற்பு, நேர் நிறை விளக்கம், மன்னிப்பு என்ற ஆறு நற்குணங்களாக மாற்றும் பயிற்சி முறையே அறுகுணச் சீரமைப்பாகும். மனிதன் உணர்ச்சி வயப்படும்போது தான் அவன் ஆறு தீய குணங்களாக மாறுகிறான். அறிவின் வயம் நின்ற மாறாத விழிப்புநிலை பெற்றால் உணர்ச்சிவயமாக மாற வழியே இல்லை. மனித இனப் பண்பாட்டிற்கு அறுகுணச் சீரமைப்பு இன்றியமையாததாகும்.

நான்காவது பயிற்சி கவலை ஒழித்தல், அறியாமை, உணர்ச்சி வயமாதல், சோம்பேறித்தனம் இவற்றால் செயல் தவறுகளும் கணிப்புத் தவறுகளும் ஏற்படுகின்றன. இவைகளையெல்லாம் ஆராய்ந்து முறைப்படி எல்லாக் கவலைகளையும் ஒழித்து நலம் பெறக் கவலையொழித்தல் என்ற பயிற்சி நன்கு உதவுகின்றது. குண்டலினி யோகத்தால் விழிப்பு நிலை பெற்று தற்சோதனைப் பயிற்சி முறையால் மனத்தூய்மையும், வினைத் தூய்மையும் உண்டானால், அவற்றின் அடிப்படையில் ஒழுக்க உணர்வு, கடமையுணர்வு, மெய்ப்பொருள் உணர்வு என்ற மூன்றும் இயல்பாக வந்துவிடும். எனவே இத்தகைய பண்பாட்டின் பயிற்சி முறையை "ஐந்திணைப்புப் பண்பாடு" என்று வழங்குகிறோம்.

*வாழ்க்கையில் திரும்பப் பெறமுடியாதவை உயிரும் நேரமும் சொற்களும்.*

# சைவக் கல்வியில் ஆசிரியத்துவம்

– திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் –

"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்", என்னும் மகுட வாசகம், சைவ மரபாயிற்று. ஆசிரியன் இறைவனுக்கு ஒப்பான வன் எனச் சைவச் சமூகம் போற்றி வந்துள்ளது.

சிவபெருமானின் மூர்த்தங்களுள் ஒன்று தட்சணாமூர்த்தம். அது குரு மூர்த்தம். சிவநெறி குரு நெறியுமாகும். உலகின் முதல் ஆசிரியன், சிவபெருமான். அவர் தட்சணா மூர்த்தியாகக் கல்லால மரநிழலின் கீழ் வீற் றிருந்து, மோன நிலையில், சின்முத்திரை மூலம் சனாகாதி முனிவர்களுக்கு ஞானத்தை ஆகமப்பொருளை உணர்த்திய அந்த நன் னாளே சைவக்கல்வி தோன்றிய திருநாள் எனின் அது மிகையாகாது. பேரறிவிலிருந்து, அறிவு ஊற்றெடுத்தது. அந்த அறிவு, சைவக் கல்வி மூலம் உலகில் பரவலாயிற்று.

தற்காலத்தில், ஆசிரியர் கற்பித்தலின் போது, பேச்சைக் குறைத்துச் செயற்பாடு களில் ஈடுபட வேண்டும் எனக் கூறப்படுகிறது. சைவக் கல்வியின் முதற் பேராசிரியர் அன்றே இந் நவீன கருத்தைச் செயலில் காட்டியிருக் கிறார். மோன நிலையில் ஞான வரம்பினை மாணாக்கருக்கு உணர்த்தியமையே அந்தச் செயற்பாடு ஆகும். முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானே, குருவாய் அமர்ந்து, இறை வனைக் கண்ணால் காணச் செய்தும், காட்டி யும் உணர்த்தியமை சைவத்தின் முதற் சிறப் பாகும். அந்த வகையில், ஆசிரியர்களுக்கு இலக்கணம் வகுத்துத் தந்தமையும், வழிகாட் டியாக அமைந்தமையும் நோக்கற்பாலது.

அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கும் கல்விப்பயன்கள் என்று கொள்ளும் சைவத்தமிழ்க் கல்வி மரபு, அக் கல்வியைப் புகட்டும் ஆசிரியர்களுக்கும் இலக்கணம் கண்டது. ஆசிரியர், பேராசிரியர், ஆசான், கணக்காயர் போன்ற சொற்கள் கல்வியைக் கற்பிப்பவரைக் குறிப்பதாகப் பண்டைத் தமிழகத் தில் அமைந்தன. இவர்களுள் கணக்காயர், தாம் கல்வியைக் கசடறக் கற்பவராகித், தம் வழி மாணாக்கர் பலரைக் கொண்டவராய் அவர்களுக்குப் பாடஞ் சொல்லும் நல்லாசிரி யராக விளங்கியவர்.

"கணக்காயன்" என்பான் நூலைக் கையிலேந்திக்கொண்டு, வாசித்துப் பொருள் சொல்லித் தருபவன் அல்லன். மாணாக் கனைக் "கற்போன்" என்றும், கணக்காயனைக் "கற்கப்படுவோன்" என்றும் விளக்கம் தந்துள் ளார் நச்சினார்க்கினியர். இதன்படி, ஆசிரியனே பாட நூலாகவும், பாடப் பொருளாகவும் விளங் கினான். மாணாக்கர் ஆசிரியரைத்தான் கற்றனர். ஆசிரியன் வாழ்ந்து காட்டியதையே, நூலாகவும், கல்விப் பொருளாகவும் கொண்டு, வாழ்வியற் தத்துவங்களையும் அனுபவங் களையும் அறிந்தும் உணர்ந்தும் கொள்ள வேண்டியது மாணாக்கரின் கடமையாகும்.

"ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான்" என்கிறார் மாணிக்கவாசக சுவாமிகள். இறை வன் தான் வாழ்ந்து காட்டிய முறையையே ஏனையோரும் பின்பற்றி வாழவேண்டும். அவர் வாழ்ந்து காட்டிய முறையை, "ஆகமம் ஆகி நிற்றல்" என்கிறார்.

எனவே, ஆசிரியரும் துறைபோகக் கற்றறிந்தவராகவும், அறிந்தவற்றைச் செயல் முறைப்படுத்தி அனுபவம் பெற்றவராகவும்

*வெற்றி என்பது நிரந்தரமல்ல, தோல்வி என்பது இறுதியானதுமல்ல.*

இருத்தல் அவசியம். கல்வி என்பது அறிவும் அனுபவமும் இணைந்த நிலை என்பதைச் சைவக்கல்வி மரபு கோடிட்டுக் காட்டுகிறது. அதேவேளை, சைவக்கல்வி, அறிமுறை - கருத்தியலுக்குப் பொருத்தமானதும்; செயல் முறை - நடைமுறைக்கு ஏற்றதும் ஆக உள் ளமை குறிப்பிடத்தக்கது. அக் கல்வி வெறு மனே "ஏட்டுச் சுரைக்காய்" அன்று. ஆசிரியர் களும் இதை உணர்ந்து, கற்றாங்கு ஒழுக வேண்டிய அவசியத்தைச் சைவத்தமிழ்க் கல்விமரபு வலியுறுத்துகின்றது.

சைவத்தின் மெய்யியற் கலையாக விளங்கும் சைவசித்தாந்தம், அறிமுறைக்கு ஏற்றதும், அனுபவ நடைமுறைக்கு உரியது மாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சைவமரபில், தத்துவம் என்பது மெய்யறிவு என்ற நிலைப்பாட்டுடன் நின்றுவிடவில்லை. தத்துவம் என்ற சொல்லுக்குப் பதிலாகச் சைவத்தமிழ் அறிஞர்கள், "காட்சி" என்ற சொல்லைப் பயன்படுத்தி உள்ளமையைக் காணலாம். காட்சி என்ற சொல், அறிதலையும் அனுபவித்தலையும் இணைக்கும் ஒன்றாக விளக்கம் தரப்பட்டுள்ளது.

அறிவால் ஒன்றை ஆராய்ந்து வெளிப் படுத்துவது மட்டுடன் அமையாது. அனுபவத் தாலும் அனுபவித்து உணர்ந்த அனுபவ வெளிப்பாடாகவும் அது விளங்க வேண்டும். "அறிதல்" ஒரு பௌதிகச் செயன்முறை. "உணர்தல்" ஒரு ஆன்மீகச் செயன்முறை. இந்த இரண்டையும் சைவமரபு வலியுறுத்து வதால், ஆசிரியர், அறிவு, அனுபவம் இரண்டை யும் பெற்றவராய் அமைதல் இன்றியமையாதது ஆகும்.

ஆசிரியர் அறவோராகவும், செந் தண்மை பூண்டொழுகுபவராகவும்; கல்வி, கேள்வி ஒழுக்கங்களில் சிறந்தவராகவும்; கற்றபடி வாழ்ந்து காட்டுபவராகவும்; பிறரையும் நன்னெறியில் இட்டுச் செல்பவராகவும் விளங்க வேண்டும் என்பது சைவ மரபு. ஆசிரியரின் முதன்மை இலட்சணம், "நல்லொழுக்கம்" ஆகும். பிறருக்கு வழிகாட்டுபவர், தாம் நன் முறையில் நடந்து காட்டவேண்டும். இறை வனின் எண்குணங்களும் ஆசிரியனுக்கு இருத் தல் வேண்டும். ஆசிரியனை இறைவனுக்கு ஒப்பாகப் பேசும் மரபு, சைவமரபு.

ஆசு+இரியர்= ஆசிரியர் - குற்றத்தை நீக்குபவர் என்பது இதன் பொருள். மற்றை யோரின் குற்றத்தை நீக்குபவர், தாமும் குற்ற மற்றவராக விளங்க வேண்டியது அவசியமே. அறியாமையும் ஒருவகையில் இல்லாமையே- குற்றமே. அறியாமை என்னும் இருளை நீக்கி அறிவொளி ஏற்றுபவர்கள் ஆசிரியர்கள். கல்வி என்பது விளக்கேற்றல் என்று நாவலர் பெரு மான் கூறுவர். ஆசிரியர்கள் ஞான விளக்கு கள். ஒவ்வொரு விளக்கிலிருந்தும் பற்பல விளக்குகள் ஏற்பட வேண்டும் என்று நாவலர், சைவமரபு நின்று கூறினார்.

கல்வியைப் பிறருக்குக் கொடுக்குந் தோறும், கொடுப்பவரின் கல்வியும் அதிகரித் துக்கொண்டே செல்லும். கல்விச் செல்வத்தின் சிறப்பு அத்தகையது. தானங்களிற் சிறந்தது வித்தியாதானம் என்கிறார் நாவலர். ஆசிரியர் கல்வி வழங்குதலைத் தானமாகக் கொள்ள வேண்டும். பணத்திற்கோ, பொருளுக்கோ கல் வியை விலைகூறி விற்றலாகாது. அவ்வாறு அறிவை விற்பவர்கள் அறிவுவிலை வணிக ராகி விடுகின்றனர். சைவக் கல்வி மரபின் ஆசிரியர்கள் அறிவுவிலை வணிகர் அல்லர்.

விளக்குச்சுடர் தொடர்ந்து ஒளியைப் பிரகாசிக்க வேண்டுமானால், விளக்குத் தகழி யினுள் நெய்யை வற்றவிடாமல் விட்டுக் கொண்டேயிருக்க வேண்டும். திரியையும் அடிக் கடி தூண்டிவிட வேண்டும். அவ்வாறே ஆசிரி யரும் என்றுங் கற்றுக்கொண்டே இருந்தாலேயே.

*நமக்கு நாமே ஆறுதல் கூறும் மனத்தைரியம் இருந்தால் அனைத்தையும் கடந்து போகலாம்.*

ஆசிரியப் பணியைச் செவ்வையாக ஆற்ற முடியும். ஆசிரிய விருத்தியின் இன்றியமை யாமை இதனால் வெளிப்படுத்தப்படுகிறது.

ஆசிரியர் மாணவர் தொடர்பின் முக் கியத்துவத்தைச் சைவக்கல்வி மரபு வலி யுறுத்துகின்றது. மாணாக்கர் ஆசிரியருடன் வாழ்ந்து, குடும்ப உறுப்பினராகத் திகழ்ந்து கற்கவேண்டுமென்பது சைவமரபு. ஆசிரியருக் கும் மாணாக்கனுக்கும் இடையேயான தொடர்பு தந்தை - மகன் தொடர்பு ஆகும். குருகுலக் கல்வி, ஆசிரமக் கல்வி என இக் கல்விமுறை அழைக்கப்படுகிறது.

பின்வரும் பாடல் தொல்காப்பியப் பாயிரத்தில், நச்சினார்க்கினியர் மேற்கோளில் காணப்படுகின்ற ஆத்திரையன் பேராசிரியன் கூற்றாக இடம்பெறுகின்றது. அதிலிருந்து, நல்லாசிரியன் பண்புகளும் இயல்புகளும் எத் தகையனவாக இருக்க வேண்டுமென்று, சைவத் தமிழ் மரபு கொண்டிருந்தது என்பது தெரியவருகிறது.

“வலம்புரி முத்திற் குலம் புரி பிறப்பும்
வான்யாறன்ன தூய்மையும் வான்யாறு
நிலம்படர்ந்தன்ன நலம் படர் ஒழுக்கமும்
திங்கள் அன்ன கல்வியும், திங்களோடு
ஞாயிறன்ன வாய்மையும் யாவதும்
அஃகா அன்பும், வெஃகா உள்ளமும்
துலை நாவன்ன சமநிலை உளம்பட
எண்வகை உறுப்பினர் ஆகித் திண்ணிதின்
வேளாண் வாழ்க்கையும் தாசுளாண்மையும்
உலகியலறிதலும் நிலை இய தோற்றமும்
பொறையும், நிறையும், பொச்சாப்பின்மையும்
அறிவும், உருவும், ஆற்றலும் புகழும்
சொற்பொருள் உணர்த்தும் சொல் வன்மையும்
கற்போர் நெஞ்சம் காமுறப்படுதலும்
இன்னோரன்ன தொன்னெறி மரபினர்
பின்னருஞ் சிறப்பின் நல்லாசிரியர்”

இத்தகைய நல்லியல்புகளையும் இலட்சணங்களையும் கொண்ட நல்லாசிரியர் களைக் காண்பதற்குச் சமகாலச் சமுதாயம் சதா ஏங்கிக்கொண்டிருக்கிறது.

நல்லாசிரியர் ஒருவருக்கு இருக்க வேண்டிய தகுதிகள் பற்றி நன்னூலார் பின் வருமாறு குறிப்பிடுகின்றார். அவையாவன: குலம், அருள், தெய்வங்கொள்கை, மேன்மை, கலையில் தெளிவு, கட்டுரை வன்மை, மாட்சி எனும் ஏழு பண்புகள் ஆகும். குலம் அல்லது குடிப்பிறப்பு என்று கொள்ளப்படுதல் ஒழுக்கத் தின் அடிப்படையில் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். “ஒழுக்கம் உயர்குலம்” என்பது முதுமொழி. நல்ல குலம் என்பது நல்ல ஒழுக்கமுடையவர்கள் குழாம் என்பதே பொருள். இதிலிருந்து ஆசிரியர் எனபோர் நல்ல ஒழுக்கம் உடையவர்களாக இருத் தலின் அவசியம் விளங்குகின்றது. உயர்வும், தாழ்வும் அவர்களின் ஒழுக்கத்தைக் கொண்டே தீர்மானிக்கப்படுவது தமிழ்மரபு ஆக உள்ளது.

ஆசிரியர் அருள் உள்ளம் கொண்டவராக இருத்தல் வேண்டும். அருள் என்பது அன்பு ஈன்ற குழவி என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. அருள் உள்ளவரிடம் அன்பும் இரக்கமும் கருணையும் இருக்கும். அத்துடன் ஈகையும் சேவையும் காணப்படும். இங்கு ஈதல் என்பது கல்வியை ஒழிப்புமறைப்பின்றி, பட்சபாதகமின்றி மாணவர்க்கு வழங்குதல் என்பது ஆகும். அதுவே அர்ப்பணம் நிரம்பிய சேவை. இத்தகைய ஈதலும், சேவையும் ஆசிரியரின் அருட்தன்மையின் வெளிப்பாடு எனலாம். அறிவை ஈதல் செய்யும் ஆசிரியர் கைம்மாறு கருதாமலே அவ்வாறு செய்கின்றார்.

அடுத்து தெய்வங்கொள்கை எனும் பண்பு, ஆசிரியர் இறைநம்பிக்கையுள்ளவராக இருக்கவேண்டுமென்பதைச் சுட்டுகின்றது. இறைவன் எங்கும் உள்ளவன் என்ற எண்ணத்துடன், இறை அன்பு கொள்ளும் ஒருவன் சகல உயிரகளையும் சமமாக மதிக்கும் பெற்றியைப் பெற்றிருப்பான். எனவே நடுவுநிலைமை என்னும் பண்பு ஆசிரியனுக்கு இயல்பாகவே வந்துவிடுகின்றது.

மேன்மை, என்பதிலிருந்து விளங்கிக் கொள்வது என்னவெனில், கற்று, ஆய்ந்து தெளிந்த கருத்துக்களைக் கொண்டிருத்தலும்; அத்தோடு எவ்விடத்திற்குச் சென்றாலும் அக் கருத்துக்களைப் பிறர் ஏற்று மேன்மைப் படுத்தும் நிலையில் இருத்தலும் ஆகும்.

அடுத்து, கலைபயில் தெளிவு எனும் தகுதி குறிப்பிடுவது எதனை என ஆராயின் தத்தம் துறை சார்ந்த கல்வியோடு, பல்வேறு கலைகளிலும் பயிற்சியும் தெளிவும் பெற்றிருத்தல் என்பது புலப்படும்.

கட்டுரைவன்மை இருத்தல் ஆசிரியருக்குரிய ஒரு இன்றியமையாத தகுதியாகும். தாம் கூற விழைந்த விடயத்தையோ செய்திகளையோ நன்கு ஒழுங்குபடுத்திக் கேட்போர் மயக்கமின்றித் தெளிவும் விளக்கமும் பெறுமாறு கட்டுக்கோப்புடன் உரைக்கும் ஆற்றலையே கட்டுரை வன்மை என்கின்றனர். தொடர்பாடல் கலையில் நல்ல வன்மையும் திறனும் பெற்றிருத்தல் ஆசிரியருக்கு இன்றியமையாத தகுதி என்பதை இது காட்டுகிறது.

ஓர் ஆசிரியர் நிலம் போன்றும், மலை போன்றும் நிறைகோல் போன்றும், மலர் போன்றும் மாண்பும் மாட்சியும் உடையவராய் விளங்க வேண்டும்.

நிலத்தின் தன்மைகளாகக் குறிப்பிடக் கூடியவை பொறுமையும், முயற்சிக்கேற்ற பயனை வழங்குதலும் ஆகும். திண்மை, செறிவையும் சேர்த்துக் கொள்ளலாம். நல்லாசிரியரும் பொறுமையுடையவராகவும் மாணவரின் பருவம், அறிவு, முயற்சி மட்டத்திற்கேற்பக் கற்பிக்கக் கூடியவராகவும் அமைவர். அவரின் பரந்த அறிவு திண்மையும், மாணவர் உள்ளங்களில் விரைந்து செறியக் கூடியதாகவும் இருக்கும்.

மலையின் தன்மைகளாக அளந்து காணமுடியாத பரப்பு; பல்வேறு உயிரினங்களையும் இயற்கை வளங்களையும் கொண்டிருத்தல்; திண்மை; தோற்றப்பொலிவு; வற்றாத நீர்ச்சுனைகளை வைத்திருத்தல் என்பவற்றைக் கூறலாம். ஆசிரியரும் பல்துறை நூலறிவினையும், கலைகளையும், நுண்மான் நுழைபுலங்களையும் கொண்டிருப்பர். தான் கடைப்பிடிக்கும் கொள்கையில் நின்று விலகாத மனத்திட்பம் உடையவராயும்; நீர்ச்சுனை போன்று தம்மை நாடிவரும் மாணாக்கருக்கு வற்றாத அறிவு வளத்தை இல்லையென்னாது வழங்குபவராயும் இருப்பர்.

நிறைகோல் மாண்பு என்பது காய்தல் உவத்தல் அற்ற நடுவுநிலைமையாகும்.

*உருவத்துக்குத்தான் முக்கியத்துவம் என்றால் யானைதான் காட்டுக்கு ராஜாவாகி இருக்கும்.*

எல்லோரையும் பேதமின்றி நடத்தும் தன்மையும்; கருத்துக்களைச் சமன்செய்து சீர்தூக்கிப் பார்த்து முடிவுகூறும் இயல்பும் நல்லாசிரியர் இலக்கணம். மலர்களுக்குரிய மென்மையும், மங்கலமும், மலர்ச்சியும், இனிய சுபாவமும் ஆசிரியரிடமும் இருத்தல் அவசியம்.

இத்தகைய நல்லாசிரியர்கள் அன்றைய நிலையில் சான்றோர்களை உருவாக்கினார்கள். கல்வியால் உயர்ந்த சமுதாயமாகத் தமிழர் சமுதாயம் மிளிர்ந்தமைக்கு ஆசிரியர்களே பொறுப்பானவர்கள் என்பதைக் கூறித்தான் ஆகவேண்டும்.

## நினைத்தாலே போதும்

முன்னொரு காலத்தில் சித்திராதன் என்ற அரசன் இருந்தான். பேராற்றல் வாய்த்திருந்த அவன் பூவுலகம் முழுவதையும் வென்றான். அவனிடம் பறக்கும் விமானம் இருந்தது. அதன் உதவியால் தேவர் உலகத்தை அடைந்த அவன் இந்திரனையும் போரில் வென்றான். மூவுலகங்களிலும் அவன் ஆட்சி நிலைபெற்றது. அவனுக்குப் பேரழகு வாய்ந்த மனைவி இருந்தாள்.

நல்ல புதல்வர்களைப் பெற்றான். குடிமக்களுக்கு எந்தக் குறையும் ஏற்படாமல் நல்லாட்சி செய்தான். அவன் கருவூலத்தில் ஏராளமான செல்வம் இருந்தது. "இவரைப் போன்று சீரும் சிறப்புமாக ஆட்சி செய்த அரசன் இதுவரை பிறந்ததும் இல்லை. இனி பிறக்கப்போவதும் இல்லை" என்று மக்கள் பேசினார்கள்.

எந்தக் குறையும் இல்லாமல் மகிழ்ச்சியோடு இருந்த அவன் "இவ்வளவு பெரும் புகழும் கிடைக்கத் தான் முற்பிறவியில் செய்தது என்ன" என்று சிந்தித்துக் கொண்டிருந்தான்.

அப்பொழுது வசிஷ்ட முனிவர் அவனுடைய அரண்மனைக்கு வந்தார். அவரைச் சீரும் சிறப்புமாக வரவேற்று வணங்கிய அவன், "பெருமிதத்தோடு நான் இன்று வாழ்வதற்கான காரணத்தை நீங்கள்தான் சொல்ல வேண்டும்" என்று கேட்டான்.

முக்காலமும் உணர்ந்த அவர் "அரசே! நீ முற்பிறவியில் விறகு வெட்டியாக இருந்தாய். பல ஆண்டுகள் மழை பெய்யாததால் கடும் பஞ்சம் உண்டாயிற்று. அதனால் உனக்கு உணவு எதுவும் கிடைக்கவில்லை. காட்டிற்குச் சென்ற நீ இலை, காய், பழங்களைத் தின்று காலம் கழித்தாய். அங்கே பெரியோர் பலர் இருந்தார்கள்.

நீ ஒருமுறை தலையில் விறகுக் கட்டுடன் நகர வீதிகளில் அலைந்து கொண்டிருந்தாய். எங்கும் விறகு விலை போகவில்லை.

நீயும் உன் மனைவியும் வருத்தத்துடன் ஒரு வீதியில் ஒதுங்கி இருந்தீர்கள். அப்பொழுது அங்கே பெரிய செல்வனான வணிகன் ஒருவன் வேள்வி செய்து அந்தணருக்குப் பொன்னை வாரி வழங்கிக்கொண்டிருந்தான்.

இதைப் பார்த்த நீ "நாமும் செல்வனாக இருந்தால் இப்படிப் பொன்னை வாரி வழங்கி நற்பேற்றைத் தேடி இருக்கலாமே" என்று நினைத்தாய். அந்தணர்களுக்கு வாரி வழங்குவது போலக் கற்பனை செய்து மகிழ்ந்தாய். அதனால்த்தான் உனக்கு இந்தப் பிறவியில் சீரும் சிறப்புடனும் வாழும் பேறு கிடைத்தது" என்றார்.

*வாழ்வது ஒரே முறை. அதை உனக்காக வாழு.*

# திருவிளையாடற் புராண வசனம்

(இருபத்து மூன்றாவது)

– ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் –

## விருத்த குமார பாலரான படலம்

விக்கிரம பாண்டியன் அரசியற்று நாளிலே, மதுரையில் விருபாக்கன் என்னும் ஒரு பிராமணன் இருந்தான். அவன் மனைவி பெயர் சுபவிரதை. அவர்கள் நெடுங்காலம் பிள்ளையின்றி, எண்ணில்லாத தருமங்களைச் செய்து, சத்த மாதர்களை வழிபட்டுத், தவம் பண்ணி, ஒரு பெண் பெற்றார்கள். அப்பெண் பெயர் கௌரி. கௌரி ஐந்து வயசிலே பிறவிப்பிணிக்கு அஞ்சி, அதனை நீக்கக் கருதித், தன் பிதாவை வணங்கி, "ஐயா! இப்பிறவி நோயை நீக்கவல்ல மந்திரம் யாது?" என்று வினாவினாள். பிராமணன் அதிசயித்து, மனமகிழ்ந்து, அப் பெண்ணுக்கு உமாதேவி யாருடைய மந்திரத்தை உபதேசித்தான். முற் பிறப்பில் தவக்குறையை முடிக்க வந்த கௌரி, அம்மந்திரத்தைச் சிரத்தையோடு நாத் தழும்பேறச் செபித்துக்கொண்டு வந்தாள். விருபாக்கன், "நான் பெற்ற தவக்கொழுந்துக்கு இசையக் குல சிரேட்டனாய்ப் பிரமசாரியாய் வேதவித்தாய் மகாசைவனாய் உள்ளவன் ஒருவன் எப்போது வருவானோ!" என்று தன் நெஞ்சோடு சொல்லிக்கொண்டிருந்தான்.

கௌரிக்கு எட்டு வயசாகும்பொழுது, ஒருநாள், அயலூரின் உள்ள ஒரு வைணவப் பிரமசாரி, அங்கே வந்து பிச்சை கேட்டான். விருபாக்கன், அவனுடைய கோத்திரம் முதலிய வற்றை வினவாது, தான் தவத்தினால் வருந் திப் பெற்ற கௌரியை அவனுக்குக் கொடுக் கத் துணிந்து, சலத்தை எடுத்து, அவன் கையிற் பெய்தான். கௌரியினுடைய மாதாவுஞ் சுற்றத்தாரும் அதைக் கேட்டு, மனந்தளர்ந்து, "இப் பிராமணனுடைய ஊர் குலங் கோத்திரங் குடிமை சூத்திரங் கல்வி ஒழுக்கம் என்பவை களை அறியாது, கன்னியைத் தானஞ் செய் தானே! இதற்கு யாது செய்வோம்?" என்று கலங்கி, அவனுடைய கோத்திரம் முதலியன வெல்லாம் ஆராய்ந்தறிந்து, "இவன் நம் மரபுக்குச் சமமாயுள்ளவனே; ஆயினும் வைணவனென்னும் குற்றமொன்றுண்டு. தானஞ் செய்தபின் இனி மறுப்பதெங்ஙனம்? விவாகஞ் செய்து கொடுப்பதே தகுதி" என்று இசைந்தார் கள். இசைந்த பின்பு, விருபாக்கன் வேதத்துள் விதிக்கப்பட்ட எட்டுவகை மணங்களுள்ளும் முதலாவதாகிய பிரம மணத்துக்குக் கூறிய விதிப்படி, தன் கன்னியைப் பொன்னினாலே புதைத்து, அக்கினி முன்பு அந்தப் பிரமசாரிக்கு விவாகஞ் செய்து கொடுத்தான்; பின் பற்பல வரிசைகள் செய்து, கௌரியை மணமக னோடும் அவனது நகரத்துக்கு விடுத்தான்.

வைணவப் பிராமணன் மணமகளோடு தன் வீட்டிற் புகும்பொழுது, அவனுடைய தாய் தந்தையர்கள் அம் மணமகளுடைய சிவவேடத்தையுஞ் சிவசிந்தையையும் பார்த் துப், பொறாமையினாலே தங்களுடல்போல மனமும் வெந்து, அவளை வெறுத்து, வேறாக ஒதுக்கி, நிந்தைசெய்து, ஒழுகுவாராயினார் கள்; ஒருநாள் அயலூருக்கு தங்கள் சுற்றத் தாருடைய கலியாணத்துக்குப் போக நினைந்து, கௌரியைத் தனியே வைத்துவிட்டு, வீட்டைப் பூட்டிக்கொண்டு, தாங்கள் போனார்கள்.

*உலகில் தேடித்தேடி அலைந்தாலும் மீண்டும் அமரமுடியாத சிம்மாசனம் தாயின் கருவறை.*

மனமாசை ஒழிப்பது விபூதியே என்று உபநிடதங்கள் சொல்லக் கேட்டும் மண்ணைப் பூசும் வடிவத்தையுடைய வைணவர்கள் அகன்ற பின்பு, வீட்டிலே தனித்திருக்குங் கௌரியானவள், சிவனடியார்களைக் காணப் பெறாமையால் மனக்கவலை கொண்டு, இப் படியே சிந்திப்பாளாயினாள். "சிவனடியாரிடத்து அன்பில்லாத மனமே இரும்பு; சிவனடியாருக்கு நாடோறுந் தொண்டு செய்யாத சரீரமே மரம்; காது கண் முதலிய ஐந்திரியங்களையுஞ் சிவனடியாரிடத்துச் செலுத்தாத வடிவமே பாவை; வேதத்தினாலே துதிக்கப்படுஞ் சைவ நெறியல்லாத நெறிகளே பிறவி நெறிகள். எல்லாவுயிர்களுக்கும் உறுதிகளாயுள்ளவை இம்மை மறுமையின்பங்களே. அவைகளைக் கொடுக்கவல்லவர், எல்லாம் தாமேயாய் உயிர்க்குயிராயுள்ள சிவபெருமானே; அவர் தம் அன்பர்களுக்கு மனம் வாக்குக் காயம் என்னும் மூன்றாலுஞ் செய்யப்படும் மெய்ப் பத்தி வழியே வந்தருள் செய்வர். அப்பத்தி வழி நிற்பவருக்குப் பிறவித் துன்பத்தை நீக்கும் பொருட்டு எடுத்த வடிவம், அவருடைய அடி யாரது திருவேடமன்றோ!" என்று கவலை கொண்டிருந்தாள்.

அப்பொழுது பெருங்கருணாநிதி யாகிய சிவபெருமான் நரைதிரை முதிர்ந்த ஒரு விருத்தப் பிராமண வடிவங்கொண்டு, விபூதி தரித்துச், சிரசினுங் காதுகளினுங் கழுத்தினும் மார்பினும் புயங்களினுங் கைகளினும் உருத் திராட்சமாலை தரித்துக், கையிலே ஒரு பழைய பெரிய புத்தகந் தாங்கிச் சரிந்த கௌபீன உடையும், உத்தரீயம் இட்ட தோளும், பூணூல் அணிந்த மார்புந், தலை நடுக்கமுங் குனிந் தசைகின்ற திருமேனியும், ஒரு கையிற் பிடித்த குடையும், ஒரு கையாலூன்றிய தண்டும் உடையவராகிப், பலநாட் போசனஞ் செய் யாத பெரும்பசியினர்போல மிக வாடி வந்து, கௌரி இருக்கும் வீட்டிற் புகுந்தார். கௌரி அதுகண்டு, மிக்க அன்போடெழுந்து, அவரை ஆசனத்திருத்தி, நமஸ்கரித்தெழுந்து, அஞ்சலி செய்து நின்று, "எம்பெருமானே! உம்மை இங்கே தரிசிக்கத் தமியேன் என்ன மாதவஞ் செய்தேனோ!" என்றாள். விருத்தப் பிராமணர், "பசித்து நாம் உன்னிடத்துக்கு வந்தோம்" என்றார். அதற்குக் கௌரி, "நம்மவர்கள் வீட்டைப் பூட்டிக்கொண்டு போய்விட்டார்களே" என்றாள். விருத்தப் பிராமணர், "நீ உன் கையினாலே தொடுமுன், பூட்டிய பூட்டு விடும். நீ திறந்து விரைந்து சமைக்கக் கடவாய்" என்றார். தவக்கொழுந்தாகிய கௌரி அப் படியே செய்து, மடைப்பள்ளியினுள்ளே புகுந்து, சமையல் பண்ணிப், புறத்து வந்து, "எம்பெருமானே! திருவமுது செய்ய எழுந் தருளும்" என்று விண்ணப்பஞ் செய்து, அவ ருடைய திருவடிகளை விளக்கி அந்தத் தீர்த் தத்தைத் தன் சிரசின்மீது தெளித்து, அவரை உள்ளே புகுவித்து, ஆசனத்திருத்தி, அன்னங் கறி முதலியவற்றைப் படைத்து நறுமலர்களி னால் அருச்சித்துத், தூபதீபங்களும் கர்ப்பூரா ராத்திரிகமுங் காட்டி, நமஸ்கரித்து, இன்சொற் களைச் சொல்லித், திருவமுது செய்வித்தாள்.

விருத்தப் பிராமணர் திருவமுது செய் தருளியவுடனே, மூப்பும் விபூதி தாரணமும் உருத்திராட்ச தாரணமும் நீங்கிப் பதினாறு பிராயமும், மன்மதனையும் வென்ற அழகும் உடையதாய்க் கலவைச்சாந் தணிந்து இரத் தினாபரணங்கள் தரித்ததாயுள்ள ஒரு காளை வடிவங்கொண்டிருந்தார். கற்பினிற் சிறந்த கௌரி, அதுகண்டு, நடுநடுங்கிக், கை நெரித் துத் திகைத்து, வேர்த்துக், கூசி ஒருபுறத்தே ஒதுங்கி நின்றாள். அப்பொழுது கலியாணத் தின் பொருட்டு அயலூருக்குச் சென்ற வைண வர்கள் மீண்டு வந்து வீட்டிற் புகுந்தார்கள். புகுதலும், காளை வடிவினராய் இருந்த

அந்தப் பிராமணர் நெற்றியில் விபூதியணிந்த ஒரு குழந்தை வடிவங்கொண்டு, காற் பெரு விரலைச் சுவைத்துக், கண்ணீர் தளும்ப வாய் விட்டழுதுகொண்டு, ஆடையின்மீது கிடந் தருளினார். கௌரியினுடைய மாமி, அது கண்டு கௌரியை நோக்கி, "இக் குழந்தை ஏது?" என்று கேட்டாள். அதற்குக் கௌரி, "தத்தனுடைய மனைவி இங்கு வந்து, 'இக் குழந்தையைச் சிறிதுபோது பார்த்துக்கொள்' என்று வைத்துவிட்டுப் போனாள்" என்றாள். என்னுமுன், மாமியும் மாமனும் மனங்கலங்கக் கண்கள் சேப்பக் கோபித்து, "எலும்புகளைப் பூண்டு சுடுகாட்டில் ஆடுகின்ற உருத்திர னிடத்தே அன்பு பூண்டவனுடைய குழந்தை யின் மேலே நீ பிரீதியுடையவளாய் இருக்கின் றாய். நீயும் எமக்காகாய்" என்று சொல்லிக், கௌரியைக் குழந்தையையுங் கொண்டு வீட்டை விட்டுப் போம்படி துரத்தினார்கள். தாயில்லாப் பிள்ளை முகத்தைப் பார்த்துத் தெருவினிடத்தே தளிர்கின்ற கௌரி சோம சுந்தரக் கடவுளைத் தன் மனசினுள்ளே தியா னித்துக்கொண்டு, உமாதேவியாருடைய மந் திரத்தை உச்சரித்தாள். உச்சரித்தலும் அழுத குழந்தை ஆகாயத்திலே இடபவாகனத்தின் மேலே சிவபெருமானாய்த் தோன்றக் கண்டாள். சிவபெருமான் தமதிடப்பாகத்துள்ள உமா தேவியாருடைய மந்திரத்தைச் செபித்த அந் தக் கௌரியை, அவ்வுமாதேவியின் வடிவாக் கிப், பலருங் கண்டு வணங்க, இடபத்தின் மேலேற்றித், தேவர்கள் பூமாரி பொழிய, ஆகாய மார்க்கமாக எழுந்தருளினார். பூமியிலுள்ளோர் கள் களிப்புற்று அதிசயித்தார்கள்.

## (இருபத்து நான்காவது)
## மாறியாடின படலம்

விக்கிரம பாண்டியன், தன் புத்திர னாகிய இராசசேகர பாண்டியனுக்கு முடி சூட்டிவிட்டுத், தான் சிவலோகத்தை அடைந் தான். இராசசேகர பாண்டியன், சிவபெருமான் ஆனந்த வடிவமாய் வெள்ளியம்பலத்தின்கண் நின்று செய்தருளுஞ் திருநிருத்தத்தில் வைத்த அன்பு மிகுதியினாலே பரத நூலொன் றொழித்து, மற்ற அறுபத்து மூன்று கலை களையுங் கற்றுச், செங்கோலோச்சி, அரசியற்று வானாயினான்.

அந் நாளிலே, சோழ நாட்டிலே, கரிகாற்சோழனென்பவன், அறுபத்துநான்கு கலைகளும் பயின்று கொண்டு, திருவானைக் காவில் எழுந்தருளியிருக்கின்ற சிவபெரு மானுக்கு அன்பு பூண்டவனாய், அரசு செய் வானாயினான். அச் சோழனுடைய வாசல் ஊடாக ஒரு புலவன் வந்து, இராசசேகர பாண்டி யனைக் கண்டு, "மகாராசாவே! எம்முடைய கரிகாற்சோழனுக்கு அறுபத்து நான்கு கலை களும் வரும்; உனக்கு அவைகளுள் ஒன்று வராது; அது பரதநூல்" என்றான். அவ் வார்த்தை மானத்தை மிக மூட்ட, இராசசேகர பாண்டியன், ஆகுலத்தின் மூழ்கிய மனத்த னாகிச், "சிவபெருமானுடைய நடனத்தை நானும் ஆடுதற்கு மனம் விரும்பியதே; இது வும் எம்பெருமானுடைய திருவருளே" என்று நினைந்து, பரதநூலைக் கற்று அவ்வழியே பரதமும் பயின்று வல்ல புலவர்களை வரு வித்து, அவர்களுக்கு வேண்டுவனவற்றை யெல்லாம் வெறுப்ப வெறுப்பக் கொடுத்துப், பரதநூலுங் கசடறப் பயின்றான்.

பாண்டியன், இக்கூத்துப் பயிலும் பொழுது தன்னுடம்பிலே மிக வருத்த நோயடைந்து, "இந்த வருத்தம் வெள்ளியம் பலத்தாடுஞ் சிவபெருமானுக்கும் உண்டே. பிரம விட்டுணுக்களாலுங் காணப்படாத

*நாளைய அறுவடைக்கு இன்றே விதைப்பதுபோல் நாளைய வெற்றிக்கு இன்றே திட்டமிடுங்கள்.*

திருவடிகளுள் ஒன்றே நோவும் வண்ணம் நெடுங்காலம் நிற்கின்றதே! ஐயையோ! இக் கூத்தைக் கற்று வருத்தமுற்றறிந்தும், இதை நான் பார்த்துக் கொண்டிருப்பதா தருமம்? பிறவிக் கடற்கரை காணும் நாள் வந்தடுப்பவர் யாவராயினும், அவருக்கெல்லாம் போக மோட்சங்களைக் கொடுத்தருளும் எம்பெருமான் செய்யும் இந்தக் கூத்தை நான் எப்படிப் போய்த் தடுப்பது? இது தகாது. ஆயினும், அருமைத் திருவடி வருந்துமே" என்று சிந்தித்து வருத்தமுற்றான். பின்பு, "இதற்கிதுவே துணிவு" என்று நினைந்து எழுந்து போய்ச், சிவராத்திரியிலே திருக்கோயிலை அடைந்து, சிவபெருமானுக்கு நான்கு யாமமும் விசேட பூசை செய்வித்து, வெள்ளியம்பலத் திருக் கூத்தைத் தரிசித்து வணங்கிக் கண்ணீரசோரச் சிரசின்மீது கைகூப்பி நின்று, "எம்பெருமானே! நின்ற திருவடியை எடுத்துவீசி எடுத்த திருவடியைக் கீழேயூன்றி, இன்றைக்கு அடியேன் காணும்படி மாறியாடித், தமியேனுடைய வருத்தம் முழுதையுந் தீர்த்தருளும். அங்ஙனஞ் செய்யாதொழிவீராயின் அடியேன் இறந்து விடுவேன்" என்று விண்ணப்பஞ் செய்து கொண்டு, சிவபெருமானெதிரே தன் உடைவாளை நாட்டி அதின்மேலே குப்புற விழப் புகுந்தான். புகுமுன், அன்பிற் கெளியராகிய சிவபெருமான், தமது இடப்பாதத்தை ஊன்றி, வலப்பாதத்தை எடுத்து வீசி, மாறியாடிக் காட்டினார்; பாண்டியனுடைய மனக்கவலையையும் மும்மலத்தையும் ஓட்டினார்; அவனைப் பரமானந்தக் கடலிலே வீழ்த்தினார். பேரின்பக் கடலுள் வீழ்ந்த பாண்டியன், தன் மனம் வாக்குக் காயம் என்னும் மூன்றுஞ் சிவபெருமானுடையனவேயாக, அன்பே வடிவமாய் நின்று, இங்ஙனந் துதிப்பானாயினான்:-

பெரியாய் சரணஞ் சிறியாய் சரணங்
கரியா கியவங் கணனே சரணம்
அரியா யெளியா யடிமா றிநடம்
புரிவாய் சரணம் புனிதா சரணம்.

நதியா டியசெஞ் சடையாய் நகைவெண்
மதியாய் மதியா தவர் தம் மதியிற்
பதியாய் பதினெண் கணமும் பரவுந்
துதியாய் சரணஞ் சுடரே சரணம்.

பழையாய் புதியாய் சரணம் பணிலக்
குழையாய் சரணம் கொடுவெண் மழுவான்
உழையாய் சரணம் முருகா தவர்பால்
விழையாய் சரணம் விகிர்தா சரணம்.

இருளாய் வெளியாய் சரணம் மெனையும்
பொருளா கநினைந் துபுரந் தரன்மால்
தெருளா தநடந் தெரிவித் தெனையாள்
அருளாய் சரண மழகா சரணம்.

அயனத் தனெனைப் படுமா டரவச்
சயனத் தவனைத் தருதத் துவநால்
வயனத் தவவா னவர்வா னவசேல்
நயனத் தவனா யகனே சரணம்"

இப்படித் துதித்து வணங்கி, "இந்தத் திருநடம் யாவரும் தரிசிக்கும்படி எக்காலத்தும் இப்படியே நின்றருளல் வேண்டும்; அடியேன் வேண்டும் வரம் இது" என்று விண்ணப்பஞ் செய்து, வணங்கினான். சிவபெருமான் அன்று தொடங்கி இன்று வரையும் அம்மாறியாடுந் திருக்கோலத் தினராயே நின்றருள்கின்றார்.

## பொல்லா வினைகளினை போக்கி அருள்வான்!

**பல்லவி**

நித்தமும் சந்நிதிப் பதியை நான் நாடுவேன்!
நீலமயில் வாகனனின் புகழ் பாடுவேன்!

(நித்த)

**அநுபல்லவி**

வித்தகனின் அருளாலே விலகும் தொல்லை!
வேலவனின் துணையிருக்கப் பயமே இல்லை!

(நித்த)

**சரணம்**

பூவரசு நிழலினிலே குடியிருப்பான்!
புண்ணியனோ எந்தனுக்கு அருள் கொடுப்பான்!
தேவர் குறை தீர்த்துவைத்த திருக்குமரன்!
தேடிவந்தேன் குறை தீர்ப்பான் அருட்குமரன்!

ஆற்றங் கரையமர்ந்த அழகு முகன்!
அருள் மாரி சொரிகின்ற உமையின் மகன்!
போற்றித் துதிப்போர்க்கு துணை வருவான்!
பொல்லா வினைகளினைப் போக்கியருள்வான்!

(நித்த)

-கி. குலசேகரன்-

# நான் வாழ்ந்தால் போதுமா?

– திரு வி.ரி. வேலாயுதம் அவர்கள் –

இறைவன் உலகத்தைப் படைத்து அதில் ஐம்பூதங்களாகிய நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் மூலமாக உயிர்களையும் படைத்து இவ்வுயிர்கள் வாழ்வதற்கேற்றதாக மரங்கள், செடிகள், காய்கள், கனிகள் யாவற்றையும் படைத்து, மேலும் அவர்களுக்குத் தேவையான விதத்தில் எல்லா உயிரினங்களுக்கேற்ற வகையில் இவை இயற்கை உணவாக அமையக் கூடியதாகவும் இறைவன் படைத்த இவ்வேளையில், இவ் அரிய இயற்கை உணவுகளையும், அவற்றின் சத்துக்களையும் ஏனோ தானோ என்று உதறித்தள்ளி விட்டு, தான் இரைதேடச் செல்வதுபோல் மற்றைய வாய்விடாப் பிராணிகளும் இறைவன் இயற்கையாகப் படைத்த உணவுகளைத் தேடப் போகும்போது அவற்றைக் கற்களாலும், தடிகளாலும் கதறக் கதற அடித்துக்கொன்று அவ் உடலைத் தின்னும் ஜீவகாருணியமற்ற செயலை எவ்வாறு கூறுவது. சிலர் இவ்வாறு தாங்கள் செய்யாது மற்றவர்களைக் கொண்டு பணம் கொடுத்து கொலை செய்து உண்டு கழிக்கிறார்கள். தாங்கள் கொலை செய்யவில்லை என்றும் மார்தட்டிக் கொள்ளுகின்றார்கள்.

உயிர்கள் ஒரு உடம்பைப் பெற்று வாழ்வதற்குக் காரணம் தம் பிராயத்து வினைகளை அனுபவித்து முடிப்பதற்கேயாகும். இந்த உயிரினை யாரும் கத்தியால் வெட்டவும் முடியாது, நெருப்பால் எரிக்கவும் முடியாது, துப்பாக்கியால் சுடவும் முடியாது. ஆன்மாவாகிய இந்த உயிர் என்றுமுள்ளது. அழிவற்றது. அனாதியானது. இதனை நாம் செயற்கை முறையில் கொன்று குவிப்பதால் யாது பயன்?

மச்சம், மாமிசம் உண்பவர்கள், மது அருந்துபவர்கள், உயிர்க்கொலை செய்பவர்கள் கடவுளை வழிபட வேண்டியதில்லை. தீட்சை பெறாதவர்களினால் செய்யப்படும் வழிபாடு கடவுளைச் சென்றடைவதில்லை. வழிபட்டாலும் பலன் கிடைக்கப்போவதில்லை. ஆயிரம் ஆயிரம் யாகங்கள் செய்தாலும், ஆயிரம் சகஸ்ர நாம அர்ச்சனை செய்வதை விட உயிர்களைக் கொன்று அவற்றை உண்ணாவிட்டால் அதிக பலன்களை இறைவனிடம் இருந்து பெறமுடியும். இதற்கு கண்ணப்ப நாயனாரை உதாரணம் காட்டுவர் சிலர். கண்ணப்பர் தமது இரு கண்களையும் இறைவனுக்குக் கொடுக்கலானார். நாம் அவரைப் போல் எமது கண்களைக் கொடுப்போமா? அவர் கொண்ட அன்பு நெஞ்சம் எங்களில் உள்ளனவா? இல்லையே!

வேறு உயிர்களைக் கொலை செய்கிறவர்களையும் வேறு ஒருவர் என்றோ ஒரு நாள் கொலை செய்யப்படப்போகிறார் என்பதையும் அவர் உணராமல் தனது நான் என்னும் வல்லமையால் வலிமையற்ற பிற உயிர்களை தன்னைப்போல் வாழவிடாமல் கொலை செய்து பாவத்தைத் தேடுகிறார். அதுவுமல்லாது தான் பாவம் செய்யவில்லை என்றும், தான் தனது கடமையைத்தானே செய்தேனென்றும் தப்பித்துக்கொள்ளுகிறார்கள். இவ்வாறு ஒருவரை ஒருவர் கூறிக்கூறி அனைவரும் தப்பிக்க முயல்கின்றனர். நாம் செய்வதுதான் எமக்குக் கிடைக்கும். இதைச்

சைவம் மட்டுமன்றி விஞ்ஞானமும் ஏற்றுக் கொள்கின்றது. நவீன விஞ்ஞானி நியூட்டன், ஒவ்வொரு தாக்கத்திற்கும் மறுதாக்கம் உண்டு என்று கூறுகின்றார் நீ பிறருக்கு எவ்வளவு நன்மை செய்தால் அவ்வளவு நன்மையும், தீமை செய்தால் அவ்வளவு தீமையும் கிடைத்தே தீரும். "நன்றும் தீதும் பிறர் தர வாரா" என்பது பழமொழி.

இன்று சைவ சமயத்தையும், அதன் தத்துவங்களையும் சைவர்களின் வாழ்வியல் ஆதாரங்களையும் அறிந்து மேலை நாட்டவர் தாவர உணவுகளை உண்ணத் தொடங்கியுள் ளனர். மேலைநாட்டின் பல பாகங்களில் தாவர உணவுக் கடைகளும், கழகங்களும் ஆரம்பித்து கொள்கை விளக்கமும் செய்து வருகின்றனர்.

இக்காலகட்டத்தில் சிறுவர், சிறுமியர், வாலிபர், முதியோர், நோயாளிகள் அனைவருக்கும் பொருந்தக்கூடிய ஒரு நிறை உணவு பாலே ஆகும். இப்பாலை எந்த விஞ்ஞானிகளும் இதுவரை கண்டுபிடிக்கவில்லை. இயற்கை மூலிகையான புல், வைக்கோல், இலை, குழை, தவிடு, பிண்ணாக்கு போன்ற கழிவுப் பொருட்களைக் கொண்டு தொழிற்சாலை மூலம் எந்த விஞ்ஞானிகளாலும் சுத்தமான பாலை உண்டாக்க முடியவில்லையே. ஆனால் இயற்கை அன்னையானவள் பசுவிடம் இவற்றைக் கொடுத்து அவள் எமக்கு தேவையான அளவு பாலை ஒவ்வொரு நாளும் காலை மாலை தந்துகொண்டேயிருக்கின்றாள். ஏன்? பல வருடங்களுக்கு அதாவது தன் காலம் வரைக்கும் தந்து வருகிறாள். அவ்வாறான அந்த உயிர்ப் பிராணியை ஒரு நிமிடத்தில் கொன்று அழித்துவிடுவது எவ்வாறு பொருந்தும். என்னே! ஈன இரக்கமற்ற மனிதரின் கொடும்செயல். அதுவுமல்லாது அது இயலாத காலத்திலும் அதைக் கொன்று புசிக்கிறார்களே! மேலும் உயிரினங்களில் ஒன்றுக்கொன்று உணவு கடத்தப்படும்போது உணவுச் சங்கிலியில் $_{10}\backslash^{1}$ பங்கு சக்தி மட்டுமே சேமிக்கப்படுகின்றது. இதனால் விலங்கு உணவு பொருளாதார ரீதியில் பாதகமானதே ஆகும். உடல் பருமன், அதிக கொழுப்பினால் கொலஸ்ரோல், இரத்த அடைப்பு ஆகிய நோய்கள் விலங்குணவினால் ஏற்படுகின்றது.

விலங்குணவைக் காட்டிலும் அதிக புரதம் கொண்டது தானியங்களே. பயறு, கௌப்பீ, சோயா, அவரை போன்றவற்றில் அதிக புரதங்கள் உள. குப்பையில் விளையும் கீரை, பொன்னாங்காணி, அகத்தி, வல்லாரை, முருங்கை, கொய்யா, தூதுவளை போன்ற எந்த இலைகளை எடுத்தாலும் மிகவும் மலிவும், அதிக சத்துக்களும் கொண்டனவாகும். இயற்கை உணவும், சத்துள்ள உணவுக்கும் ஒரு குடும்பத்துக்கு அதிக பணம் தேவை இல்லை என்று ஆய்வு கூறுகின்றது.

பகைவனிடத்திலும் அன்பு கூருங்கள். எம்மில் தவறில்லையேல் அவனது அறியாமையை உணரச் செய்யுங்கள். அவர்கள் அறியாமையால் செய்கிறார்கள். கடவுளே! அவர்களை மன்னித்து விடுங்கள் என்று யேசு கூறுகின்றார். அவன் ஒரு தவறும் செய்யாதவனேயாவான். அவன் தவறு செய்யாதவனாக இருப்பதினால்தான் பிறர் தவறைத் தேடுகிறான். அவன் மனிதரில் தெய்வமானவனாக இருக்க முடியும். யேசு கூறியதுபோல் தவறு செய்யாதவன் எவனோ அவனே வந்து கல்லால் அடிக்கட்டும். உலகினில் பிறந்த உயிரினங்கள் யாவும் இன்பமும் துன்பமும் இரண்டும் சேர்ந்ததுதான் வாழ்க்கை. அதுபோல நல்லது கெட்டது, சுக துக்கம், நன்மை தீமை, பழி பாவம், விருப்பு வெறுப்பு அனைத்தும் அமைந்ததே வாழ்க்கை. மனிதனாகப் பிறந்தவன் தவறு செய்யாமல் வாழமுடியாது. சிறு

வயதிலேயே எமது மூதாதையர் எமக்கு மாமிச உணவுகளைப் பழக்கிவிட்டிருக்கலாம். எமக்கு அறிவு, புத்தி வளர வளர இதிலிருந்து நாம் விடுபட வேண்டும். உயிர்களிடத்தில் அன்பாக இருக்க வேண்டும். துன்புறுத்துபவர் களுக்காக இறைவனை வேண்டுங்கள். கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், சொல் லுக்குச் சொல், வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்பவர்களால் எப்படி வாழ முடியும். "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல்" கதிரவனும், வருணனும் ஏன் இயற்கை அன்னையும் நல்லவர்க்கும் தீய வர்க்கும் ஒருங்கே மழை, ஒளி, காற்று அனைத்தையும் தருகின்றார். நாமும் எம்மவர் நல்லவர், வல்லவர், எவ்வுயிர் என்று பாராது அனைத்து உயிர்க்கும் நல்லதைச் செய்பவர் களாக அவைகளைத் துன்புறுத்தாது வாழ இடம் கொடுப்போமாக.

இது இவ்வாறிருக்க ஞானிகள் அன்பு மார்க்கத்தில் இதயத்தில் வைத்து இறைவ னை வழிபடுவர். இறைவனும் அவர்க்கன்பராகி வெளிப்பட்டு நிற்பர். இந்நிலை எங்களுக்கும் வரவேண்டுமானால் நாம் உயிர்களிடத்தில் அன்புள்ளவர்களாக வேண்டும். இதுவே இறை வனை அடையும் குறுகிய பாதையாகும்.

வள்ளலார் ஜீவகாருண்ணியம் பற்றிய கருத்தில் மிக ஆழமாக இருந்தார். ஒவ்வோர் உயிரிலும் இரக்கம் கொள்ளவேண்டுமென்றார். வள்ளலார் வாடிய பயிரைக் கண்டபோது அவரும் வாடினார். இரக்கமே தனது உயிர் என்றார். எனவே, நாமும் இயற்கை அன்னை தந்த இவ்வுலகில் பகுத்தறிவில்லா ஜீவன் களுக்கு, பகுத்தறிவு படைத்த மனிதராகிய நாங்கள் நாமும் வாழ்ந்து, மற்றைய உயிரினங் களையும் துன்புறுத்தாது நல்வாழ்வு வாழ் வோமாக.

ஆண்டவனுக்கென வைத்த அமுதை அடியவராகிய ஒரு ஏழைக்கு உணவாக அளித்தாலும் அது ஆண்டவனைச் சென்றடை யும். அதே ஆண்டவன் படைத்த உயிரினத்தை கொலை செய்து அதன் ஊனினை உண்ட பின் பிரார்த்தனை செய்தோ, யாகம் செய்தோ வழிபட்டாலும் அது ஆண்டவனைச் சென் றடையாது. அதில் எவ்வித பலனும் இல்லை. ஆண்டவன் படைப்பு எல்லோர்க்கும் சொந்த மானதே.

## தீயதை அழித்து நற்றமிழ் தந்த வேல்

எங்கிருந்தோ வேல்பறந்து ஓடி வருகுது
அபயமென வேண்டிட வேல் கண்ணில் தெரியுது
சந்நிதிப் பதியில் துதிபாட வேல் துள்ளி வருகுது
தன்னடியார் துயர்தீர்க்க முன்னில் ஓடிவருகுது
செங்குருதி பீரசூர உடல் பிளந்த வேல்
தோகைமயில் சேவல் உருவாக்கித் தந்தகைவேல்
மங்கும் அடியார் வாழ்வுயர மனதில் நின்ற வேல்
வகை தொகையான திருப்புகழில் சந்தத்தமிழ் தந்தவேல்.

-சின்னப்பு தனபாலசிங்கம்-

*வாய்ப்புக்காகக் காத்திருக்காதே, வாய்ப்பை ஏற்படுத்திக்கொள்.*

# வழித்துணை 41

—ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள்—

01 எங்களுக்கு சிறிதாக இருக்கின்ற ஓர்விடயம்
மற்றோர்க்கு மிகமிகப் பெரிதாயும் இருந்திடலாம்
சிறிது பெரிதென்று எதையும்நீர் நோக்காமல்
எதற்குமோர் மதிப்பளித்தல் எல்லோர்க்கும் நன்றாம்.

02 பாசம் வாழ்க்கையில் பரிணாமம் ஏற்படுத்தும்
இரக்கம் இணையில்லா இறையின்பம் சேர்க்கும்
பாசத்திற் காட்பட்டு இரக்கத்தை இழந்திட்டால்
இல்வாழ்க்கை சிறக்கும் இறையின்பம் அகலும்.

03 வேலிவாசல் கோணல்நீக்கி நேராக்க விரும்புதல்போல்
மனங்களையும் கோணாமல் நேராக்க விரும்பவேண்டும்
வேலிவாசல் நேராக்கல் பார்வைக்கே அழகுதரும்
மனங்களைநாம் நேராக்கல் மானிடர்க்கே அழகுதரும்.

04 பாலாகப் போனாலும் தேனாகப் போனாலும்
பரமசிவன் உடல்கழுவத் தீர்த்தம் என்று ஆதல்போல்
நானாகப் போனாலும் நீயாகப் போனாலும்
நாமாக மாறுதலே ஆலயத்திற் கர்த்தமாகும்.

05 அரிசியாகப் போனாலும் பருப்பாகப் போனாலும்
அவனடியில் படைத்தபின்னால் பிரசாதம் ஆதல்போல்
ஆணாகப் போனாலும் பெண்ணாகப் போனாலும்
அடியாராய் மாறுதலே கோயிலதன் பொருளாகும்.

06 பூவாகப் போனாலும் இலையாகப் போனாலும்
பூசைக்குப் பின்னரது வில்வமென்று ஆதல்போல்
மனிதராகப் போனாலும் அசுரராகப் போனாலும்
புனிதராக மாறுதலே பூசையதன் பொருளாகும்.

*துன்பங்களை சந்திக்கத் தெரிந்தவனுக்கு தோல்வியே இல்லை.*

07 வாழ்க்கை அமையவில்லை என்றெண்ணி வருத்தமுற்று
வாழா வெட்டியாக வாழ்வுதனை ஓட்டலிலும்
வாய்த்த வாழ்வு சிறப்பதற்கு அயராதுபாடுபடும்
வாழ்வாங்கு வாழஅது வழித்துணையாய் அமைந்துவிடும்.

08 சித்திரங்கள் வரைகையிலே சிலகோடு வரிமாறி
ஒத்துவர மறுத்திட்டால் ஒருவாறு வரைதல்போல்
உத்தமரோ உத்தமியோ வழிதவறிப் போய்விட்டால்
பத்திரமாய்ப் புத்திசொல்லி பாதையிடல் பிழையாமோ.

09 சிற்பங்கள் செதுக்குகையில் சிற்றுளிதான் சறுக்குண்டு
அற்பபிழை வந்திட்டால் முயன்றதனை முடித்தல்போல்
பற்றுடையார் சிலபேரும் புரிந்திடாமல் தவறிழைத்தால்
கற்றுணர்ந்தார் அதைமறந்து கைகோர்த்தல் தவறாமோ.

10 ஊருக்குள் உமக்கேதான் நற்பெயர்கள் உண்டென்று
பாருக்குள் பட்டுடுத்துப் பவனிகள் வருவதிலும்
ஊருக்கு உம்மாலோர் நற்பெயர்தான் கிடைப்பதற்காய்
பாருக்குள் பாடுபடும் ஊருயர நீருயர்வீர்.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னபணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

| காசுக்கட்டளை | காசோலை |
|---|---|
| செ. மோகனதாஸ் | செ. மோகனதாஸ் |
| சந்நிதியான் ஆச்சிரமம், | க.இல - 7342444 |
| தொண்டைமானாறு. | இலங்கை வங்கி, |
| தொ.இல - 0213219599, 0212263406 | பருத்தித்துறை. |

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com

கஷ்டங்கள் மட்டும் இல்லையென்றால் போராடும் எண்ணமே நமக்கு இல்லாமல் போய்விடும்.

# திருவாசகம் - ஒரு பார்வை

– முருகவே பரமநாதன் அவர்கள் –

திருவாசகமென்ற திவ்விய நூலின் திருப்பெயர் எவ்வண்ணம் உருவானதென்றோ, இவ்வேட்டின் ஆசிரியர் பற்றியோ நாம் தொட வில்லை. இப்பனுவலின் மொழி தமிழ்தான். எதன் தழுவலோ, வழிநூலோவன்று. இது ஆங்கிலத்தில் எழுந்திருந்தால் எனச் சிந்தித் தால் விடை வேறுவிதமாய் அமையும். அப் படிப் பார்ப்பின் மொழிவழி அது உயர்ந்த இடத்தைப் பெற்றிருக்கும். ஏன் அவ்வேடு மதிக் கப்படவில்லையோ எனின். பெற்றிருக்கிறது. காலத்தையும் கடந்து நிலவுகின்றது. மொழி வியாபகத்திலது எள்ளத்தனையும் குறைய வில்லை. ஆனால் உலகப் பொதுமொழியாம் ஆங்கிலத்திலெழுந்த பல இலக்கியங்கள் பன்னாட்டாராலும் மதிக்கப்படுகிறது. இப் பார்வையில் திருவாசகம் தமிழினத்தின் இத யம் கவர்ந்த இலக்கியம். இந்நூலைப் போப் ஐயர் தமிழிற் படித்து உள்ளம் பறிபோய்க் கரைந்தாரன்றோ! பின்னர் ஆங்கிலத்திலும் மொழிமாற்றம் செய்தார். யார் பாடினார், யாரைப் பாடினார் எவ்வண்ணம் பாடினார், இதனுட்கிடையென்ன என்பதன்று வினா. தமி ழிலே படித்து தான்பெற்ற இன்பத்தை உலகத் துக்குக் காட்டி மகிழ்ந்தாரவர். இத்தனைக்கும் அவர் தம் மதத்தை மதித்தார். இதுவும் ஓர் மதிப்பு. சாக்கியரான ஒருவர் தன்னுடையோடு கல்லெறிந்து வரலாற்றில் இடம்பெற்றாரே! இவ்விருவரும் செயலிற் செயலின்மையும், செயலின்மையிற் செயலுங் கண்டவர்கள். மதமாற்றத்துக்காக வந்த கிறீத்தவ துறவிகள் தமிழை எழுத்தெண்ணிப் படித்துத் தமிழுக்கு நிறையச் சேவை செய்துள்ளனர். தாவீது அடிகள் தனிநாயகம் அடிகளார் இதற்குச் சான்று. இவர்களாற் தமிழ் உயர்ந்தது, வளர்ந் தது, திருக்குறள், திருவாசகம், பகவத்கீதை போன்ற பல நூல்கள் மேற்கத்தைய மொழி களிலும் மொழிபெயர்க்கப்பட்டன. இந்தச் சேவை உலகளாவிய தொண்டு பல்லாயிரத் தமிழ் நூல்களிலே திருவாசகம் பலரை ஈர்த் தது. அடைக்கலப்பத்தை நிதம் பாராயணம் செய்யும் வேற்று மதத்தவரும் உளர்.

இந்த மேதகு நிலைக்கு மொழியறிவே அடிப்படை. தூய தமிழைத் தாம் சார்ந்த துறையெல்லாவற்றிலும் பயன்படுத்தினர். விவிலியமே தமிழாயது. இது ஒரு மார்க்க நூலாயினும் சைவர்களும் படித்தனர். புதியன புகுந்தால் இலகுவாய் ஈடுபடும் நம்மவர் இதிலே இன்றும் சமர்த்தர். இதனால் வரும் அப ஜெயத்தைப்பற்றி ஞானதீட்சண்யத்தோடு பார்ப்பதில்லை. வெளிநாடு சென்றோர் பெரி தும் மாறிவிட்டனர். எனினும் மறு மதத்தவர் இப்படித் தொழிற்படுவதில்லை இவ்வியூகத் தில். ஆங்கிலத்திலே திருவாசகம் எழுந்திருந் தாற் தமிழிலும் ஒரு வெளியீடு வந்திருக்கும் அவ்வளவுதான். ஆனால் உலக மொழிகளில் உலாவரும். திறமான புலமையெனில் பிற நாட்டார் அதை வணக்கஞ் செய்ய வேண்டும் என்றார் பாரதி. அதேபோது - இறவாத புகழுமுடைய தமிழ் நூல்கள் எழவேண்டும் எனவும் கூறினார். இப்படி நோட்டம்விடின் சமய இலக்கியங்களில் திருவாசகம் தனித் துவம் பெற்றுள்ளது. கிறீத்தவர், பௌத்தர், இசுலாமியர்களிற் பலர் இதைப் படித்து உள் வாங்கிப் போற்றியுள்ளனர்.

திருக்கேதிஸ்வரத்தில் நடைபெறும் திருவாசக விழாவில் ஒரு இசுலாமியப் பெரியர் "திருவாசகம்" பற்றிச் சொற்பொழிவாற்றியதைக் கேட்ட பலரில் அடியேனும் ஒருவன்.

சமய வேத நூல்களைப் புனித என அடை கொடுத்துப் பேசுவர். புனித குர்ஆன். பரிசுத்த வேதாகமம், புனித திரிபீடகம், பரிசுத்த கீதை என்பன இவ்வரிசையைச் சேர்ந்தன. இத்தனைக்கும் பிறர் மதிக்கும் அளவுக்கு நாம் மேன்மைப்படுத்துகிறோமா? என்றாற் பதில் தயக்கம்தான். இப்புனித ஏடு ஒரு இலக்கியமா, தமிழ்நூலா, சமய நூலா, சாத்திரமா, தோத்திரமா, தத்துவமா, வரலாறா, கதையா, பக்திரசம் சொட்டும் பனுவலா, மத சம்பந்தமானதா இப்படியெல்லாம் சிந்தித்தாலும், பட்டிமன்றம் போடும் நூலல்ல. கவி அரங்கம் செய்யும் நூலுமன்று. வெளியிடங்களிலும், தாயகத்திலும் பட்டிமன்றம் போடுவதும், கவியரங்கம் செய்வதும் சைவ சமயத்தையும் மக்களையும் ஏளனம் செய்வதாகும். எனவே அரட்டையரங்கத்துக்கு உரிய கருப்பொருளன்று. சைவப்பெருமக்களே உளமாரச் சிந்தியுங்கள். தெய்வம் இகழேல் என்பது ஔவை வாக்கு. தெய்வ வாக்குகளான புனித் திருமுறைகள் போஷிக்கப்பட வேண்டியன. விவாத மேடைக்கு உரியனவுமன்று.

மணிவாசகர் இரவல் வாங்கவில்லை, பிச்சையெடுக்கவில்லை, கடன் வாங்கவில்லை, கொப்பியடிக்கவில்லை. இதற்கு முதனூல் இல்லை, மொழிபெயர்ப்புமல்ல. தன்னிகரில்லாத் தமிழிலே உயர் தனிச் செம்மொழியிலே தாம் உணர்ந்த நிலையில். தெய்வமென்பதோர் சிந்தையுண்டான பின் பாடினார். இதை நாயேனைத் தண்டிகள் பாடுவித்த நாயகனை எனப் பாடினார். ஆயிரக்கணக்கான பாடல்களையும் பாடவில்லை. பாடியவற்றில் அழிந்து போனதாய் கறையான் தின்றதென வரலாறேதும் இல்லை. அவர் திருவாய் மலர்ந்த இப் புனித ஏட்டை எம்பெருமானே தன் கைப்பட எழுதியதாக வரலாறுகள் கூறுகின்றன. தன் உள்ளுணர்வின் வெளிப்பாடாய் எழுந்த இப் பிரபந்தம் படிப்போரை உருக்கி ஆத்ம விடுதலைக்கு வழிப்படுத்தும். பாவம் நிறைந்த 656 திருப்பாசுரங்களால் அலங்கரிக்கப்படும் திருவாசகம் ஊழிக்காலம் வரை நின்று நிலைக்கும் பெருமைக்குரியது. தினமும் படிப்போம், எங்கும் படிப்போம். எல்லோரும் படிப்போம். முற்றோதுவோம். இத் திருவாசக ஏட்டைச் சிவலிங்கமாகப் பாவித்துப் பூசை செய்யும் வழக்கம் இன்றும், நடைமுறையில் இருக்கின்றது. இதுவே திருவாசகத்தின் பெருமைக்கு ஒரு எடுத்துக்காட்டாகும். பணப் பெருக்கம் உள்ளோர் திருவாசக நூல்களை அச்சடித்து இலவசமாக வழங்கி உலகெலாம் பரப்புவோமாக. உலகப் பொதுநூல் திருவாசகம்.

மார்கழித் திங்களில் ஆலயங்களில் திருவாசகம் மட்டுமே ஓதவேண்டும் என்ற நியதி இன்றும் போற்றப்படுவதில் இருந்தே திருவாசகத்தின் தனித்துவம் விளங்குகிறது.

எனவே எம் மொழி, சமயம், பண்பியல்- நாகரிகம் சமுதாய இயல் போன்ற துறைகளைப் பேணிப் போற்றுவோமாக.

இந்த உடல் நமக்கு அளிக்கப்பட்டது தெய்வீக அருளைப் பெறுவதற்காகவே! அதனால் உடல் நன்கு பராமரிக்கப்பட வேண்டும். சுத்தமாகவும், தூய்மையாகவும், அழுக்கு, வியாதி, வருத்தம், தோல்வி மனப்பான்மை இவற்றால் பாதிக்கப்படாமலும் உடல் பாதுகாக்கப்பட வேண்டும்.

*உன்னால் சாதிக்கமுடியாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒருபோதும் நினைக்காதே.*

# ஆலயங்கள் உளவள ஆற்றுப்படுத்தல் நிறுவனங்கள்

**– செல்வி கஸ்தூரி பரமானந்தன்** அவர்கள் –

வாழ்க்கை என்பது ஒரு புதிர். சிந்தித்துச் செயலாற்றினால் இன்பமானது. சிந்தியாது மனம் போன போக்கில் போனால் அது துன்பமான முடிவையே தரும். வாழ்க்கை என்ற நாடகத்திலே வெற்றிகள், தோல்விகள், ஆசைகள், பூசல்கள், அழுகைகள், சிரிப்புக்கள், எழுச்சிகள், வீழ்ச்சிகள் என அனைத்தையும் சம நோக்கோடு வரவேற்கும் கடமை நமக்கு உண்டு. இன்பமும் துன்பமும் மனித வாழ்க்கையில் ஊடுருவி நின்றாலும் அவற்றை ஒன்றாக நினைக்கும் மனவலிமை எம்மிடையே இல்லை. இன்பத்தில் துள்ளிக் குதிக்கும் நாங்கள்தான் துன்பம் வருகையில் துவண்டு விடுகிறோம். மனநெருக்கீட்டிற்கும் குழப்பத்திற்கும் ஆளாகின்றோம். அவற்றிலிருந்து விடுபட்டு மன அமைதியுடனும் மகிழ்ச்சியுடனும் வாழ்வதற்கு ஆலயங்கள் பெரிதும் துணைபுரிகின்றன.

ஆலயம் என்பது அலைகின்ற மனதைப் பக்குவப்படுத்தி லயப்படுத்தும் இடம் எனப் பொருள் தருகின்றது. அமைதியையும் தூய்மையையும் எடுத்துக்காட்டும் பக்தி நிலையங்களாக இவ் ஆலயங்கள் விளங்குகின்றன. அன்போடு பழகிப் பண்போடு வளர ஆலய வழிபாடு பெரிதும் உதவியாக உள்ளது. ஒருவன் எவ்விடத்திலிருந்தும் இறைவனை வழிபடலாம். ஆனால் அவனுக்கு ஆலயத்தில் கிடைப்பது போன்று மனதை ஒருவழிப்படுத்துவதற்கான சூழல் அமைவதில்லை. இதனால்தான் மனித வாழ்வில் ஆலய வழிபாடு முக்கிய இடத்தை வகிக்கின்றது. "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்பது முதுமொழியாகும். எவ்வாறு பசுவின் பால் அதன் மடியிலிருந்து சுரக்கின்றதோ அவ்வாறே ஈசனது அருள் சுரக்கும் இடமாக ஆலயம் விளங்குகிறது. ஆலய வழிபாட்டின் மூலம் எமது உடலும் உள்ளமும் தூய்மை அடைகின்றது. ஆலயத்திற்குச் சென்று சில நிமிடநேரமாவது சிந்தனைகளைச் சிதறவிடாது மனதை ஒரு நிலைப்படுத்தி தியானம், அர்ச்சனை, தோத்திரம் ஆகியவற்றில் ஈடுபடுவதனால் அன்று முழுவதுமே மனதில் சந்தோசமும் நிம்மதியும் நிலைத்திருக்கும்.

எங்கு சென்றாலும் எத்தனை துன்பங்கள் ஏற்பட்டாலும் இறைவனை நினைக்கச், சிந்திக்க, தம் துன்பங்களை இறக்கிவைக்க என ஆலயங்களை ஊரின் முக்கிய இடங்களிலும், ஆற்றங்கரைகளிலும், வயல் வெளிகளிலும், அரசமர நிழல்களிலும் அமைத்து வழிபடுகின்றனர்.

"கோவில் விளங்க குடி விளங்கும்"
"கோயிலில்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்"

என்பது எமது மூதாதையர் கூற்று.

ஆலயங்கள் நம் துன்பங்களைத் தாங்கும் சுமை தாங்கிகள். சுமை தாங்கிகள் இருக்கும்போது நாம் நமது தலையில் துன்பங்களைச் சுமப்பது சரியா? எனவே நாம் ஆலயங்களிற்கு சென்று மனச் சஞ்சலங்களை விண்ணப்பித்து தாயாக, தந்தையாக, குருவாக, நண்பனாக அவன் தாள் வணங்கி நமது துன்பங்களையும் கஷ்டங்களையும் சொல்லி முற்றாக சரணடைவோமாயின் மனச் சஞ்சலங்கள் நீங்கி மனம் அமைதியடைவதுடன்

புத்துணர்ச்சி ஏற்படும். மேலும் ஆலயங்கள் நல்லொழுக்கத்தினை வளர்க்கவும், தீய குணங்களை அழிக்கவும், பக்திப் பயிரைச் செழித்தோங்கச் செய்யவும், ஆன்மாவைத் தூய்மையாக்கவும் வழியமைக்கின்றன. ஆலயத்தின் தோற்ற அமைப்பு, அது அமைந்திருக்கும் சூழல், அங்கு நடைபெறும் நித்திய, நைமித்திய கிரியை யாவும் மனதை லயப்படுத்தும் கருவிகளாக அமைகின்றன. மேலும் ஆலய வழிபாட்டால் மனிதனது தியாக மனப்பான்மையானது மென்மேலும் வளர்ச்சியடைகின்றது.

ஆலயங்களில் இருந்துவரும் மணி ஓசை, மங்கள ஓசை, சங்கொலி, மந்திர ஓசை, திருமுறை பாராயணம், கற்பூரதீப ஆராதனைகள், ஆசாரியாரின் பயபக்தியோடு கூடிய பூசைகள், கிரியைகள் என்பன தூய்மையற்ற மனத்தையும் பரிசுத்தமாக்கி விடும். மேலும் திருக்கோயில் வழிபாட்டால் மனிதனது தியாக மனப்பான்மையானது மென்மேலும் வளர்ச்சியடைகின்றது. தான் செய்யும் எச்செயலும் இறைவன் செயல் என்றும் தனது கெட்ட சிந்தனைகளை ஒழித்து இறைவனை தியானித்து தம்மை ஈடுபடுத்துகின்றனர். அலையும் மனத்தை உடைய ஆன்மாக்கள் ஆலய வழிபாட்டால் உயர்ந்த ஆன்மீகப் பயண வழிகளை இலகுவாக அறிந்து கொள்கின்றன. ஆலயங்களைக் கூட்டுதல், பூக் கொய்தல், மாலை கட்டல், பூந்தோட்டங்களை அமைத்தல், ஆலய மணி அடித்தல், குற்றேவல் புரிதல், அடியார்களிடத்து அன்பும் பரிவும் கொண்டிருத்தல், இறை புகழ் பாடல், திருவிளக்கேற்றல் போன்ற சரியைத் தொண்டில் ஈடுபடுவதால் சுயநலம் நீங்கி, உள்ளத்தூய்மையும், இறை பக்தியும் ஏற்படுவதுடன் சமூக வாழ்விலும் அவற்றைக் கடைப்பிடிப்பதனால் மனம் மேலும் தூய்மை அடைகின்றது. ஆலயமானது சமுதாயத்தில் மக்கள் எல்லோரிடமும் ஒழுக்கத்தை ஏற்படுத்தி ஒருநிலைப்படுத்தும் இடமெனலாம். ஏனெனில் ஆலயங்கள் உற்சவ காலத்தில் தூய்மை அடைகின்றது. கிராமம் தூய்மையடைகின்றது, மக்கள் மச்சம், மாமிசம் விட்டு இன்ப துன்பங்களை மறந்து இன்முகத்துடன் வரவேற்றல் போன்ற பல நல்ல பண்புகள் மக்களிடம் ஏற்படுகின்றது. அது மாத்திரமல்ல விருந்தோம்பல் பண்பும் மக்களிடம் ஏற்படும். அனைவரும் சேர்ந்து கூட்டுறவுடன் செயற்படுவதால் ஒருவருக்கொருவர் புரிந்துணர்வு, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, ஒற்றுமை ஏற்படுகின்றது. மேலும் ஆலயங்களில் நடைபெறும் சொற்பொழிவுகள், பிரசங்கங்கள் வாயிலாக நல்ல அறக்கருத்துக்களை பெற்றுக்கொள்ள முடியும்.

ஆலயங்கள் சென்றவுடன் பக்தன் அங்குள்ள உருவங்களில் அவற்றின் சாந்த நிலையில் லயப்படுகின்றான். இந்த உருவங்கள் பக்தனின் சிந்தனைகளை ஒருமுகப்படுத்த அவன் ஒருமுக சிந்தனை உடையவனாக தன்னைப் பழக்கிக்கொள்ள சிறந்த ஒரு சாதனமாக ஆலயங்கள் அமைகின்றன. ஒருமுக சிந்தனையுடையவர்கள் உலகியலில் உயர்ந்த நிலையில் காணப்படுகின்றனர். முக்கியமாக மாணவர்களது சிந்தனையைச் சிதறடிக்கச் செய்யாது சிந்தனைகளைக் குவியச்செய்து கல்வி கற்பதற்குரிய பயிற்சிப்பள்ளியாக ஆலயத்தின் உருவவழிபாட்டு நிலை இருக்கின்றது. மேலும் ஆலயங்களில் தீட்டப்பட்டிருக்கும் ஓவியங்கள், சிற்பங்கள்மூலம் புராண இதிகாசங்கள் சித்தரிக்கப்படுகின்றன. அதன்மூலம் நாம் நல்லனவற்றை சிறிது நேரம் சிந்திப்பதுடன் எமது ஆணவம், அகங்காரம், மமதை, பெருமிதம், அதிகாரம், செருக்கு இவற்றைப் போக்கி நற்செயலில் ஈடுபடக்கூடியதாக இருக்கின்றது.

*பொறுமை உள்ள மனிதன் நிச்சயம் வாழ்க்கையில் வெற்றி பெறுவான்.*

வாழ்க்கையில் துன்பம் வரும்போது எல்லாம் மக்கள் ஆலயங்களுக்குச் செல்வதும் பிரார்த்தனையில் ஈடுபடுவதும் நல்லவை நடக்க வேண்டுமென வேண்டுதல் செய்வதும் மக்கள் கடவுளின் மேல் வைத்துள்ள நம்பிக்கையாகும். "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்ற வகையில் உள நெருக்கடிக்கான தீர்வுகளில் ஆலயங்களே சிறப்பிடம் வகிக்கின்றன. மக்கள் தமது இன்னல்களைப் போக்குவதற்காக மனமுருகி இறைவனை நோக்கி தீமிதித்தல், கரகம் எடுத்தல், பாற்குடம் எடுத்தல், கற்பூரச்சட்டி எடுத்தல், மடை பரவுதல் போன்ற நேர்த்திகளை நிறைவேற்றி மனச்சாந்தியடைகின்றனர். மற்றும் சிறு பிள்ளைகளுக்கு துன்பங்கள், துயரங்கள் ஏற்படுமிடத்து ஆலயங்களுக்குச் சென்று குழந்தையை விற்று வாங்குதல், குழந்தைகளுக்கு மொட்டையடித்தல் போன்ற செயற்பாடுகளின் மூலம் மனநெருக்கடிகளைத் தீர்த்து சாந்தியும் சமாதானமும் அடைகின்றனர்.

குடும்பத்தில் இறப்பு முதலிய துன்பங்கள் நிகழ்ந்து விட்டால் வீட்டில் உள்ள உறவினர்கள் இறந்தவருக்குரிய இறுதிக் கிரியைகளைச் சமய முறையில் ஆற்றுகின்றனர். பின்னர் இறந்த திதி, மாசியம், சிரார்த்தம், சாந்திக் கிரியைகள், ஞாபகார்த்த ஆராதனை போன்ற சடங்குகளை நடத்துவதன் மூலம் மனதில் ஒரு அமைதியையும் ஆறுதலையும் மக்கள் அடைகின்றனர். உதாரணமாக எமது நாட்டில் கீரிமலையில் பிதிர்க் கடன் நிறைவேற்றுதல் சிறப்பம்சமாக விளங்குகின்றது.

வழிபாட்டிடங்களாகத் திகழும் திருக்கோயில்கள் கலைக் கூடங்களாகவும், கலைகளைப் போதிக்குமிடங்களாகவும், தலைசிறந்த கல்விச் சாலையாகவும், மருத்துவ சாலைகளாகவும், நீதிமன்றங்களாகவும், திக்கற்றவர்களிற்குப் புகலிடமளிக்கும் இடங்களாகவும், மக்களின் சகல தேவைகளையும் பூர்த்தி செய்யும் நிறுவனங்களாகவும் விளங்குகின்றன. மனிதனின் பிறப்பிலிருந்து இறப்புவரை அவன் சார்ந்த சமய முறையிலேயே செயற்பாடுகள் அனைத்தும் நடைபெறுகின்றன. அதற்கு எந்த மதமோ அல்லது மனிதனோ விதிவிலக்கல்ல. பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட காலத்திலே இன்ப துன்பங்களிளெல்லாம் இறைவனையே நாடுகின்றான். மனித வாழ்வில் உளவள ஆற்றுப்படுத்தலில் ஆலயங்கள் முக்கிய பங்கினை வகிக்கின்றன என்றால் அது மிகையாகாது.

---

### நசுங்கிய கிண்ணம்

செல்வன் ஒருவன் தன் வீட்டு விருந்திற்கு வருமாறு இறைவன் கண்ணனை வருந்தி அழைத்தான். அழைப்பை ஏற்றுக் கண்ணனும் அவன் வீட்டிற்கு வந்தார். விருந்திற்கான ஏற்பாடுகள் மிகுந்த தடல்புடலாக இருந்தன. கண்ணனின் முன் பல வகையான உணவுப் பொருள்கள் உள்ள ஏராளமான பாத்திரங்கள் வைக்கப்பட்டன. என்னென்ன உணவுப் பொருள்கள் உள்ளன என்று ஒவ்வொரு பாத்திரமாகப் பார்த்துக்கொண்டே வந்தார் கண்ணன். அங்கிருந்த பாத்திரங்களில் ஒரு கிண்ணம் மட்டும் ஓரம் நசுங்கிப் பல விரிசல்களுடன் இருந்ததைக் கண்டார். அந்தக் கிண்ணத்தை எடுத்து அவர் அதிலிருந்த உணவை உண்ணத் தொடங்கினார். இதைப் பார்த்த செல்வன் கண்ணனின் திருவடிகளில் விழுந்தான். "இறைவா! கிண்ணத்தைத் தேர்ந்தெடுத்ததைப் போலத்தானே மனிதர்களையும் தேர்ந்தெடுப்பீர். வலியவர்களை விட்டு விட்டு மெலியவர்களுக்கு ஆதரவு தருவீர். எளியவர்களுக்கு எப்பொழுதும் இரங்கும் உங்கள் அருள் உள்ளம்" என்று சொல்லிக் கண்ணீர் வடித்தான்.

*திட்டங்களில் வெற்றி என்பது இல்லை. திட்டமிடல் என்பதிலே வெற்றி தங்கியுள்ளது.*

# கந்தர் அநுபூதி காட்டும் முருக அவதாரங்கள்

– செல்வி ச. சரணியா அவர்கள் –

முருகனுடைய அருள்பெற்ற அருணகிரிநாதர் திருவாய் மலர்ந்தருளிய நூல்களுள் கந்தரனுபூதியும் சாலச்சிறந்தது ஆகும். இது ஐம்பத்தொரு மந்திர மலர்களைக் கொண்டு புனைந்த ஒரு தெய்வீக மாலையாகும். இது முருகனது புகழை அலங்கரிக்கும் ஆரமாகும். மேலும் இதனை பெருமைமிக்க தாயுமானவர் பின்வருமாறு சொல்லத் துணிகிறார்.

"கந்தரநுபூதி பெற்றுக் கந்தரநுபூதி சொன்ன
எந்தையருள் நாடி யாருக்குநாள் எந்நாளோ"

கந்தரனுபூதி முருகனுடைய; திருவுருவம், ஊர்தி, படை, கொடி, ஈதல் அறம் என்று பல விடயங்களின் ஆதார அடிகளை தாங்கி நிற்கின்றது. இவற்றுள் முருகனுடைய அவதாரங்களை ஆராய்ந்தறிவதே இக்கட்டுரையின் அவா ஆகும்.

## ஆறுமுகன்

தேவர்களின் வேண்டுதல்களின்படி சிவனுள் குடிகொண்டிருந்த ஐந்து முகங்களைக் கொண்டு சக்தியின் ஒரு முகத்தையும் கொண்டு ஆறுமுகமாக அவதரித்தார். இவ்வவதாரமே முருகனுடைய ஆறுமுகன் என்ற அவதாரம் ஆகும். இதன் பண்புகளை கந்தர் அனுபூதி மூன்றாம், ஐந்தாம் செய்யுளில் காணலாம்.

".....முகமாறும் ஒழிந்தும் ஒழிந்திலனே
அகமாடை மடந்தையர் என்று அயரும்....."

என்ற ஐந்தாம் செய்யுளின் வரிகளின் வழி வலிமைமிக்க மாயையை நீக்க வல்லவன் ஆறுமுகன் என்றார் அருணகிரிநாதர்.

## ஷண்முகன்

திருச்செந்தூர் கோவிலில் ஷண்முகராக எழுந்திருக்கும் முருகனுடைய இவ் அவதாரமானது ஆறுமுகங்களை ஒன்றாக அன்னை பராசக்தி சேர்த்து அழகு முகமாக மாற்றியபின் ஷண்முகன் எனப் பெயர் பெற்றார். இதனைக் கந்தபுராணம்,

"ஏவர்தம் பாலுமின்றி எல்லைதீர மலங்குன்ற
மூவிரு குணனுஞ் சேய்க்கு முகங்களாய் வந்த"

என்ற வரிகள் சான்றாகின்றது. இதனைக் கந்தர் அநுபூதியும் இவ் அவதார வடிவம் பற்றி பேசியுள்ளது. இதனை,

"யானோ மனமோ எனை ஆண்ட இடம்
தானோ பொருளாவது ஷண்முகனே"

*வெற்றி என்னும் உயரத்தை அடைய ஏணியாக இருக்கும் ஆயுதம்தான் தன்னம்பிக்கை.*

இவ்வரிகள் ஊடாக ஆகாயமா? தண்ணீரா? நிலமா? நெருப்பா? காற்றா? உமது உண்மைப் பொருள் எது? என்று வினாவழியாக ஷண்முக அவதாரத்தை உருகிப் பாடியுள்ளார் அருணகிரி.

**சுவாமிநாதன்**

பிரணவ மந்திரத்தை முறைப்படி கேட்ட சிவபெருமானுடைய திருச்செவிகளில் பிரணவத்தின் பொருளை ஓதியருளினார். முருகப்பெருமான் தந்தைக்கு உபதேசம் செய்தமையால் சுவாமிநாதன் என அவதாரம் பெற்றார். இதனை கந்தர் அனுபூதியின் இருபதாவது செய்யுளின்

"அரிதாகிய மெய்ப்பொருளுக்கு அடியேன்
உரிதா உபதேசம் உணர்த்தியவா"

என்ற வரிகள் ஊடாக உண்மைப் பொருளைப் பெறத் தகுதியடைய உபதேசித்தருளிய வனே! என்று பொருள் தாங்கிநின்று சுவாமிநாத அவதாரத்திற்கு சான்றாக அமைகின்றது.

**சுப்ரமணியன்**

"மைந்தா! குமரா! மறை நாயகனே" என்ற நாற்பத்தாறாவது செய்யுள் அடியினை கொண்ட கந்தர் அநுபூதியில் புலப்படுத்தும் முருக அவதார வடிவம் சுப்ரமணியன் ஆகும். அதாவது இளமையும் இறைமையும் மிக்க நிலையில் முருகப்பெருமான் வேதங்களுக்கு தலைவனான அவதாரமாகும்.

**காங்கேயன்**

சிவனுடைய நெற்றிக் கண்ணில் இருந்து ஆறு தீப்பொறிகள் தோன்றி சரவணப் பொய்கையில் ஆறு தாமரைகளில் ஆறு குழந்தைகளாக மாறின. இக் குழந்தைகளை கங்கை சுமந்ததால் காங்கேயன் என்ற அவதார பெயர் பெற்றார் முருகன். இதனை,

"கங்காநதி பால! க்ருபாகரனே" என்றும்,
"நதிபுத்திர! ஞானசுகாதிப! அத்..."

என்ற செய்யுள் ஆதாரத்தினூடாகவும் அருணகிரிநாதர் தனது கந்தர் அனுபூதியில் காங்கேயன் அவதாரத்துக்கு சான்று தந்துள்ளார்.

**கிரவுஞ்ச பேதனர்**

இம் முருக அவதாரமானது தாரகாசூரனை வதம் செய்யச் சென்ற வீரபாகு தேவரும் அவர்தம் துணைவர்களும் கிரவுஞ்ச மலையின் குகையில் சிக்கி இருளில் வழி தெரியாது திகைத்து மயக்கமுற்றனர். இதனை அறிந்த முருகப்பெருமான் கிரவுஞ்ச மலையை பிளந்து வீரபாகு தேவர்களை விடுவித்தார். இவ் அவதார வடிவமே கிரவுஞ்ச பேதனர் ஆகும். இதனைக் கந்தரனுபூதியில்

"கிளைபட்டு எழுசூர் உரமும் கிரியும்
தொளைபட்டு உருவத்தொடு வேலவனே"

*சரியான பாதையைத் தேர்ந்தெடுத்தால்த்தான் வாழ்க்கையில் வெற்றியடைய முடியும்.*

என்ற செய்யுள் அடிகள் கிரௌஞ்ச மலையை துளைத்துப் போகுமாறு வேலை ஏவிய வேலவனே என்றார் அருணகிரிநாதர்.

**வள்ளி கல்யாண சுந்தரர்**

கந்தர் அனுபூதியில் பன்னிரெண்டாவது செய்யுளடியான,

"செம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்"

என்ற வரிகள் ஊடாக வள்ளியை கவர்ந்தவனான முருகப் பெருமானின் அவதாரத்தை பொதித்துள்ளார் அருணகிரி சுவாமிகள்.

**சூரசங்காரன்**

மாமரமாகி நின்ற சூரபத்மனை அழித்து சேவலாகவும் மயிலாகவும் ஞான வடிவம் கொடுத்து மயிலை வாகனமாக்கி அருள்பாலித்த வடிவமாகும். இவ் அவதாரத்தை அருணகிரிநாதர் கந்தர் அநுபூதியில் "கார்மாரா மிசை காலன் வரின் கலபர்" எனத் தொடங்கும் பத்தாவது செய்யுள் சூரசங்கார அவதாரத்தை முன்னிருத்தி மயில் வாகனத்தில் வருவாய் என்று அருணகிரி பாடியருளினார்.

இவ்வாறு அழகு தெய்வமான திருமுருகனின்மீது பாடப்பெற்ற கந்தரனுபூதியில் மேற் காட்டிய முருக அவதாரங்களை காட்டிலும் குகன், குமரன், வேலன், வடிவேல், மயில்வாகனன் என்ற அவதார புருஷராகவும் முருகனை வர்ணித்துள்ளார் அருணகிரிநாதர். இத்தகைய கந்தரனுபூதியை கற்றுணர்ந்து பாசத்தளைகளை விட்டெறிந்து மன ஒருமைப்பாட்டையெய்தி ஞானநிலை அடைய முயல்வோம்.

மின்னும் கதிர்வேல் விகிர்தா! நினைவார்
கின்னம் களையும் கிருபை சூழ் சுடரே.

ஆடை, ஆபரணங்களை இறைவனுக்குக் கொடுக்க பொருளாதாரம் இடமளிக்க வில்லையே என்று ஏங்கவேண்டாம். அதற்குப் பதிலாக "மலர்களை அளித்தாலே மகிழ்ந்திடு வான் இறைவன்" என்கிறது தர்மசாஸ்திரம். பஞ்சபூதங்களில் ஒன்றான ஆகாயத்தைக் குறிப்பன மலர்கள் என்கிறது ஜோதிடம். மலர்களிலிருந்து கிடைக்கும் தேனுக்கு முதலிடம் அளித்து "யோகவாஹி" என்று பெருமைப்படுத்துகிறது ஆயுர்வேதம். எந்தப் பொருளோடு இணைந்தாலும் அதன் தரத்தை உயர்த்தி இனிமை தருவது தேன். அதனால் மலரினுடைய குணம் தேனிலும் முழுமையாகத் தென்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது. தான் மட்டுமல்லாமல் தன்னிடமிருந்து பெறப்படும் தேனுக்கு கூட சேர்ந்த பொருளின் தரத்தை உயரவைக்கும் பண்பை உருவாக்கிய மலர்களிடமிருந்தும் நாம் கற்றுக்கொள்ள வேண்டியவை ஏராளம்.

நமக்கு முன்னேற வாய்ப்புக் கிடைக்கும்போது நாம் முன்னேறுவதுடன் நம்முடன் இருப்பவர்களையும் அழைத்துச் சென்றால்த்தான், நமது முன்னேற்றம் பெருமைக்குரியதாகும்.

*முடியாது என்பதை பிறகு சிந்தியுங்கள். எப்படி முடிப்பது என்பதை எப்பொழுதும் சிந்தியுங்கள்.*

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

(தொடர்ச்சி...

| | | |
|---|---|---|
| க. தயாபரன் | கொழும்பு | 3மூடை அரிசி |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| ஸ்ரீ சிவராம் ரேடேர்ஸ் | யாழ்ப்பாணம் | 1புட்டி பருப்பு |
| சி. பகீரதன் | கனடா | 5000. 00 |
| கா. விஜயசுரேஸ் | சுவிஸ் | 20000. 00 |
| இ. சிவராஜா கரவெட்டி | (கல்விப்பணி - மாதாந்தம்) | 15000. 00 |
| ரகுராம் அனுஷாலினி, சாய் உதீஸ் | லண்டன் | 5000. 00 |
| கு. தியாகராஜசர்மா (மணி ஐயர்) | நீர்வேலி | 1500. 00 |
| செ. ஹனிஸ், செ. ரேசிகா | வெள்ளவத்தை | 15000. 00 |
| த. றோஸ்மலர் | துன்னாலை | 4000. 00 |
| குகன் ராணி | ஜேர்மன் | மரக்கறி 1மூடை அரிசி |
| பவானி சித்திரவடிவேலு | சாவகச்சேரி | 1500. 00 |
| சி. அசிதன் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| சி. அன்புமலர் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| க. அரவிந்தன் | வெள்ளவத்தை | 5000. 00 |
| அ. சஞ்சீவ், அ. வைஸ்ணவி | கம்பர்மலை | 1மூடை அரிசி |
| சி. சோமகுலசேகரம் | கரவெட்டி | 1000. 00 |
| வீ. ரமேஸ்குமார் குடும்பம் | மட்டுவில் | 7000. 00 |
| இ. ஜெயரூபன் | சுவிஸ் | 5000. 00 |
| பா. கேதீஸ்வரன் | அச்சுவேலி | 10000. 00 |
| திருமதி த. தவேந்திரன் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| ச. ரஜின் | பிரான்ஸ் | 5500. 00 |
| T. குமாரதாசன் | யாழ்ப்பாணம் | 500. 00 |
| N. தவராஜா | திருகோணமலை | 2000. 00 |
| த. ஸ்ரீதரன் | உரும்பராய் | 1000. 00 |
| செ. சுப்பிரமணியம் | சாவகச்சேரி | 5000. 00 |
| யோகேஸ்வரி காந்தரூபன் | வவுனியா | 500. 00 |
| சாவித்திரி செல்வரெத்தினம் | யாழ்ப்பாணம் | 500. 00 |
| செல்வநாயகி ஞானசுந்தரம் | கரவெட்டி | 500. 00 |
| லோ. சதீஸ் நீர்வேலி தேங்காய், தேங்காய் எண்ணெய், பருப்பு, 1மூடை அரிசி | | 5000. 00 |
| திருமதி ஜெ. ரவீந்திரநாதன் | கொழும்பு-13 | 2000. 00 |
| வி. துஷி, வி. கஜி | சுன்னாகம் | 2000. 00 |

*வெறும் அதிர்ஷ்டத்தை மட்டும் தேடிச் செல்லும்போதுதான் நாம் கால்கள் இடறி விழுகிறோம்.*

| | | |
|---|---|---|
| ஸ்ரீ. கர்ஷினி, ஸ்ரீ. கர்ஷிதா | தாவடி | 2000. 00 |
| K. யோசினி | நெல்லியடி | 1000. 00 |
| S. ஸ்ரீகரன் | அச்சுவேலி | 1480. 00 |
| திரு வாகீசன் | இணுவில் | 1000. 00 |
| இராம ஜெயபாலன் | சங்கானை | 1000. 00 |
| செல்வி அ. கந்தையா | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| நாச்சியார் செல்வநாயகம் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| க. நிரஞ்சன் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| தங்கராஜா நினைவாக | புலோலி | 5000. 00 |
| Dr S. ராசலிங்கம் | அச்சுவேலி | 2000. 00 |
| உ. குகரூபன் மூலம் விநாயகம்பிள்ளை நினைவாக | பருத்தித்துறை | 2000. 00 |
| சோ. சந்திரசேகரம் | நயினாதீவு | 5000. 00 |
| திரு அரியரத்தினம் குடும்பம் | கொழும்பு | 5000. 00 |
| திரு குமாரசாமி குடும்பம் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| க. தெய்வேந்திரம் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| க. அருணகிரிநாதன் | சுழிபுரம் | 3000. 00 |
| நா. முகுந்தன் | மாதகல் | 1000. 00 |
| ஜெ. இராஜகோபால் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| வி. தயாநிதி | கிளிநொச்சி | 1000. 00 |
| கா. தங்கமலர் | கிளிநொச்சி | 500. 00 |
| சி. சிதம்பரம் | இருபாலை | 5000. 00 |
| குமாரசாமி சோமசுந்தரம் | தெகிவளை | 5000. 00 |
| T. பத்மநாதபிள்ளை | கொழும்பு | 3000. 00 |
| கா. வக்கிரன் | சுன்னாகம் | 5000. 00 |
| R. தவராஜா | குப்பிளான் 1மூடை அரிசி | 2000. 00 |
| ந. வரதராஜா | மூளாய் | 5000. 00 |
| சுசிலாதேவி நவரத்தினம் | கரவெட்டி | 1000. 00 |
| திரு கௌரிபாலன் | கரவெட்டி | 5000. 00 |
| S.M. ராஜதுரை | வட்டுக்கோட்டை | 5000. 00 |
| வி. ஞானசோதி | கனடா | 5000. 00 |
| S. செல்வராஜா | கனடா | 1000. 00 |
| லோ. ராகுலன் | கனடா | 5000. 00 |
| இ. இந்துமதி | கனடா | 50 கனேடிய டொலர் |
| தையல்நாயகி | கல்வியங்காடு | 500. 00 |
| K. சிவனேசன் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| த. குணரத்தினம் | நீர்வேலி | 1000. 00 |
| T. சிவகுமார் | தெல்லிப்பழை | 5000. 00 |

(தொடரும்...

*செய்யத் தெரிந்தவன் சாதிக்கிறான். செய்ய முடியாதவன் போதிக்கிறான்.*

# விஞ்ஞான உச்ச வளர்ச்சி மனிதனுடைய சிவசிந்தனையைக் குழப்புகின்றது

– திரு பு. கதிரித்தம்பி அவர்கள் –

விஞ்ஞான வளர்ச்சி அசுர வேகத்தில் அதி உச்சப்படியைத் தாண்டிவிட்டது. எங்கும் எவையிலும் விஞ்ஞானம் செறிந்து விஞ்ஞானத்தையே காணக்கூடியதாக இருக்கின்றது. எல்லாச் செய்தொழில்களும் விஞ்ஞான பரிமாற்றத்தில் அடங்கிவிட்டன. விஞ்ஞானமின்றி மனிதன் வாழ முடியாத நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளான். இதனால் மனிதன் சிவநெறியைக் கடைப்பிடிக்க முடியாத நிலைக்கு ஆளாகியுள்ளான்.

விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் தோன்ற முன் மனிதன் வெளியுலகிலுள்ள ஒருவருடன் தொடர்பு வைக்க வேண்டுமாயின் எத்தனை மாதங்கள் பிரயாணஞ் செய்து, பொருள்கள் செலவு செய்து வெளியிடத்திலுள்ள தொலைவான இடங்களில் வசிக்கின்ற மக்களுடன் பேசி தனது கருமத்தைச் செய்து முடித்தான். அன்றித் தபால்மூலமும் எத்தனை நாட்கள் கழிந்து விடயத்தை அறிய முடிந்தது. அதி வேக பிரயாண சாதனங்கள் அன்று இருக்கவில்லை. இதனால் அன்று வாழ்ந்த மக்கள் தங்கள் கருமங்களை விரைவாகச் செய்ய முடியாமலிருந்தது. இன்று விஞ்ஞானிகள் பலர் தோன்றி விஞ்ஞானக் கருவிகளைக் கண்டு பிடித்துள்ளனர். அதி நவீன பொறிமுறை இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இதனால் விஞ்ஞான முறையில் கோள்களைக் கண்டு பிடித்தான். சந்திரமண்டலம் சென்று, ஆராய்ச்சி செய்து வந்துள்ளான். வேறு கோள்களையும் நாளுக்குநாள் கண்டுபிடித்துக்கொண்டிருக்கிறான். அதி விரைவாக பல மைல் தூரம் செல்லும் விரைவு விமானங்களைக் கண்டு பிடித்துள்ளான். இன்னும் தொலைத்தொடர்புகள் அதி விரைவாக ஏற்படுத்தியுள்ளான். வெகு தொலைவிலுள்ள ஒருவருடன் முகம் பார்த்துக் கதைக்கவும் வழி சமைத்துள்ளான். நொடிப்பொழுதில் வீட்டிலிருந்தவாறே முகம் பார்த்துக் கதைத்து அங்கு வளர்க்கும் நாய்களையும் பார்க்கும் நிலைக்கு வந்துள்ளான். நொடிப்பொழுதில் வெளியுலகில் உள்ளவர்களுடனும் கதைத்து மனிதனை உறவுகொள்ள வைத்துள்ளான். இப்பொழுது உலகம் கையுள் அடங்கிவிட்டது. இந்த வளர்ச்சியினால் மனிதன் சிவசிந்தனையை மறக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளான்.

ஆறறிவு படைத்த மனிதன், விஞ்ஞானிகளையும் இறைவன் படைத்தான் என்பதைச் சிறிது சிந்தித்துப் பார்க்கவேண்டும். இறை அருள் உள்ள சிவபக்தன் பசுக்கள் கதறும் வேதனையைப் பார்த்து சகிக்க முடியாது இறந்து கிடந்த மூலன் உடலில் தனது உயிரைப் புகுத்தி, திருமூலன் வடிவில் மாடுகளை ஓட்டிச் சென்று ஒவ்வோர் வீடுகளிலும் ஒப்படைத்த சிவனடியானை (திருமூலன்) உலகம் போற்றுகின்றது. அந்தச் சிவனடியான் (திருமூலன்) செய்ததுபோல் தற்பொழுதுள்ள விஞ்ஞானிகளால் செய்ய முடியுமா? அதுபோல் அருணகிரிநாதர் தனது உடலை மலையடியில் வைத்துவிட்டு, இறந்துகிடந்த கிளியின் உடலில் புகுத்தி பறந்து சென்று மலர்களை முருகனுக்குப் பறித்து வைத்ததையும் அடியார் உலகம் நன்கு அறியும். இதுபோல்

விஞ்ஞானிகளால் செய்யமுடியுமா? ஒட்டி சுட்டான் கல்மாடு (நந்தி) புல் தின்றதை ஒல்லாந்த தளபதி கண்ணாரக் கண்டு பதை பதைத்து தன்னை மன்னிக்கும்படி பூசகர் தீர புத்திரரைக் கேட்டது உலகம் நன்கு அறியும். இந்த உண்மைகளை மனிதன் நன்கு உணர்ந்து, விஞ்ஞானத்திலும் பெருமை வாய்ந்தது சிவநெறித் தொண்டர்கள் செயல் என்பதை மனிதன் உணர வேண்டும்.

இப்பொழுது கொரோனா நோயினால், இலட்சக்கணக்கான மக்கள் உயிரிழந்துள்ளனர். விஞ்ஞானிகளால் இந்நோய் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது. விஞ்ஞானிகளும் இந்நோயினால் மடிந்தார்கள். இருந்தும் விஞ்ஞானிகள் இந்நோய் பரவாமல் தடுக்க மருந்துகளைக் கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்நோய் உலகை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கின்றது. இந் நோயைக் கட்டுப்படுத்தி, வாழவிடுவதற்கு இறையருள் ஒன்றுதான் வேண்டப்படுகின்றது. இவற்றை (உலக மக்களை) படைத்து காக்க வேண்டிய பொறுப்பும் இறைவன் கையிலுள்ள தென்பதை அடியார்கள் உணர்கிறார்கள். "படைத்தவன் படி அளப்பான்" என்று அடிய வர் கூறுவதுபோல், மக்களைப் படைத்த இறைவன் மக்களைக் காப்பான் என்று இறை வனை வேண்டுகின்றனர்.

மாணிக்கவாசக சுவாமிகள் அருளியது போல் அவனருளாலே அவன்தாள் வணங்கி என்ற பாடலடிகளைக் கவனிப்போம். இறைவன் எப்படியுள்ளார் என்பதை,

"பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி"

இத் தன்மைகளையுடைய சிவபெருமான் எம்மைக் கைவிடான் என்று அருளுகின்றார்.

விஞ்ஞான சிந்தனையால் நன்கு கவரப்பட்ட வெளிநாட்டில் வாழும் இலங்கைத் தமிழர் சிலர் தம் நாட்டிலுள்ள கோவில்களுக்கு கோபுரம் கட்டாது ஊரில் வந்து பெரிய மாட மாளிகைகளைக் கட்டி புறாக்கள், வௌவால்களை குடியிருக்க வைத்துவிட்டு பராமரிக்க கூலியாட்களையும் வைத்துவிட்டு வெளிநாட்டில் வாழுகின்றார்கள். இவர்களுக்கு ஞான ஒளி பிறக்கவில்லை. இதனால் முன் வினையையும் நீக்கப்பெறாது அடுத்த பிறவியில் ஐந்தறிவுடைய உயிரினமாகப் பிறக்கப் போகின்றோமென்று உணராது சிவ சிந்தனையும் பெறாது இறக்கப்போகின்றார்களே என்று ஞான ஒளி படைத்த தமிழர்கள் வருந்துகிறார்கள். திருவருள் கூடப்பெற்ற, வெளிநாட்டு தமிழர்கள் தமது சொந்தநாடாகிய இலங்கையில் வந்து பெரிய கோபுரம் தமது ஊரிலுள்ள ஆலயங்களுக்குக் கட்டி பராமரிக்க நிதியுதவியும் அளித்து, ஊரிலுள்ள ஏழைகளுக்கு வீடுகளும் கட்டிக்கொடுத்து, பொன்னும் பொருளும் எம்முடன் வராது; தர்மமே என்று உணர்ந்து தருமமே வருவனவென்ற மனநிறைவுடன் செல்கின்றனர்.

கோயிலில்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம், கோபுரமில்லாத கோயில்கள் ஊரில் குடியிருக்க வேண்டாமென்ற மன எழுச்சியுடன் வெளிநாடு செல்கின்றனர். இவர்கள் வினைகள் நீக்கப்பெற்று மோட்சமடைவது திண்ணம். சந்நிதியான் இருக்கப் பயமேன்?

*முடிந்த பிரச்சனைகளுக்காக வருந்தாமல், வரும் காலத்தைத் துணிந்து எதிர்கொள்.*

# நாம் செல்லும் பாதை

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

நாம் எங்கே போய்க்கொண்டிருக்கின்றோம்! என்பதை இன்றைய சிந்தனைக்கு எடுத்துக்கொள்வோம்.

எமது வாழ்க்கை வளமாக அமைய வேண்டுமானால், நாம் ஆன்மீகத்திலும், லௌகீகத்திலும் சில ஒழுங்குகளைப் பின்பற்றியே ஆக வேண்டும். ஆன்மீகத்தில் நேரம் செலவழிப்பதால், எமது சாதாரண நடவடிக்கைகளுக்கு பொழுது போதாமல் போய்விடும் என்றும் வயது போக, முதுமைப் பருவம் வர, நாம் சமய வாழ்வு வாழ்ந்தால் போதும் என்றும் நாம் நினைப்போமானால், அது எமக்கு நஷ்டத்தையே விளைவிக்கும். இது எமது அறியாமையையே சுட்டி நிற்கும் எனலாம்.

எமது வாழ்வு எமது சமயத்தோடு பின்னிப் பிணைந்துள்ளது. சமயச் சடங்குகள் எமது பிறப்பிலிருந்து இறப்புவரை சங்கிலித் தொடராக இணைந்து இருப்பது எமக்கோர் வரப்பிரசாதமாகும். எமது சமயம் இறை வழிபாட்டினை எமக்குச் சொல்லித் தந்ததோடு நின்று விடவில்லை. அவற்றோடு கூட பல தரப்பட்ட மனித விழுமியங்களையும் நாம் கடைப்பிடித்தொழுக வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது. விழுமியங்கள் அற்ற வாழ்வு விடிவு அற்றது. கண்ணிருந்தும் பார்வையற்ற நிலையே இவ்வாழ்வாகும்.

நாம் பண்பாடின்றி, நாகரிகமின்றி, மனிதநேயமின்றி, மிருக வாழ்வு வாழ்வதற்கு, எக்காரணத்தையும் நாம் எளிதில் கூறிவிட முடியாது. ஏனெனில் உலகின் பல பகுதிகளில் மனித இனம் ஆடை கூட இன்றி நாகரிக வளர்ச்சி அடையாமல் இருந்த வேளையில் எமது இனம் தரும நெறியில் வாழ்ந்து ராஜபோகங்களையும் அனுபவித்திருந்தமை எமது பழமை மிக்க வரலாறுகள் கூறும் உண்மைகளாம். ஆனால், இன்று நாம் எமது முன்னோரின் பண்பாட்டை, பக்தியை, நாகரிகத்தை, மனித நேயத்தை அடியொற்றித்தான் வாழ்கின்றோமா? "இல்லை" என விடையளிக்கத் தயங்கினாலும் அதுதான் உண்மை, நிஜம்.

நாம் பல துறைகளில் எமது முன்னோரிலும் பார்க்க வளர்ந்திருக்கலாம். விஞ்ஞான ரீதியாக உலகத்தைச் சுருட்டி உள்ளங் கைக்குள் அடக்கி வைக்கும் நிலைக்கு மனிதன் முன்னேறிவிட்டான். ஆனால் வாழ்க்கையின் அடித்தளமான பண்பாடு, பயபக்தி, பொறுமை, இரக்கம், வாய்மை ஆகிய சீலங்களில் இருந்தும் மனித இனம் சிறிது சிறிதாக விலகிப் போகின்றதோர் உணர்வு எமக்குத் தோன்றவில்லையா?

மக்கள் இப்போது இயற்கையை விட்டு செயற்கையாக வாழத் தலைப்பட்டுள்ளனர். நாகரிகம் என்ற போர்வையில், அநாகரிகமான செயல்கள் எம்மை ஆட்சி செய்ய ஆரம்பித்துள்ளன. நடை, உடை, பாவனை என்ற மூன்றிலுமே எம்முள் பலர் முற்றாக மாறியுள்ளனர். உணவு வகைகளில் ஏகப்பட்ட மாற்றங்கள். இது நாம் அன்றாடம் காணும் உண்மை. இதன் விளைவு ஏகப்பட்ட புதிய நோய்களுக்கு நாம் இலக்காகின்றோம் இரையாகின்றோம். உடையோ, சொல்லத் தேவையில்லை, காஞ்சிப் பட்டுடுத்தி கஸ்தூரிப் பொட்டு வைத்து தேவதைபோல் நடந்து வந்த எம் மெல்லியலார், இன்று உடுத்தும் ஆடைகள் நாம் சொல்லித்தான் மற்றவர்கள் அறிய வேண்டும் என்றில்லை. நிமிர்ந்து பார்க்கவே

கூசும் பாவனையில் சில உடைகள்; சிக்கன மான சில உடைகள். எத்தனை காரணம் காட்டினாலும் எந்த அர்த்தத்திலும் இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. சமய உணர்வு எம்மவரிடம் ஆழமானதாக அமைந்துள்ள தாகத் தெரியவில்லை. ஏற்றுக்கொள்ள முடி யாத அளவுக்கு இன்றைய நிலைமாறி வருகிறது! தலை வாரிப் பூச்சூடி கொண்டை போட்ட காலம் போய், இன்று மெல்லியலாரின் அழகான கூந்தல் அவிழ்த்து விடப்பட்டுக் காற்றில் அலைகின்றது. தலைவிரிகோலமாக நின்ற அவல நிலை, கையில் சிலம்பேந்திய கண்ணகியினது. எனவே, எமக்கேன் இந்தக் கோலம்? கொண்டை போட்டுக் கொள்ளவும் பின்னிப் பூச்சூட்டிக் கொள்ளவும் நாம் ஏன் தயங்கவேண்டும்? இது எம்முடைய பாரம் பரியம் இல்லையா? கலாசாரமில்லையா? அந்நிய கலாசாரத்தில் அத்தனை மோகமா? நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும்! இனி, நாம் நடக்கவேண்டியவற்றை நோக்குவோம்.

இதன் முதல் படியாக இளம் தலை முறையினரிடையே பக்தி ஒழுக்கத்தை வளர்க்க பெற்றோரும் ஆசிரியர்களும் முன்வர வேண்டும். பிள்ளைகளுக்குரிய கடமைகள், விருந்தோம்பல், ஒழுக்கம், பெண்களுக்குரிய கடமைகள், குரு பக்தி, சகோதர பாசம், தர்ம சிந்தை, பரோபகாரம், வாய்மையின் அவசியம், வாக்குத் தவறாமை, நேர்மை, நிதானம், ஜீவகாருண்யம், விடாமுயற்சி, மாறாத விசுவாசம், செய்நன்றி மறவாமை, உண்மை நட்பு, சினம் கொள்ளாமை, பொறுமை கடைப்பிடித்தல் ஆகிய நற்பழக்கங்களை வளரும் தலைமுறையினருக்கு அவர்கள் மன தில் பதியும் வண்ணம் கதைகளாக, உதா ரணங்களாக எடுத்துக் கூற வேண்டும். அதற்கு உதாரணமாக நாமே நடந்து காட்டிவிட்டால் இரு சாராருக்கும் இது நன்மை பயக்கும் அல்லவா?

ஒன்றை ஆரம்பிக்கும்போது, பிள்ளை யார் சுழிபோட்டு எழுத வேண்டும் என்பதில் இருந்து, பெரியவர்க்கு ஒரு பொருளைக் கொடுக்கும்போதோ, பெறும்போதோ இரு கரங் களையும் உபயோகிக்க வேண்டும் என்பது வரை நாம் குழந்தைகட்குச் சொல்லியாக வேண்டிய நிலையில் இன்று நாம் உள்ளோம். விதிவிலக்குகள் இதற்கு இருந்தாலும் அனு பவத்தில் நாம் காணும் தவறுகளை நாம் அசமந்தப் போக்கில் விட்டுவிடக் கூடாது. ஏற்கனவே எமக்கும் எமது குழந்தைகட்கும் இடையே பெரிய இடைவெளி ஒன்று உரு வாகி உள்ளது. எல்லாவகையிலும்தான். அதனை மேலும் பெரிதாக்க நாம் விடக் கூடாது. நாம் விழிப்படைந்தாக வேண்டும்.

பெற்றோரை மகிழ்விப்பது, கௌரவிப் பது புத்திரர் கடமை என்பதற்கு ஸ்ரீராமன் தந்தை சொற்படி ஆரணியம் சென்றமை உதாரணம் ஆகும். இக்கதை நாம் அறியாததா? “அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்” என்பதுவும் “விருந்துக்கழகு விருப்புடன் அளித்தல்” என்பதும் நாம் அறியாத வாசகங் களா? “குல மக்கட்குத் தெய்வம் கொழு நனே” என்ற ஒரு வாக்கியம் போதுமே எம் பெண்களைக் கற்பின் திலகங்களாய் ஆக்கு வதற்கு; குரு பக்தியினால் கைகூடாதது ஒன் றுமே இல்லை. இஃது இன்றைய மாணவ பரம்பரையினருக்கு மிகவும் தேவைப்படும் ஒரு வாசகம். சகோதர பாசமும் மரியாதை பேணலும் எத்துணை அவசியம்! அண்ணன் தந்தைக்குச் சமம். தம்பி பிள்ளைகளுக்குச் சமம் என்கிறது இராமாயணம். சகோதர மரி யாதை சேர்ந்த வாழ்க்கையே சிறந்த வலிமை, பலம் என்பதை மகாபாரதம் எமக்குக் கற்றுத் தந்துள்ளது. தருமம் தலை காக்கும். பரோப காரமே பாரில் பரம தர்மமாகும். எனவே, அறம் கூறும் எமது ஆன்மீக வழிகளையும் பின்பற்றி எமக்கும் பிறர்க்கும் நற்பயன் தேடுவோமா?

*உன் மனச்சாட்சிதான் உனக்கு ஆசான். அதைவிட வேறு ஆசானில்லை.*

# வைகுண்ட ஏகாதசி

– அ. சுப்பிரமணியம் அவர்கள் –

"வைகுண்டம் இருபத்தேழு படிகள் கொண்டது". "சிவகுண்டம் முப்பத்தாறு படிகள் உடையது. சபரிமலை ஐயப்ப சுவாமி கோவில் படிகள் பதினெட்டு ஆகும். மூன்றினதும் தனித்தனி கூட்டுத்தொகை ஒன்பதாக வருவது காணலாம். இது ஒன்பதின் பெருக்கமாகும். இவ்வாறே 108, 1008 ஆகிய சங்காபிஷேகங்களும் ஒன்பதின் பெருக்கமாகவே அமைந்திருப்பதைக் காணலாம்.

இதனைச் "சுவர்க்கவாசல் ஏகாதசி" என்றும் கூறுவர். பதினெண் புராணங்களில் ஒன்றாய விஷ்ணு புராணம், ஏகாதசி பற்றி மிக விரிவாக எடுத்துரைக்கிறது. சிவநெறியாளர்களாய சைவ சமயத்தவர்களுக்கு மாசி மாதத்து மகா சிவராத்திரி எவ்வளவு மகத்துவமும் புனிதமுமானதோ; அவ்வளவு மேன்மையும் சகல சம்பத்தும் தருவது விஷ்ணு பக்தர்களாய வைஷ்ணவ சமயத்தவர்களுக்கு மாண்புடை புண்ணிய தினமாகும். திதிகள் பதினைந்து ஒரு மாதத்தில் வளர்பிறை, தேய்பிறை என இரு பிரிவுகள் உள்ளன. இவை முறையே பூர்வ பக்கம், அபரபக்கம் என்றும் சுக்கிலபட்சம், கிருஷ்ண பட்சம் என்றும் அழைக்கப்படும். ஒரு வருடத்தில் பன்னிரண்டு மாதங்களில் இருபத்து நான்கு திதிகள் அமைகின்றன. வருடங்களில் அமாவாசை அல்லது பூரணை பதின்மூன்று வருமாகில் இருபத்தைந்து திதிகள் இடம்பெறும். திதிகளில் பதினொராவது இடம்பிடித்துள்ள ஏகாதசியில் மார்கழிமாத வளர்பிறை ஏகாதசியையே "வைகுண்ட ஏகாதசி" எனவும் "சுவர்க்கவாசல் ஏகாதசி" என்றும் கூறி வைஸ்ணவர்கள் விரதம் அனுட்டிக்கிறார்கள்.

சிலர் மார்கழியைப் பீடை மாதம் என்பர். "பீடு" என்ற பெருமைக்குரிய சொல்லே திரிந்து பீடையாயது என்பதே உண்மை. "தோடுடைய செவியன்" என்று பாடிய ஞான சம்பந்தப் பெருமான் "பீடுடைய பிரமா புரம்" என்று பெருமைக்குரிய பிரமாபுரம் என்கிறார். மார்கழி மாதத்துக்கு எவ்வகையில் பெருமை சேர்ந்ததென ஆராய்ந்தால் கிருஷ்ண பரமாத்மா போர் முனையிலே சோர்வடைந்த விஜயனுக்கு கீதையை உபதேசிக்கிறார். அப்போது அவர் "நான் மாதங்களில் சிறந்த மார்கழி யாவேன்" என்கிறார். இதனைவிடவும் மார்கழி மாதத்தின் பெருமைக்கு வேறு சான்று தேவையாகாது.

இவற்றைவிடவும் சிவன் கோவில், சிவன் பார்வதி பிரதிட்டை செய்யப்பட்டுள்ள பிற ஆலயங்களிலும் மார்கழிமாத திருவாதிரை நட்சத்திரநாளில் "ஆருத்ரா தரிசனம்" நடப்பது பெருமைக்கு உரியதாகும். சைவாலயங்களில் 8ஆவது திருமுறையாகிய திருக்கோவையாரும் திருவாசகமும் முற்றோதலும் அன்னதானமும் நடைபெறுவதும் திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி பாடுதலும் சங்கு சேமக்கல ஓசையுடன் வீதிதோறும் பாடி வலம் வருதலும் பெருமைக்குரியதே. கோதை பாடிய ஆண்டாள் பதிகம் மார்கழியில் பாடுவது வைஸ்ணவர்களுக்குப் பெருமையளிப்பதாகும். மார்கழி மாதம் தேவர்களின் வைகறையாகும். இதைவிட மார்கழிக்கு வேறென்ன பெருமை. பாவை நோன்பு நோற்கும் மகளிர் கூடிப் பாடிக்கொண்டு வைகறையில் நீராடச் செல்வர். அந்நேரம் "வானிடத்தவர்கள் மண்மேல் வந்து அரன்தனை அர்ச்சிப்பர். இதன்போது

*உண்மையானவருக்கும் அன்புடையவருக்கும் யாரும் அஞ்சத் தேவையில்லை.*

பாடலோசை காதில் விழும். அப்போது மக ளிருக்குத் திருவருள் அருள்வர். மார்கழிமாதப் பிறப்பிலிருந்து முடிவுவரை ஆண்டாள் பதிகம் முப்பதும் பாடிக்கொண்டு நீராடச் செல்வர். இது கோதை கண்ணனை மானசீகமாக நேசித் தலாகும்.

பிரம்ம முகூர்த்தம் எனப்படும் விடியற் காலை 5 மணிக்கு ஒவ்வொரு வீட்டுக்கும் தரிசனம் தருவாராம் கடவுள். அப்போது விழித்திருப்போருக்கு நல்ல கல்வி, செல்வம், அருளிச் செல்வார் என்பது ஐதீகம். ஸ்ரீ ராம பக்தன் ஆகிய ஆஞ்சநேயர் பிறந்துள்ளமை யும் மார்கழி மாத அமாவாசையாகும். இவ் வளவு பெருமைகளுக்குமுரிய மார்கழியைப் பீடை மாதமென்பது பொருந்தாது.

"வைகுண்ட ஏகாதசி" இந்தியா, இலங்கை, மலேசியா ஆகிய நாடுகளில் உள்ள விஷ்ணு ஆலயங்களில் வெகு விம ரிசையாக இவ்விரதத்துக்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருக்கும். யாழ்ப்பாணத்திலே பிரபல கோவில்களான வல்லிபுர ஆழ்வார் ஆலயம், வண்ணை வெங்கடேஸ்வரன் கோவில், வரதராஜப் பெருமாள் ஆலயம், கோப்பாய் கிருஷ்ணர் கோவில் ஆகியவற்றிலும் மலை யகப் பகுதிகளிலும் பக்தி சிரத்தையுடன் பசித்திருந்து தனித்திருந்து விழித்திருந்து நோன்பு நோற்றுப் பேரின்பப் பேறு பெறுவர். "உபவாசம்" என்பது உண்ணா நோன்பாகும். அது அருகிருத்தல் என்றும் பொருள் படுவ தாகும். அதிகாலை எழுந்து நீராடித் தோய்த் துலர்ந்த வஸ்திரம் தரித்து அதிகாலை யிலேயே ஆலயம் அடைந்து அருகிருந்து வழிபாடாற்றுதல் விசேடமாகும். கோவிலில் நடக்கும் பஜனை, பிரசங்கம், இசை நிகழ்வு களைக் கேட்டல் மிக விசேடமாகும்.

சிறப்பான இசைக் கலைஞர் உபந் நியாச வல்லுனர் விரதகாரர்கள் மத்தியில் இசை பாடியும், சொற்பொழிவு நடத்தியும் இறையருள் பெறுவர். ஆலயத்துக்குச் செல் லும்போது அர்ச்சனைக்குரிய பொருள்கள் கொண்டு செல்வர். கோவிலை அண்மித்தவுடன் கோபுர தரிசனம் செய்து அங்குள்ள நீர்நிலை யில் கைகால் சுத்திசெய்து ஆண்கள் வேட்டி உடுத்தி அரையிலே சால்வை எனப்படும் துண்டு கட்டியும், பெண்கள் சேலை அணிந் தும் பாதணி இல்லாது உள்ளே செல்வர்.

இந்தியாவில் உள்ள கோவில்களில் மேற்சட்டையுடன் செல்வது வழக்கில் உளது. இங்கு இள மங்கையர் "பஞ்சாபி" அணியும் மோகம் அதிகரித்து இருப்பதைக் காணக் கூடியதாயுள்ளது. இதனை அகற்றிடப் பல கோவில்களின் தலைமைகள் கடுமையான கட்டுப்பாடுகள் பிறப்பித்தும் உள்ளனர். நித் திரை விழிப்பே விரதம் என்ற கருத்தில் தியேட் டர்களில் 4 ஜாமங்களிலும் படம் ஓடுவதைக் காணலாம். இது குளிக்கப் போனவர் சேறு பூசியமைபோல் அமைவதாகும். எமது நாட் டிலே நிறுவப்பட்டுள்ள தனியான ஆஞ்சநேயர் கோவில்களிலும் வைகுண்ட ஏகாதசி விரதம் மிக விமரிசையாக அனுட்டிக்கப்படுகிறது.

விநாயகப் பெருமானுக்கு அறுகம் புல்லும் சிவனுக்கு வில்வம் இலையும் விஷ்ணுவுக்குத் துளசித்தளமும் விசேடமான அர்ச்சனைப் பத்திரங்களாகும். இல்லங்களில் துளசிமாடம் அமைக்கப்பட்டிருப்பதையும் காண லாம். துளசியிலே கருந்துளசி, வெண் துளசி என்று இருவகையுண்டு. துளசி விஷ பீடை அகற்றும் மூலிகையாகும். துளசி இலையை வெற்றிலைக்குப் பதிலாக உண்பவரும் உண்டு.

துளசி இலை மிகவும் மகிமை பொருந் தியதாகும். இலையின் நுனியில் படைத்தல் கடவுளான பிரம்மாவும் மத்தியில் காத்தல் கடவுளான விஷ்ணுவும் அடியில் அழித்தல் தொழில்புரியும் உருத்திரனாய சிவனும் மற்றும்

பன்னிரண்டு ஆதித்தியர்களும் எட்டுக் கணங் களும் அசுவினி தேவர்களும் வசிப்பதாகக் கூறப்படுகிறது. வைகுண்ட ஏகாதசியின் நான்கு ஜாம பூஜை முடிவில் விஷ்ணு மூர்த்தி உள்வீதி வலம் வந்து தரும் துளசி இலை யில் ஊறிய நீர் கங்கை நீருக்கு இணையானது என்று கூறுவர் வைஸ்ணவ கோவில்களில். வைகுண்ட ஏகாதசியின் இறுதியில் துளசித் தீர்த்தம் கிடைக்கப்பெற்று அருந்துவது மிகவும் விசேடமானது. நோன்பு அனுட்டித்தவர்களின் மனம் அமைதி அடைவதோடு தேகத்தில் நிலைபெற்றிருக்கும் விஷ பீடைகளும் அழி வடைகின்றன என்று குறுமுனிவருடைய சித்தவாகட நூலில் கூறப்பட்டுள்ளது. மேலும் துளசியின் மகிமைபற்றி "ஹரிபக்திஸ் தோயம்" என்னும் கிரந்தம் விரிவாகக் கூறுகிறது. மேலும் மக்கள் செல்வம் பெறுவதற்காகச் செல்வத் தின் அதிபதியான குபேரனுக்கு வியாழக் கிழமைகளில் துளசி மலரும் பத்திரமும் சார்த்தி வழிபடுவதாக ஐதீகம்.

"வைகுண்ட ஏகாதசி" விரதம் கணவன் மனைவி ஆகிய இருவரும் இணைந்து அனுஷ் டிப்பது மிகவும் விசேடமானது. சேர்ந்து விர தம் கடைப்பிடிக்க முடியவில்லை என்றால் விரதகாரருக்கு உபத்திரவம் செய்யாது ஒதுங்கி இருத்தல் நன்று. இதைவிடுத்து ஆணவ மமதை கொண்ட சிலர் தன்னால் விழித்திருக் கவோ, சாப்பிடாதிருக்கவோ, தனித்திருக்கவோ முடியாதென அடம் பிடித்து மதம் கொண்ட யானைபோல் மறித்து நிற்பர். பாவம் மனைவி கண்ணீரும் கம்பலையுமாக அழுதபடி ஆல யம் செல்வார். இதுபற்றிய சுவையான கதை கள் கிராமப் புறங்களில் வழக்கில் உள்ளன.

ஒருவர் மனைவியைக் கோவிலுக்குச் செல்லவிடாது மறித்தார். அவர் விரதம் தடைப் படக்கூடாது என்று கூறி இறையருளும் கைகூட ஆலயம் சென்றவர் கணவனது நல்வாழ்வுக் காகவும் வேண்டுதல் செய்தார். இவை எதுவும் அறிந்திராத கணவன் வீட்டிலே தனித்திருக்க முடியாமையால் தியேட்டருக்காவது படம் பார்க்கலாமென்று புறப்பட்டவர் தியேட்டர் வாசலில் நுழைவுச் சீட்டுக்கள் யாவும் விற்று முடிந்தமையால் விற்பனை இடத்தில் கதவுகள் சாத்தப்பெற்று விட்டன. கவலையும் அதிருப்தி யும் ஆத்திரமும் கொண்டவர் உள்ளே நுழை யும் வாசல்வரை சென்று கவனித்தார். உள்ளே மின்சார விளக்குகள் எரிந்துகொண்டிருப்பதால் இன்னும் படம் தொடங்கவில்லை என்று தெரிந்து வாசலில் நின்ற காவலாளியிடம் கூடிய பணம் தருவதாக உள்ளே செல்ல விடுமாறு கேட்டார். காவலாளி மறுக்கவே வாய் வார்த்தை முற்றிக் கைகலப்பாக மாறும் நிலை உண்டாகுமோ எனப் பயந்த காவ லாளி தொலைபேசிமூலம் காவல் துறை யினருக்கு அறிவித்தார்.

இரண்டு மூன்று நிமிடம்கூட ஆக வில்லை. தியேட்டர் வாசலில் வந்து நின்றது "ஜீப்". அதிலிருந்து குதித்தது "பொலிஸ்" குழு. கலகம் செய்தவரை இழுத்து வண்டி யினுள் தள்ளினர். காவலாளி புன்னகை பூத் துப் "போங்கய்யா, அங்கு நல்ல படம் காட்டு வினம்" என்றார். காவல் நிலையத்தில் உணவோ குடிநீரோ நித்திரையோ இன்றி விடியும்வரை தவித்தவரைப் பெரியவர் அழைக்கிறார் என்ற சொல் பீதி ஏற்படுத்தினாலும் கதவு திறந்து பெரியவர் முன் கூட்டி வந்து நிறுத்தினர். அவரை ஏற இறங்கப் பார்த்த பெரியவர் "நல்ல பிள்ளைபோன்று நின்றவரை எச்சரித்து இவ்விதமெல்லாம் கலாட்டா செய்யக்கூடாது" என்று கூறி விடுதலை செய்தார்.

விடுதலை பெற்ற இளைஞன் மனைவி சென்றிருந்த கோவிலுக்கு ஓடினான். அங்கு விரத காலம் முடிந்து விரதகாரர் (பாரணை) அன்னம் பரிமாற ஆயத்தமாகினர். உள்ளே

*ஒரு நூலகம் திறக்கப்படும்போது ஆயிரம் சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன.*

செல்லுமுன் கணவன் கேணியில் நீராடுவது கண்ட மனைவி கைவசம் வைத்திருந்த தோய்த்துலர்ந்த வேட்டி சால்வையைக் கொடுத்து உள்வீதி சுற்றி வந்து வழிபாடாற்றி பூஜகரிடம் வில்வ தீர்த்தம் பெற்று பருகி அன்னம் பாலித்து வீடேகினர். மறுவருடம் தானும் விரதம் அனுஷ்டிக்கப் போவதாகக் கணவன் கூறியதும் ஆச்சரியமடைந்த மனைவி "எல்லாம் அவன் செயல்" என்றார்.

முன்னொரு காலத்திலே அரசன் ஒருவன் நீதிநெறி தவறாது அரசாண்டு வந்தான். தவறாது ஏகாதசி விரதம் அனுஷ்டித்தான். ஒருமுறை ஞாபகமின்றி ஏகாதசியில் உணவு உண்டுவிட்டான். இன்று ஏகாதசி என்று மந்திரி நினைவூட்டப் பதறிப்போன வேந்தன் இதற்குரிய பிராயச்சித்தம் என்ன என்று அமைச்சரிடம் கேட்க, "நாட்டு மக்கள் யாவரையும் இந்த விரதத்தினை அனுஷ்டிக்கச் செய்தால் நாமும் அனுட்டிக்க மறதி ஏற்படாது" என்றார். அப்படியே தண்டோரா போட்டு மக்கள் அனைவரையும் விரதம் அனுட்டிக்க வைத்து தனது ஆளுகைக்குட்பட்ட நாட்டையே வைஸ்ணவ சமயிகளாக்கி வைத்தான். விரத மகிமை உணர்ந்த மக்களும் குதூகலமாக இவ்விரதத்தினை பக்திபூர்வமாக அனுசரித்து பயனடைகிறார்கள்.

"ஓம்; விஷ்ணு வராய நமக"

"கிருஷ்ணா உனக்கு எப்படிப்பட்டவர்களைப் பிடிக்கும்?" என்ற அர்ச்சுனனின் கேள்விக்கு பதிலளித்தார் கிருஷ்ணபரமாத்மா.

"எந்த உயிரையும் வெறுக்காமல் அனைவரிடமும் நட்பு மற்றும் இரக்கத்துடன் நடப்பவன், பற்று அகங்காரம் இல்லாமல் இன்ப துன்பங்களில் சமநிலையில் இருப்பவன், 'போதும்' என்ற மனப்பாங்கும் மன்னிக்கும் பக்குவத்தையும் பெற்றவன், தியானத்தில் உறுதியும் திடசித்தமும் கொண்டவன், மனம் புத்தி இரண்டையும் என்னிடத்தில் அர்ப்பணித்து வாழ்பவன் எவனோ அவனே எனக்குப் பிரியமானவன். பொதுவாக 'எல்லோரையும் எனக்குப் பிடிக்கும். என்றாலும் இன்னும் சிலர் என்னை மிகவும் நெருங்கிவிடுகிறார்கள்' என்றார் கிருஷ்ணர்.

இந்த உலகில் நமக்குப் பிடித்தமானவர்கள் பட்டியலில் முதலிடத்தைப் பிடிப்பவர் "கடவுள்". ஆனால் கடவுளுக்குப் பிடித்தமானவர்கள் பட்டியலில் நாம் இருக்கிறோமா என்பதுதான் கேள்வி. நீங்கள் எப்படி? இதுவரை அவரின் பட்டியலில் இடம்பெறவில்லையா? அப்படியாயின் இன்றிலிருந்து முயன்று பாருங்கள்! அது ஒரு அலாதியான சுகம்.

மற்றவர்களுடைய வாழ்க்கையோடு உன்னை ஒப்பிடாமல் உன் சொந்த வாழ்க்கையை நீ அனுபவிக்கக் கற்றுக்கொள். உன்னிடம் இருப்பதை வைத்துத் திருப்தியாக இருப்பது சரிதான். ஆனால் நீ இருக்கும் நிலையில் அல்ல.

நீ சாகும்போது பணக்காரனாக இருக்க வேண்டும் என்பதற்காக, தற்சமயம் வறுமையில் வாழ்வது பைத்தியக்காரத்தனம்.

*மணிக் கணக்கில் பேசுவதைவிட குறைந்த அளவு காரியங்களைச் செய்வது மேலானது.*

# சைவத்தமிழ் போற்றும் சான்றோர் வரிசையில்

# ம.க. வேற்பிள்ளை (1848.01.08 - 1930)

– திரு மு. சிவலிங்கம் அவர்கள் –

சைவமும் தமிழும் வளரத் தம்மை அர்ப்பணித்துக் கற்றுக் கற்றாங்கொழுகித் தம் வழியைத் தொடரும் பலரைக் கவர்ந்தவர் யாழ் நல்லூர் ஆறுமுகநாவலர். பலர் நாவலரின் காலத்திலும் பின்பும் அவர் நடந்த பாதையை அடியொற்றித் தம் வாழ்நாளை மேம்படுத்தினர். இதனை நாவலர் பரம்பரை என்றனர். இப்பரம்பரையில் நாவலரின் காலத்தில் பிறந்து பாடங்கேட்டு அவரிடம் பணி செய்து தமது பிறப்பால் உயர்ந்தவர் மட்டுவில் க. வேற்பிள்ளை எனலாம்.

இவர் மேலைப்புலோலி கணபதிப் பிள்ளை உடையார் தம்பதியினரின் மைந்தனாக 1848ஆம் ஆண்டு தை மாதம் எட்டாம் நாள் அவதரித்தார். தந்தை சைவத்தமிழின் ஆர்வத்தால் தமது கல்வியறிவுக்கேற்ப மைந்தனை வளர்க்க வேண்டிய சிந்தனையால் தமது தாய் வழிக் கல்விமான் சண்முகச் சட்டம்பியாரிடம் ஆரம்பக் கல்வியைக் கற்க வைத்தார். இவர் தொடர்ந்து நல்லூர் கார்த்திகேய உபாத்தியாயரிடம் இலக்கண இலக்கியத்தை ஆவலுடன் கற்றார். இவரின் திறமையைக் கண்ட உபாத்தியாயர் இவரை நாவலரிடமும் வித்துவ சிரோன்மணியிடமும் கல்வியைத் தொடரவைத்தார்.

வேற்பிள்ளை நாவலரிடஞ் சைவ சாஸ்திர நுட்பங்களையும், புராணங்கள், சைவாகமங்களையும் நன்கு கற்றார். அக் காலத்தில் நாவலர் சிதம்பரம் சென்றபோது வேற்பிள்ளையையும் அழைத்துச் சென்று அவ் இடத்துப் பிள்ளைகளுடன் சேர்த்துக் கற்பித்தார். மேலும் வித்துவசிரோன்மணி பொன்னம்பலம்பிள்ளையிடம் தொல்காப்பியம், சொல்லதிகாரம், சேனாவரைய உரையையும் மிக நுட்பமாகக் கற்றார். இவ்வாறு சிறப்புறக் கற்றதால் வேற்பிள்ளை உரை சொல்லும் திறமைக்கு ஆளானார். இச்சிறப்பை அறிந்த பண்டிதமணி இவரை நோக்கியதால் பொன்னம்பலம்பிள்ளையிடம் உரை சொல்லும் திறனையும், நாவலரிடம் வசனம் எழுதும் எழுத்து ஆக்கச் சிறப்பையும் கைவரப் பெற்றுக்கொண்டார் என விதந்துரைத்தார். இச் சமகாலத்தில் வேற்பிள்ளை பொன்னம்பலம்பிள்ளையிடம் கற்கும்போது திருவாதவூரர் புராணத்திற்கு உரை எழுதினார். இவரின் உரையெழுதிய திறமையை மெச்சிய பொன்னம்பலம்பிள்ளை "உரையாசிரியர்" என்னும் பட்டஞ் சூட்டிப் பெருமைப்படுத்தினார். இவர் மேலும் உரை எழுதும் பணியாக புலியூரந்தாதி, அபிராமி அந்தாதி, கெவுளிநூல் ஆகியவற்றின் உரையையும் வெகுசிறப்பாக எழுதினார். தமது அறிவின் முதிர்வால் ஈழமண்டலச் சதகம் என்னும் அரியதொகுதியையும் எழுதி எம் மண்ணுக்குப் பெருமை சேர்த்தார்.

இந்தியாவில் வாழ்ந்த தமிழறிஞர்களின் வித்துவக் காய்ச்சலினால் இலங்கை-ஈழமண்டலம் எச்சிறப்புடையது எனக் கேலி செய்தனர். ஈழமண்டலம் ஆறுமுகநாவலர் மற்றும் இயற்றமிழ்வல்லோர் ஆற்றும் பணிகள் மற்றும் ஈழமண்டலத்திலுள்ள இதர சிறப்புகளையும் சிறப்பித்தே "ஈழமண்டலச்சதகம்" என்னும் சதக இலக்கியத்தை உருவாக்கினார். இதை அறிந்த இந்திய மற்றும் ஈழத்துக் கற்றறிந்தோர் ஈழமண்டலத்தின் சிறப்பிற்கு மேலாக

*அன்பின் வலிமை வெறுப்பின் வலிமையைவிட மிகப் பெரியது.*

வேற்பிள்ளையின் பாடற்சிறப்பை வியந்தனர். இதனால் நாவலர் பெருமான் நிலைநாட்டிய சைவத்தமிழின் பெருமை நன்கு பிரகாசித்தது.

வேற்பிள்ளை தமது சமய பக்தியால் பர்வதபத்தினி தோத்திரம், புலோலி வைரவக் கடவுள் தோத்திரம் ஆருயிர் கண்மணிமாலை என்னும் பக்திச் செய்யுள் நூல்களையும் யாத்தார். மேலும் வேதாரணிய புராணம், சிதம்பர சிவகாமியம்மை சதகம் ஆகிய நூல்களையும் ஒப்பு நோக்கி வெளியிட்டார். இவ்வாறு வேற்பிள்ளையின் எழுத்தாக்கங்கள் வளர்ந்தன.

தாம் கற்றதனாலாய பயனை உணர்ந்த வேற்பிள்ளை தாம் கற்றதை அடுத்தவருக்கும் சொல்லிக் கொடுக்க முன்வந்தார். இதன் பேறாக மட்டுவில் வடக்கில் "சந்திரமௌலீசர் வித்தியாசாலை"யை நிறுவினார். மாணவர்களின் கல்வி வளரத் தம்மாலான பணிகளைச் செய்தார். மேலும் தமது வீட்டுத் திண்ணையை திண்ணைப்பள்ளியாக்கி மாணவர்கள் மட்டுமன்றி வயது வந்தோருக்கும் நற்கல்வி போதித்தார். இதனால் மட்டுவில் மட்டுமன்றித் தென்மராட்சியிலுள்ள அயற் கிராமங்களிலிருந்தும் வயது வேறுபாடின்றிப் பலர் கற்றுத் தேறும் வாய்ப்புப் பெற்றனர். இவ்வாறு கற்றவர்களுள் ஆவரங்கால் நமசிவாயம்பிள்ளை, பண்டிதமணி கணபதிப்பிள்ளை மற்றும் சாவகச்சேரி பொன்னம்பலம்பிள்ளை ஆகியோர் சிறப்படைந்தனர்.

வேற்பிள்ளை இம்மண்ணில் புராண உரை சொல்வதிலும் சைவப்பிரசங்கங்கள் செய்வதிலும் வல்லவர். இதனால் யாவராலும் போற்றப்பட்டார். இச்சமகாலத்தில் நாவலரால் சிதம்பரத்தில் நிறுவப்பெற்ற தமிழ்ப்பாடசாலையிற் கற்பிக்கும் பணியை ஏற்றார். தமது சிறப்பால் ஆசிரியப் பதவி உயர்வால் தலைமை ஆசிரியர் பணியையும் சிறப்பித்தார். சிதம்பரத்தில் இவரிடம் கற்றவர்களுள் வித்துவான் ந. சுப்பையாபிள்ளை சிதம்பர வித்துவான் தண்டபாணி ஐயர் போன்றவர்கள் சிறப்படைந்தனர். மேலும் பலர் புலமை பெற்றனர். சைவமும் தமிழும் வளர்ந்தது.

வித்துவான் சுப்பையாபிள்ளையின் வித்துவக் கல்விக்கு வேண்டிய இலக்கிய விளக்கச் சூறாவளி தர்க்க சங்கிரகம், இலக்கணக் கொத்து ஆகிய நூற் குறிப்புகளை வேற்பிள்ளை கொடுத்திருந்தார். சுப்பையாபிள்ளை அதனைக் கற்று வித்துவான் பட்டம் பெற்ற பின்பு அதன் சிறப்புக் கருதித் தாயகத்திற்குக் கொண்டு வந்தார். வேற்பிள்ளையின் கற்பித்தல் திறமையுடன் பொதிந்த குறிப்புக்களை இறுதிவரையும் சுப்பையாபிள்ளை பாதுகாப்பாக வைத்திருந்தார். சிதம்பரம் நாவலர் பாடசாலை அதிபர் பதவி வகித்தவர். நடராசப்பெருமானின் மீதிருந்த பக்தி மேலீட்டினால் முதுமைக்காலத்தையும் சிதம்பரத்தில் அனுபவித்தார். தமது ஆயுள் நிறைவைச் சிதம்பரத்தில் விட்டுச் சிவபதம் அடைந்தார்.

## குடும்பப் பின்னணி

வேற்பிள்ளை இல்லறம் நாடி மேலைப் புலோலி மகேஸ்வரி என்னும் மாது சிரோன்மணியைத் துணையாகக் கொண்டவர். துணைவியார் தமது கல்விக் குடும்பத்தின் சிறிய தந்தையாராகிய இலக்கண வித்துவான் வ. குமாரசாமிப்பிள்ளையிடமும் திருவனந்தபுரம் சமஸ்தான வித்துவான் மகாராசாக் கல்லூரி வ. கணபதிப்பிள்ளையிடமும் சிறந்த கல்வி கற்றவர். இத்தம்பதியினரின் இனிய வாழ்வின் பயனாக ஐந்து புத்திரர்கள் கிடைக்கப்பெற்றனர். இவர்கள் யாவரும் சிறப்பான கல்வியாளர்கள். இவர்களுள் மூன்றாம் மகன் "குருகவி" என்றும் "பரீட்சை எடாத பண்டிதர்" என்றும் கல்வி உலகால் போற்றப்பட்ட சிறப்புடையவர். இவ்வாறு போற்றப்பட்ட குருகவி க.வே. மகாலிங்கசிவம் அவர்களையும் அறிவோம்.

(தொடரும்...

*விடாமுயற்சி மட்டுமே நம் வாழ்க்கையை மாற்றி அமைக்கும்.*

# சந்நிதியான் ஆச்சிரமத்தில் இருக்கின்றான்

– திருமதி த. வசந்தகுமாரி அவர்கள் –

அன்று வெள்ளிக்கிழமை எனது அலுவலகத்திற்கு முன்னால் உள்ள பாடசாலை ஒன்றிற்கு ஏதோ அலுவலாக திருமதி சசிலேகா ஆசிரியை வந்திருந்தார். ஆச்சிரமத்திற்கு அவரும் வருவதாலும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை உறுப்பினராக இருந்த காரணத்தினாலும் எமக்கிடையில் ஓர் நட்பு வளர்ச்சியடைந்தது. அதன் காரணமாக நான் மதிய உணவுக்காக வீட்டுக்குப் புறப்பட்டவேளையில், ஆசிரியை திருமதி சசிலேகாவையும் வீட்டுக்கு வரும்படி கேட்டேன். ஆனாலும், அவரை வீட்டிற்கு அழைத்துச் சென்றாலும் அவருக்கு வழங்குவதற்கு ஏற்ற அளவு உணவு வீட்டில் இருக்கவில்லை என்பதும் எனக்குத் தெரியும். ஆனாலும் இருப்பதைப் பகிர்ந்து உண்போம் என்று எண்ணியவாறு வீட்டைச் சென்றடைந்தோம். ஆசிரியை அவர்கள் உணவு அருந்த மறுத்துவிட்டார். அதனால் அவருக்கு தேனீரை வழங்கிக் கௌரவித்தாலும் அவருக்கு உணவு வழங்க முடியவில்லையே என்கிற மனக்குறை மனதில் இருந்தது. அதிலும் அன்று மரக்கறி பிரியாணி. மன நிறைவில்லாமல் நானும் எனது விரதத்தை நிறைவு செய்துகொண்டு அலுவலகம் திரும்பினேன்.

வெள்ளிக்கிழமை ஒரு முருகன் அடியவருக்கு உணவு வழங்க முடியவில்லையே என்ற எண்ணம் என்னைச் சுற்றிச் சுற்றி நின்றது. சிறிது நேரத்தின் பின் ஆசிரியையின் தொலைபேசி அழைப்பு. என்னவாக இருக்குமோ என பரிதவித்துக்கொண்டு தொலைபேசியில் தொடர்பினை ஏற்படுத்தினேன்.

என்ன! ஆச்சரியமான செய்தி. "தான் வீட்டிற்கு வந்து சேர்ந்ததும் தனது தந்தையார் சந்நிதி கோவிலுக்குச் சென்றுவிட்டு சந்நிதியான் ஆச்சிரமத்தில் (மோகன் மடம்) சாப்பிட்டுவிட்டு திரும்புகையில் மோகன் சுவாமி தன்னை அழைத்து இரண்டு பார்சல் சாப்பாட்டினையும் இரண்டு பாயாசப் பார்சலையும் தன்னிடம் தந்து இதை ரீச்சரிடம் கொடுக்கும்படி கூறியதாகவும் கொண்டுவந்திருந்தார். மிகப்பெரிய அதிசயம்! அப்பாசல் இரண்டும் மரக்கறிப் பிரியாணிச் சாப்பாடு. ஆனால் இங்கு நான் வருவதற்கிடையில் சந்நிதியான் மோகன் சுவாமிக்கு எப்படி தகவல் கொடுத்தார். எனக்கு இவ் விடயம் கேட்டதும் மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். இவ்வாறு பல அற்புதங்களை நாம் தொடர்ந்தும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் சந்தித்து வருகின்றோம்.

இங்கு எதுவும் மிகைப்படுத்தல் அல்ல. விளம்பரத்திற்கான செய்தியும் இல்லை. எமது இளம் சமூகத்திடம் இறை நம்பிக்கை வளர வேண்டும். சந்நிதியான் ஆச்சிரமம் ஓர் வர்த்தக நோக்கமற்ற தூய்மையான பணி தொடரும் இடம் என்பதற்கு இவை சான்று பகர்கின்றன.

---

ஐப்பசிமாத ஞானச்சுடர் மலரில் "அருளம்பல சுவாமிகள்" என்னும் தலைப்பில் அமைந்துள்ள கட்டுரையில் "கீர்துரைமார் பரம்பரை" என்பது தவறுதலாக எழுதப்பட்டுள்ளது. இதனைத் தயவுசெய்து மன்னிக்கவும். தகவல் வழங்கியவர் இக்கட்டுரையை எழுதிய திருமதி துஷ்யந்தி ஸ்ரீகரன் (சுவாமிகளின் பூட்டி)

*தலையிலிருந்து கால்வரை ஒவ்வொரு நரம்பிலும் செயல் துடிக்க வேண்டும்.*

# முதுமை ஒரு சுமையல்ல

– திரு வடகோவை பூ.க. இராசரத்தினம் அவர்கள் –

"வயது முதிர்ந்தாலும் இளமை குன்றாதிருக்க வழியுண்டு" என ருசிய தேசத்து டாக்டர் செபெத்திரியோவ் கூறுகிறார்.

விஞ்ஞானம் பெருமளவு முன்னேற்றம் அடைந்துள்ளது. சராசரி மனிதனின் ஆயுட் காலத்தை நீடிப்பதற்கான ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. பொதுவான வாழ்க்கைத்தரம், நாட்டின் பொருளாதார வளர்ச்சி, பொதுச் சுகாதாரம் போன்ற அம்சங் களில் வெற்றி கிடைத்தால் மனிதனுடைய ஆயுட்காலம் தானாகவே வளரும் என ஆய் வாளர்கள் கருதுகிறார்கள். ஒருவன், வாலிப காலத்தில் தீய பழக்கங்களுக்கு அடிமை யாகாமல், நல்ல உணவு உட்கொண்டு, நல்ல பயிற்சிகளையும் மேற்கொண்டால், முதுமைக் காலம் முத்தான காலமாக அமையும் என் பதற்கு பல சான்றுகள் உண்டு. நாம் இயற்கையோடு இணைந்து அனுபவங்கள் பெறுவதன் வாயிலாக வளர்ச்சியடையலாம். முதுமையைப் பிற்போடலாம், சைவ சமயம் இயற்கையோடு இணைந்து வாழ்வதால் நன்மை அடையலாம் என்பதை உதாரண வாயிலாக போதியளவு விளக்கத்தை வழங்கி உள்ளது.

ஒரு மனிதனது தோற்றம், அவனது வேலை, அவனது உணர்ச்சிகள், அவனது வாழும் முறை போன்றவற்றைப் பொறுத்தே, அவனது முதுமை நிர்ணயிக்கப்படுகின்றது. ஆரோக்கியமான முதுமை காலத்திற்கு நாம் சில முறைகளைக் கடைப்பிடிக்க முயல வேண்டும். போதுமான உழைப்பு, உணவுக் கட்டுப்பாடு, கவலையற்ற வாழ்வு, பதற்றமற்ற வாழ்வு, உடற்பயிற்சி, உன்னதமான சூழல் போன்ற அம்சங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நவீன மனிதன் ஒரு திறமை வாய்ந்த சோம்பேறி என்ற கருத்தை நன்கு விளங்க வேண்டும். வயதுக்கேற்ற ஆரோக்கிய வாழ் வுக்கு பொருத்தமான உணவை உட்கொள்ள வேண்டும். சர்க்கரைப் பொருட்களை தவிர்த் தல் நன்று. பழங்கள், காய்கறிகள், கொழுப்பு குறைந்த தயிர், எடையைக் குறைக்க உதவும்.

முதுமை அடைந்த காலத்தில், மனி தன் பலவீனம் அடைவதைத் தவிர்ப்பது கடின மாகும். ஆனால் ஆரோக்கியமாக வாழ்வதற்கு வழிவகைகளை வகுத்துக் கொண்டால், அவன் ஆற்றலை வெளிப்படுத்த அதிகம் போராடத் தேவையில்லை. பிராணிகளை வைத்து பரி சோதனை செய்தபொழுது சோம்பேறிகளாக இருக்கும் பிராணிகளை விட சுறுசுறுப்பான பிராணிகள் ஆரோக்கியமாக இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

முதியோர் பெருக்கம் பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. 353 கோடிக்கு மேலாக முதியவர்கள் இருப்பதை 2015ம் ஆண்டில் கணிக்கப்பட்டது. 2050 இல் 1.3 பில்லியனாக அதிகரிக்கலாம் என எதிர்வு கூறப்பட்டது.

அமெரிக்காவில் முதிர்ச்சி அடையும் வயது 85ஆகக் கணிக்கப்பட்டுள்ளது. தொழில் புரியும்பொழுது மனிதனின் சக்தி செலவாகும். அவனது அவசரம் இருதயத் துடிப்பை அதி கரிக்கச் செய்யும். உடலுக்கு அதிக ஒக்சி சனும் சத்துப் பொருட்களும் கிடைக்க வாய்ப் புண்டு. அப்பொழுது சக்தி என்ற மூலதனம்

*நீண்ட நேரம் ஓடி வந்தால் அதிக தூரம் தாண்ட முடியாது.*

உருவாகின்றது. கிறிஸ்துவுக்கு முன் (கி.மு) ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த நாடக ஆசிரியர் சொப்கிளிப்ஸ் 91 வயதுவரை வாழ்ந்தார். பல சோக நாடகங்களை எழுதி உள்ளார். ஓவியரான டிட்டியல் 98 ஆண்டுகள் வாழ்ந்தார். அவர் பெற்ற பாராட்டுக்கள் ஓய வில்லை. 2015இல் ஆசிய பசுபிக் பிராந்தியங் களின் முதியோர் பெருக்கம் பற்றி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்தியாவைச் சேர்ந்த இராசகோபால்சாரியார் எனும் அறிஞர் 96 வயதுவரை வாழ்ந்து பல அரிய நூல்களை எழுதியுள்ளார். இவர், "உழைப்புத்தான் முது மைக்குச் சிறந்த மருந்து" எனக் குறிப்பிட் டமையையும் நாம் நோக்க வேண்டும். வயது ஏற ஏறத்தான் மனிதனுக்கு அனுபவம் அதிக மாகிறது. இதனால் ஒருவன் பொதுவாழ் விலும், ஸ்தானபத்துறையிலும் தன்னைத் திறம்பட புலப்படுத்திக் கொள்வதற்கு அரிய, பெரிய வாய்ப்புக்களைப் பெறுகிறான்.

முதியவர்கட்கு குறிப்பாக எண்ணம் துணையாக இருக்கின்றது. அது ஒரு சக்தி. நமக்கு என்ன வேண்டுமோ அவைபற்றிய எண்ணங்களை நமது மனதில் பதிய வைக்க வேண்டும். நீங்கள் நினைப்பது எதுவோ அதை உங்களை நோக்கி விரைந்து இழுப்பீர்கள். இதுதான் ஈர்ப்புசக்தி. மகாபாரதம் போன்ற இலக்கியத்தில் இக் கருத்தை உணரலாம்.

முதியவர்கள் ஒரு நாட்டின் சொத்து இவர்களை நன்கு பயன்படுத்த உறவினர் களும், சுயவிருப்ப அமைப்புகளும், அரச சார்பற்ற அமைப்புகளும் அரசாங்கமும் முன் வரவேண்டும். மனித சக்தியை நன்கு பயன் படுத்த வேண்டும். முதியவர்கள் தமது பங் களிப்பை வழங்க, பொருத்தமான திட்டங் களை வகுக்க வேண்டும். தேசிய வளர்ச்சி யில் அதிக நம்பிக்கை உடையவர்கள் முதியவர்கள்.

முதுமையைப் பந்போடலாம். முதுமை யிலும் கௌரவங்களைப் பெறலாம். எனவே முதுமை ஒரு சுமையல்ல. முதியவரை வாழ்த்தி மகிழ்வோம்.

ஒரு மனிதனின் உண்மையான நிலையை ஆராய்ந்து பார்த்த பின்னரே அவனை நண்பனாக ஏற்கவோ, ஒதுக்கவோ வேண்டும். அதைவிடுத்து ஒருவனின் இயல்பு நிலையை அறியாமல் அவனை நண்பனாக ஆக்கிவிட்டு, அவனும் உங்கள் விருப்பத்திற்கு ஏற்றவாறு நடக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது நியாயமற்றது. நீங்கள் எதிர்பார்ப்பது போன்று நடக்கவில்லை என்றால் பின்னர் அவர்களைக் குறை கூறுவதோ அல்லது அவர்களின் நடத்தைபற்றி விமர்சிப்பதோ தவறானது.

உங்களுக்கு யார் எது செய்தாலும், எதைச்சொன்னாலும் நீங்கள் மட்டும் நல்லதையே செய்யுங்கள். இதிலிருந்து பின்வாங்கி விடாதீர்கள். பொன்னும் வைரமும் இக்குணத்தையே பெற்றிருக்கிறது. எவ்வளவு சூடு வாங்கினாலும், அடி வாங்கினாலும் அவற்றின் அழகோ, குணமோ, பெறுமதியோ மாறுவதில்லை.

*மனிதன் தோல்வியின் மூலமே மேலும் புத்திசாலி ஆகின்றான்.*

# நவராத்திரி மகிமை

– திருமதி பரமேஸ்வரி நடராஜா அவர்கள் –

நவசக்தியாம் முப்பெரும் சக்தியின்
நவராத்திரி மகிமையினை நயமுடனே நானியம்ப
நவ நவமாய் நல்ல தமிழ்தான் சுரக்க
நவசக்தி விநாகயனே நலமுடனே அருளிடுவாய்.

இப்புவி தன்னை இயக்கிடும் சக்தியாம்
முப்பெரும் சக்தி பெருமையை முறையாக இயம்ப
முப்பழம் நுகரும் மூஷிக வாகனனே
எப்போதும் என் உடனிருந்தருள்க.

ஆய கலைகள் அனைத்திற்கும்
தாயான தத்துவமே அம்மா
தூயவளே தாயவளே உன்னை
மாயை யென்று அழைப்பதன் மர்மம் என்னவோ.

உலகீன்ற உமையவளே அம்மா
நலமுடனே நாம் வாழ அறநெறியை
வகுத்துத் தந்து வழிகாட்டும் தாயே - நீ
வகுத்த வழி வாழ்ந்தால் வாழ்வு சுகமாகுமே.

கண்கண்ட முதல் தெய்வம் அம்மா - என்
கண்ணுக்குத் தந்தையைக் காட்டியதும் நீயே அம்மா
எண்ணும் எழுத்தும் கற்றுத் தந்த முதல் குருவும் நீயே அம்மா
எண்ணமெல்லாம் நிறைந்திட்ட முப்பெரும் சக்தியே அம்மா.

மலை மகளாய் வந்தே எமக்குத் திடமான
மனவுறுதி தந்திட்ட தாயே
அலைநடுவே வாழ்ந்தாலும் என்றும்
நிலை குலையாத உளவுறுதி தந்த அலைமகளே அம்மா.

கலை வண்ணம் காட்டி எமை மகிழ்விக்கக்
கலை மகளாக வந்துதித்த தாயே
மலையைச் சிலையாக்கிச் சித்திரமாக்கிச்
சிலைக்கும் உயிர் கொடுக்கும் கலைவாணியே.

முப்பெரும் சக்தியே அம்மா
இப்புவியில் இதமாக நாம் வாழ
தப்பாமல் நீ தந்த தர்மநெறியே
எப்போதும் எம்க்குத் துணை அம்மா.

புலன் வழி வாழ்வோர்க்கு நீ மாயை
அறன் வழி வாழ்வோர்க்கு நீ தூயை
மாயை என்று சொல்லும் மர்மத்தை - எமக்குத்
தாயாயிருந்து புரியவைத்த தூயை நீயே அம்மா.

போற்றி உமைப் பணிந்தோம் அம்மா
ஏற்றி வைப்பாய் வாழ்வில் எம்மை நீயே
காற்றிலும் கனலிலும் புனலிலும் வெளியிலும்
வீற்றிருந்து எமைக்காக்கும் அன்பு அன்னையே.

ஆர்வக் கனலாயிருந்து ஊக்கமளித்தும்
பார்புகழ வாழவைக்கும் தூய அன்னையே
கள்ளமில்லா உள்ளத்தால் அழைக்கின்றோம் அன்னையே
உள்ளக் கோயிலில் உவந்துறைவாய் அன்பு அம்மையே.

போற்றி போற்றி அன்னையே - வாழ்வில்
வெற்றி தருவாய் என்றும் அன்னையே.

சுவாமி விவேகானந்தர் சிகாகோவில் “உலக மதங்கள்” மாநாட்டில் கூடியிருந்த மக்களைப் பார்த்து “சகோதர சகோதரிகளே” என்று அழைத்துத் தம்முடைய பேச்சை ஆரம்பித்தார். காரணம் உடலும் உருவமும் வேறு வேறாக எண்ணிக்கையில் அடங்கா வேறுபாட்டுடன் இருக்கலாம். ஆனால் “ஆன்மா” என்பது ஒரே வகைதான். அதை வேறு படுத்திப் பார்க்க முடியாது.

விண்ணிலுள்ள ஒரே நிலவு மண்ணிலுள்ள கோடிக்கணக்கான தண்ணீர்ப் பாத்திரங்களிலும் ஒரே சமயத்தில் தனித்தனியாகத் தெரிவதுபோல, ஒரே பிரம்மம்தான் பல்வேறு ரூபங்களில் பிரதிபலிக்கிறது. அதனால் உலகிலுள்ள அனைத்து மக்களும் நிறத்தாலும் மத, மொழி, கலாசாரத்தால் வேறுபட்டு இருந்தாலும் அனைவரும் நமது உடன்பிறப்புக்களே என்பதை உணர்த்தவே சுவாமி அவ்வாறு “சகோதர சகோதரிகளே” என்று அழைத்தார்.

நம்மை நாம் தெரிந்துகொள்ளாவிட்டால் வெளி உலகத்தைத் தெரிந்துகொள்ள முடியாது. நம்மை நாம் தெரிந்துகொண்டபின் வெளி உலகத்தில் ஒன்றும் இருக்காது.

*தோல்வி துரத்துகிறது என்றால், வெற்றியை நெருங்குகிறாய் என்று அர்த்தம்.*

# ஞானச்சுடர் வாசகர்போட்டி 2020

## வினாக்கள்

01. யாழ்கொண்டு சாமகீதம் பாடியவர் யார்?
02. மாயை எப்போது ஒடுங்கும்?
03. மனிதர்களுக்கு நிறையுணவைத் தரும் மிருகம் எது?
04. சுகத்தையும், துக்கத்தையும் சமமாகப் பார்க்கச் சொல்லும் மதம் யாது?
05. இருபாலை சேனாதிராய முதலியாரிடம் கல்வி பயின்றவர் யாவர்?
06. இந்து மதம் வகுத்துக் காட்டும் பாதை யாது?
07. எழுவான் திசையில் எழுந்திருக்கும் ஆலயம் யாது?
08. தீப ஒளியாக திகழும் தெய்வம் கூறுக.
09. சமரச வேதப் பாடசாலை தொடக்கப்பட்ட காலம் யாது?
10. கல்வியில் கரை காணமுடியாது என உணர்த்தியவர் யார்?
11. ஏகாந்த நிலையின் பொருள் யாது?
12. இறைவனுக்கும் மனிதனுக்கும் தொடர்பை ஏற்படுத்தும் கருவி யாது?
13. நடைப்பிணங்கள் என்று எத்தன்மையோரைக் கூறலாம்?
14. மனித வாழ்வை இயக்கும் இருநிலை யாது?
15. சுதேச நாட்டியம் என்னும் பத்திரிகையை வெளியிட்டவர் யார்?
16. பரம்பொருளைப் பற்றிட நாம் என்ன செய்ய வேண்டும்?
17. சமயத்தின் அளவுகோல் பற்றிக் கூறியவர் யார்?
18. தகரமடம் கடையொன்றில் வாசம் செய்த பெரியவர் யார்?
19. கங்கையிலும் பார்க்க புனிதமான நதி யாது?
20. நான் மாடக் கூடல் எனப் பெயர்வரக் காரணம் கூறுக.
21. அருளம்பலக் கோவை என்னும் பிரபந்தத்தைப் பாடியவர் யார்,
22. வேல் அருள் உலகம் கொண்டது என யாரால் எப்புராணத்தில் சொல்லப்பட்டது?
23. முத்தளப்பன் செட்டி எனப் போற்றப்பட்டவர் யார்?
24. பிராணாயாமம் செய்வதற்கு ஏற்ற ஆசனங்கள் எவை?
25. ஈழத்தில் இரண்டாம் சமய குரவர் எனப் போற்றப்படும் பெரியார் யார்?

ஆசைப்படுவதை மறந்துவிடு. ஆனால் ஆசைப்பட்டதை மறந்து விடாதே.




* போட்டியில் எவரும் பங்குபற்றலாம். ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட விடைகளையும் எழுதி அனுப்பலாம். ஆனால் அவை தனித்தனியாக அனுப்பப்படவேண்டும்.

* 2020ஆம் ஆண்டு தை மாதம் தொடக்கம் ஐப்பசிமாதம் வரை வெளிவந்த ஞானச்சுடர் மலர்களிலிருந்தே வினாக்கள் எடுக்கப்பட்டுள்ளதால் விடைகளும் மலருக்குள் இருந்தே எடுக்கப்படவேண்டும்.

* விடைகளை அச்சிடுவதோ, பிரதி செய்வதோ, போட்டோ பிரதி எடுப்பதோ அனுமதிக் கப்படமாட்டாது.

* விண்ணப்பங்களை **வாசகர் போட்டிக்குழு, சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை, செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு** என்ற முகவரிக்கு 20.02.2021 மாசி மாதத்திற்கு முன்பு தபால்மூலமோ, நேரிலோ கையளிக்கவும்.

* போட்டியின் பெறுபேறுகள் மாசிமாத ஞானச்சுடர் மலரில் வெளியிடப்பட்டு அதன் பரிசில்கள் பங்குனி மாத ஞானச்சுடர் வெளியீட்டின்போது வழங்கப்படும்.

## ஞானச்சுடர்
## சந்தாதாரரின் கவனத்திற்கு...

வணக்கம்!

தாங்கள் காட்டிவரும் பேராதரவுக்கு மனமார்ந்த நன்றிகள். 2021ஆம் ஆண்டுக்கான உங்களுடைய சந்தாப் பணத்தினைச் செலுத்தி தங்கள் பதிவினைப் புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். புதிய ஆண்டில் பிரதிகளைத் தவறாது பெற்றுக் கொள்வதற்கு வசதியாக தங்கள் சரியான முகவரியைத் தபால் மூலமோ - தொலைபேசி மூலமோ தெரியப்படுத்துமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

*-சைவ கலை பண்பாட்டுப் பேரவை-*

# கதிர்காம யாத்திரை
# -எனது அனுபவம்- (தொடர்ச்சி...

**-செல்வி சி. நிலா அவர்கள்-**

நாளை அதிகாலை கதிர்காமத்தில் நடைபெறும் காலைப் பூசையில் அனைவரும் பங்குபற்ற வேண்டும் என்ற ஐயாவின் எண்ணப்பாட்டுக்கு அமைவாக நாம் அனைவரும் ஐயாவுக்கு முன்பாகவே எழுந்து எமது காலைக் கடன்களை முடித்து, தங்கியிருந்த விடுதியிலே குளித்து ஆலய வாசலை அடைந்தோம். ஐயாவும் எம்முடன் வந்திருந்தார். ஆனாலும் என் மனதில் அப்படியென்ன விஷேட பூசை. எமது ஆலயங்களில் இடம் பெறும் பூசைகளைவிட இங்கு என்ன நடைபெறப் போகின்றது. சரி பார்க்கத்தானே போகின்றேன் எனும் எண்ணத்துடன் ஆலய வாசலில் நின்றிருந்தேன்.



நாம் போன சமயம் ஆலய மடைப்பள்ளியில் இருந்து பௌத்த விகாரை வரை கயிறுகட்டி மறித்திருந்தார்கள். முருகன் ஆலயத்துக்குள் ஆலயம் சார்ந்தவரைத் தவிர வேறு யாரும் இல்லை. ஒரு சிலர் உள்ளே நின்றிருந்தார்கள். நாம் அனைவரும் முருகன் வாசலின் கயிற்றுக்கு வெளியே நின்றிருந்தோம். பூசை வழிபாடு ஆரம்பமாவதற்குரிய அறிகுறிகளுக்கு முன்பாக மூன்று வேடுவப் பெண்கள் கையில் விளக்கெடுத்து மூலஸ்தானத்திற்கு முன்பாக உள்ள முருகன் படம் உள்ள திரைச்சீலைக்கு பயபக்தியுடன் பூசை வழிபாட்டை ஆற்றி, ஆராத்தி எடுப்பதுபோல் ஆலயத்தைச் சுற்றிவந்து வணங்கியபின் பூசை ஆரம்பமாயிற்று. தினமும் வேடுவப் பெண்கள் மூவர் வந்து விளக்கெடுத்து முருகனை வழிபட்ட பின்புதான் பூசை இடம்பெறுவது நீண்டகால மரபாக இருந்து வருகிறது என்பதையும் அதை இன்றும்


*நீ வெற்றியடைவதை உன்னைத் தவிர வேறு யாராலும் தடுக்க முடியாது.*

கடைப்பிடித்து வருவது போற்றப்படக்கூடிய விடயம். கதிர்காமத்தோடு வேடுவர் சம்பந்தப் பட்டிருப்பதுடன் எவ்வளவோ காலத்திற்குப் பின்பும் அந்தப் பாரம்பரியம் பேணப்படுகிறது.



முருகப்பெருமானது பூசைக்கு முன்பாக அருகில் இருந்த விநாயகராலயத்தில் பூசை இடம்பெற்றது. நாம் அனைவரும் கயிற்றுக்கு வெளியே நின்று அப்பூசையில் பங்குபற்றினோம் அதனைத் தொடர்ந்து ஆலய மடைப்பள்ளியில் இருந்து புத்த விகாரை வாயில்வரை 3அடி அகலமுள்ள நிலப்பாவாடை விரிக்கப்பட்டது. மடைப்பள்ளியில் இருந்து ஒருவர் தலையில் தட்டில் பூசைக்குரிய பொருட்களை எடுத்து வந்து விகாரைக்குள் வைத்து வழிபட்டு விட்டு திரும்பி மடப்பள்ளியை நோக்கி வந்ததும் கீழே விரிக்கப்பட்ட நிலப் பாவாடையைச் சுருட்டி முருகன் ஆலய மூலஸ்தானம் வரை விரிக்கப்பட்டது. விரிக்கப்பட்ட மறுகணமே மடப்பள்ளி வாயிலில்







இரண்டு பேர் ஒரு பட்டாடையை தலைக்கு மேலே பந்தல்போன்று விரித்துப் பிடிக்க கப்புறாளை வாயைச் சீலையால் மூடிக் கட்டியபடி தோளில் நீண்ட தடியில் இரு பக்கமும் முருகனுக்குரிய நைவேத்தியத்தை நிற்பவர்கள் பார்க்காத முறையில் மறைத்து தூக்கியபடி வரவும், ஆலயத்தின் உள்ளே கட்டப்பட்ட மணியோசையோடு பூசை வழிபாடு ஆரம்பமாயிற்று. பிரசாதத்தை கொண்டு வந்தவர் ஆலய வெளி வாசலை அடைந்ததும் மேலே உயர்த்திப் பிடித்த பட்டாடையைக் கீழ் இறக்கி வெளியில் நிற்பவர்கள் பார்க்க முடியாமல் மறைத்தபடி மூலஸ்தானம் வரை கொண்டுபோய் பிரசாதத்துடன் வந்தவர் உள் நுழைந்ததும் திரும்பவும் மடைப் பள்ளி வாயிலை நோக்கிச் சென்று, மேலும் மூவர் தட்டுகளில் முருகனுக்கு நைவேத்தியமாக படைப்பதற்குரிய பிரசாதத்தை எடுத்துக்கொண்டு வந்தார்கள். அவர்கள் வரும்போதும் முன்பு

*தளராத இதயம் உள்ளவனுக்கு இவ்வுலகில் முடியாதது என்று எதுவுமே இல்லை.*

இடம்பெற்ற நடைமுறையினைக் கடைப்பிடித்தார்கள். சிறிது நேரத்தின்பின் உள் நுழைந்தவர்கள் வெளியே வந்ததும் எம்மை மறித்துக் கட்டிய கயிற்றை அவிழ்த்து எம்மை முன்வந்து கும்பிடுமாறு கூறியதற்கிணங்க நாம் அனைவரும் முருகன் வாயிலுக்கு எதிரில் நின்று வழிபட்டோம். உள்ளே என்ன நடந்தது என்று எம்மால் பார்க்கமுடியவில்லை. ஆனால் மூலஸ்தான வாயிலில் கட்டப்பெற்று இருந்த வள்ளி தெய்வானை முருகன் சகிதம் இருந்த திரைச்சீலைக்கு உள்ளிருந்து வந்த கப்புறாளையால் கற்பூரதீபம் காட்டி பூசை வழிபாடு இடம்பெற்றது.




எம்மூர் ஆலயங்களில் நடைபெறுவதுபோல் பலவித தீபங்களைக் காட்டாமல் ஒரு சிறிய தட்டில் வீபூதி குவிக்கப்பட்டு அதன் உச்சியில் எரிந்துகொண்டிருந்த கற்பூர ஒளியைப் பார்க்கும் பொழுதும், அத் தட்டினால் திரைச்சீலையில் உள்ள முருகப்பெருமானுக்கு ஆரத்தி எடுக்கும் பொழுதும் என்னை அறியாமலே ஒரு பரவசம் ஏற்பட்டது. அந்த வகையான பரவச நிலையை நான் ஓரிடமும் பெறவில்லை. உண்மையில் நான் மட்டுமல்ல என்னோடு வந்தவர்கள் எல்லோரும் ஒருவித பரவசநிலையில் இருந்தோம் என்றுதான் சொல்லவேண்டும். அப் பரவசநிலை முதன் முதலாக கதிரகாம வேலவனை வணங்குவதாலும் எனக்கு ஏற்பட்டிருக்கலாம். பூசை நிறைவடைந்ததும் திருநீற்றுத் தட்டத்தில் எரிந்துகொண்டிருந்த தீப ஒளியுடன் வந்த கப்புறாளை வெளியே நின்று வழிபாடியற்றிய அனைவர் நெற்றியிலும் விபூதியைப் பூசிவிட்டார். அதனைத் தொடர்ந்து தீர்த்தமும் எமக்கு வழங்கப்பட்டது. பயபக்தியுடன் அதனைப் பெற்று முருகனை வணங்கியபடி நின்றிருந்தேன்.

அப்பூசையில் எமது குழுவே நின்ற காரணத்தாலும் நாம் அனைவரும் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்திருப்பதாலும், அத்துடன் ஐயாவும் எம்முடன் நிற்பதைப் பார்த்த அவர்கள் எல்லோரையும் உள்ளே அழைத்து வழிபடவிட்டார்கள். அதிகாலைப் பூசைக்கு வந்தபடியால் அர்ச்சனை செய்வதற்குரிய வகையில் வரவில்லை. ஆனாலும் ஐயா, பின்பும் வரவேண்டி வரும்; வரும்போது அர்ச்சனைகளைச் செய்யலாம்; இப்போது நன்றாக வழிபடுங்கள் என்று கூறி எம்மை வழிபட வைத்தார். வழிபட்டு முடிந்ததும் ஆலய உள் வாசலில் தட்டத்தில் வைத்திருந்த பிரசாதத்தை எமக்கு அளித்தார்கள். அது தேவாமிர்தம் என்றுதான் சொல்ல வேண்டும். அவ்வளவு ருசி. ஆலயத்தை விட்டு வெளியில் வந்த அனைவரதும் முகங்களைப் பார்த்த பொழுது எனக்கு ஏற்பட்டதைப் போன்ற பரவசநிலையில் காணப்பட்டனர்.

இப்பூசை நிறைவடைந்தகையோடு அருகிலிருந்த தெய்வானை அம்மன் ஆலயத்தில் பூசை வழிபாடு இடம்பெற்றது. நாம் அனைவரும் அப்பூசை வழிபாட்டில் ஈடுபட்டோம். அந்நேரம் தெய்வானை அம்மன் அன்னதான சபையில் பொறுப்பாக இருந்த திரு தில்லைநாதன் ஐயாவும் அங்கு உதவியாளராக இருந்த அருள் அண்ணாவும் ஐயாவை அணுகி உள்ளே வந்து தேனீர் அருந்துமாறு கூறி எம்மை அனுசரித்ததுடன் மதியம் நடைபெறும் அன்னதானத்தில் கட்டாயம் பங்குபற்ற வேண்டும் எனும் கோரிக்கையை முன் வைத்தனர்.

*முயன்று செயல்களைச் செய்பவனே வாழ்க்கையில் வெற்றி பெறுவான்.*









ஐயாவும் அதனை ஏற்றுக்கொண்டு அனைவருமாக விடுதிக்கு வந்து காலை உணவருந்தினோம். "வள்ளியம்மன் வாசலில் மாவிளக்கு போடத் தேவை யானவற்றை எடுத்து வந்து மாவிளக் குப் போட்டபின்னர், மதியம் உணவை தெய்வானை அம்மன் ஆலயத்தில் முடித்துக்கொண்டு விடுதிக்குத் திரும்பு வோம்" என ஐயா கூறியதுடன் வள்ளி அம்மன் வாசலுக்கு அனைவரையும் அழைத்துச் சென்றார். (தொடரும்...

சுறுசுறுப்புடன் எல்லாவற்றையும் செய்பவனுக்கு எல்லாக் கதவுகளும் திறந்திருக்கும்.

# சந்நிதியான் ஆச்சிரமம் அன்னதானப்பணி

போதுமினி வேண்டாமென்று புகல்வதுநா முணவிற் தானே
ஆதலினா லன்னதான மப்பணியே யுயர்ந்ததென்பர்
தீதில்லா தன்னதான மப்பணியைப் பல்லாண்டிங்கே
நாதனருட் குமரன்பேரால் நன்குபுரிந் திடுவோர் வாழ்க!

தேவர்சிறை மீட்டோன்கந்தன் திருவடியே சரணமென்றும்
மூவுலகு மேத்துகின்ற முருகனவன் துணையேயென்று
யாவருமே துதித்திங்கேத்தும் சந்நிதிவேற் குமரனையன்
காவலவர்க் குண்டேமோகன் திருமடஞ்செய் பணியும் வாழ்க!

நாயன்மா ரறுபத்தேமூன் றதிலிளையான் குடிமாறர்போல்
தூயசில நாயன்மார்கள் செய்தபணி யிதுவேயன்றோ
ஆயபணி யதனைத்தானே யன்பர்திரு மோகன தாஸ்சும்
நேயமுடன் புரிகின்றாரே யவர்நெடுநாள் வாழ்வார் நன்றே.

அன்னதானப் பணியோடிங்கே அருளுரைகள் வெள்ளிதோறும்
பன்னிருகை வேலன்பாதம் பணிந்துவரு வோர்க்கேநல்ல
இன்னிசையு மினிதாய்க்கேட்டு உணவருந்தி மகிழ்ந்தேயேக
சொன்னவருட் பணிகள் மாத சஞ்சிகையும் தொடர்கநன்றே.

**வேறு**

ஞானச் சுடர்விளக்கா மெம்பெருமா னாதிசிவன்
தானே யவுணர்களைச் சங்கரிக்க முருகனென
ஆனதினா லப்பரமன் தன்மகனாங் குமரகுரு
ஞானச் சுடர்மலரைத் தொடரவருள் புரிகுவனே.

இருபத்தோ ராண்டகவை யதைக் கடந்து முன்நடக்கும்
இருநூற்றெழு பத்தைந்தாம் மலர்விரிந் ததுமென்மேலும்
பெருகிவளர்ந் தாயிரமாம் மலர்தொடர விரும்பியிறை
அருளாறு முகப்பெருமா னாசியது மிதற்குண்டன்றோ!

அறப்பணி யிதுவேயென்று அறிந்ததைப் புரிந்துகொண்டு
சிறப்புற நடாத்துகின்ற சீரிய பணியும்நன்றே
மறுப்பதற் கில்லையிந்த மாபணி தொடரவேண்டும்
பிறப்பறுத் தாளுமையன் பேரரு ளிவர்க்குண்டாமே.

– ஆ. விநாயகமூர்த்தி –

பதிவு இல: QD/78/NEWS/2020

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

